பெண்ணியம்

இபதம
வெள்ளி விழா
மலர்



மேத் திங்கள் 27, 28 & 29, 1994

பெண்ணியம்

பதிப்பாளர்கள்

டாக்டர் கதிர் மகாதேவன்

டாக்டர் இரா. மோகன்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தமிழியற் பள்ளி வெளியீடு

1994

துணைவேந்தர்

கர்னல் மே. த. கு. குத்தாலிங்கம் அவர்கள்

25 ஆண்டுகளுக்கு முன்

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றப் பேராளர்கள்

நிகழிடம் : தியாகராசர் கல்லூரி, மதுரை. ஆண்டு : 1969

பதிப்புரை

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெள்ளி விழாக் கருத்தரங்கின் (1969—1994) சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளிவருகின்றது.

கட்டுரையாளர் எழுவர் பெண்ணியம் (Feminism) பற்றிய கட்டுரைகளை இந்நூலில் வழங்கியுள்ளனர். பெண்ணியம் என்ற பொருளில் பொதுநிலையிலும், சிறப்பு நிலையிலும் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இன்றைய இலக்கியத் திறனாய்வுலகில் பெண்ணியச் சிந்தனைகள் மேலோங்கி வருகிற காலமிது. காலஓட்டத்திற்கு ஏற்றவகையில் இந்நூல் வெளிவருகிறது. இதில் பழந்தமிழ் இலக்கியங்களில், நாட்டுப்புற இலக்கியங்களில், இன்றைய புனைகதை இலக்கியங்களில், புதுக்கவிதைகளில் இடைமிடைந்து கிடக்கின்ற பெண்ணியச் சிந்தனைகள் வரன்முறையாகத் தொகுத்தும் பகுத்தும் ஆராயப்பட்டுள்ளன. பெண்ணியக் கல்வித்துறைக்குள் புதிய வரவாக அமைந்திருக்கின்ற இந்நூலைத் தமிழ்கூறு நல்லுலகம் ஏற்றுப் போற்றுமென நம்புகிறோம்.

பதிப்பாளர்கள்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	வாய்மொழி இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள்	— சரசுவதி வேணுகோபால்	1
2.	பெண்ணியமும் பெண்ணியத் திறனாய்வும்	— இரா. காஞ்சனா	14
3.	புதுக்கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள்	— இரா. மோகன்	31
4.	பெண் விடுதலை சமத்துவம் பேசுவதிலா? சமனிலைப்பாடு பேசுவதிலா?	— தமிழண்ணல்	42
5.	பெண்ணியம் அன்றும்—இன்றும்	— கதிர். மகாதேவன்	54
6.	தமிழ் நாவல்களில் பெண்ணியம்	— சு. சந்திரா	66
7.	பெண்ணிய நோக்கில் தாய்மை அல்லது தாய்மைத்துவம்	— செ. சாரதாம்பாள்	80

வாய்மொழி இலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள்

சரசுவதி வேணுகோபால்,

மனித இனத்தின் வரலாறு பொதுவாக ஆடவர்களின் வரலாறாக, அவர்களின் போர்கள், ஆட்சிகள், வீழ்ச்சிகள், எண்ணங்கள் ஆகியவை பற்றியே எழுதப் பெற்று வந்துள்ளது. மனித இனத்தின் ஒரு பாதியாகிய பெண்களைப் பற்றி ஒன்றுமே பெரிதாகச் சொல்லாமல் விடுவது கற்பிப்போராலும் கற்போராலும் உணரப்படக்கூட இல்லை. வரலாற்றில் இத்தகைய பெண் புறக்கணிப்பு, அழிவுக்கும் சமுதாய மதிப்பு-களையும் மாற்றங்களையும் புரிந்து கொள்ள இயலாத தோல்-விக்கும் வழிகோலுகிறது. இத் தோல்வி கல்வி முறையின் ஒரு பகுதி அடைந்த தோல்வி என்றே சொல்லலாம்.[1]

பெண்ணியம் என்பது ''பெண்ணின் நிலையை அதாவது உலகத்தோடு பெண் எத்தகைய தொடர்பு கொண்டிருக்கிறாள், எவ்வாறு அவள் அடக்கு முறைக்கு ஆளாகிறாள், ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்ற நிலை நிலவுதல் போன்ற பல செய்திகளை நன்கு அறிவதும் அவ்-வறிவினை மேற்கூறிய நிலையை மாற்றியமைக்கத் தக்க சக்தியாகப் பயன்படுத்துதலும்''[2] எனலாம்.

உலகில் பொதுவாக ஆடவர் பெண்களைத் தமக்கு இணையாக எண்ணாதிருத்தல் மட்டுமன்றிப் பெண்களுக்குக் கட்டுப்பாடுகள் பல்வேறு வகைகளில் விதித்து வந்திருத்தலையும் காணும் அதே நேரத்தில் பெண்களின் உயர்வுக்காகப் பாடு-

பட்ட சில உயர்ந்த ஆடவரையும் காண்கிறோம். தமிழ் நாட்டில் பாரதியாரும், ஆந்திராவில் கந்துகுரி வீரேசலிங்கம், குடிபதி வெங்கடாசலம் (சலம் என்ற பெயரில் நன்கு அறியப்படுபவர்) போன்றோரும் அத்தகைய நல்லுள்ளம் கொண்டோராய் விளங்கினர்.

இக்கட்டுரை, தமிழ் வாய்மொழி இலக்கியத்தில் காணப்படும் பெண்களின் நிலை, அவர்தம் சிந்தனைகள் குரல்கள் ஆகியவற்றையும் அவற்றில் புதைந்து கிடக்கும் பொருளையும் ஆய்வதை நோக்கமாகக் கொண்டு அமைகிறது. வாய்மொழி இலக்கியத்தின் பல வகைகளான பாடல்கள், கதைகள், கதைப் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் ஆகிய அனைத்தும் பண்பாட்டு வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றைப் பற்றித் தகவல் அளிக்கும் தரவுகள் ஆகும்.

பல பாடல்களும் கதைகளும் மரபுவழிப்பட்ட சிந்தனைகளையும் அடிக்கருத்துக்களையும் தாங்கி நிற்க, சில பாடல்களும், கதைகளும், பெண்களை உடல் அடிப்படையிலும், உளவியல் அடிப்படையிலும் பாதிக்கின்ற சமூக சட்ட திட்டங்களைச் செயல்படுத்துவது பற்றி வினாக்கள் எழுப்புகின்றன. ஆடவரின் சில செயல்கள் குறித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் பாடல்களும் கதைகளும் உள்ளன. இவ்வாய்வில் அத்தகைய சான்றுகள் பயன்படுத்தப்படும்.

மேலை நாட்டுச் சமுதாயத்தில் தேவதைக் கதைகள் எழுத்திலக்கியம் சாதிக்க முடியாத அளவுக்கு மக்களின் அறிவையும் உணர்வையும் மிக ஆழமாக ஊடுருவியுள்ளன. பெண்ணிய ஆய்வாளர்கள், ஆண்வழிச் சமுதாயத்தின் விளைவாக வியத்தகு எச்சங்கள், ஆண் - பெண் இரு பாலர்க்கும் வெவ்வேறான கட்டுப்பாட்டு விதிகள் இருக்கின்றன எனக் கருதுகின்றனர். ஆண்மகன் அல்லது கதைத் தலைவன் வீர தீரச் செயல்களைச் செய்வான், ஆனால் கதைத் தலைவி

மிகச் சாதாரணமான பங்கேற்பவளாகவே இருப்பாள். பேதைமை நிரம்பியவளாக, வீட்டினுள் வளைய வருபவளாகவே காட்சி தருகிறாள்.[3] ஆனால் சில தேவதைக் கதைத் தொகுப்புகளில் காணப்படும் சில கதைகள் பெண்களின் உள்ளே மறைந்து கிடக்கும் வேகம் பொருந்திய பெண் தன்மைகளைப் பற்றிப் பேசுகின்றன. காட்டாக, "கணவனைக் காப்பாற்றுவதற்காக வீட்டிலிருந்து புறப்பட்ட பெண்" என்ற ஜெர்மன் மொழியிலமைந்த தேவதைக் கதையைக் கூறலாம். இத்தகைய கதைகளைக் காண்கையில் வீரமிக்க ஆடவரின் பாத்திரங்களில் நமக்கு ஐயம் கூட ஏற்படுகிறது.[4]

தேவதைக் கதைகளில் பெண்கள் எப்பொழுதும் பதில் சொல்பவராகவும், ஒரு போதும் வினா எழுப்பாதவராகவுமே காணப்படுகின்றனர். அவர்களின் பொதுவான பேதைமை அவர்களை அழவைக்கிறது. ஆண்கள் மௌனமாக இருக்கலாம் ஆனால் பெண்கள் மௌனமாக்கப் பட்டார்கள். இக் கருத்து தமிழ்ச் சமுதாயத்திற்கும் பொருந்தும்.

இந்தியாவின் பல்வேறு மொழிகள் வழங்கும் பல மாநிலங்களிலும் உள்ள வாய்மொழி இலக்கியத்திலும் பெண்ணுக்குச் சிறப்புத் தராமல் அடக்கி வைக்கப் பெற்ற நிலையைப் பரக்கக் காண்கிறோம்.

"ஒரிய மொழியிலமைந்த நாட்டுப்புற இலக்கியத்தில் ஆணாதிக்கமும் அதன் விளைவாகப் பெண் துன்பமும் நிரம்பவே காணப்பட்டாலும் பெண்ணின் எதிர்ப்பும் ஆதிக்கமும் குறைவாக இல்லை" என்கிறார் சியாம் சுந்தர் மகாபத்ரா.[5]

தெலுங்கு நாட்டுப்புற இலக்கியத்தை ஆராயும் ஓர் ஆய்வாளர் "நாட்டுப்புறத் தெய்வங்களைப் பற்றிய கதைகளிலும் தொன்மக் கதைகளிலும் காணப்படும் பெண்கள் மிகுந்த

ஆற்றல் வாய்ந்தவர்களாக, துணிவும் தகுதியும் உடையவர்களாக உள்ளனர். பெண் தெய்வங்கள் பற்றிய கதைகளில் அவை தம்மை இழித்துரைத்த ஆடவரைப் பழிவாங்குதல் காணப்படுகிறது. பாடல்களில் பெண்களின் மனவுணர்வுகளும் பெண்களைப் பற்றி ஆடவர் கொண்டுள்ள எண்ணங்களும் வெளிப்படுகின்றன. ஆண்கள் சொல்லும் கதைகளில் வரும் பெண்கள் உடலின்பம் தருவோராகவும், ஆண்களைச் சார்ந்தே வாழ்வோராகவும், தியாகம் செய்வோராகவுமே காட்டப் பெறுகின்றனர். பெண்கள் கூறும் கதைகளில் காணப்பெறும் பெண்கள் நகைச்சுவையுணர்வு, அறிவாற்றல், சிக்கலைத் தீர்க்கும் அறிவுக் கூர்மை ஆகியனவற்றைக் கொண்டோராய் உள்ளனர். விடுகதைகளிலும் வசைச் சொற்களிலும் பெண்கள் பற்றிய தொடர்கள் அவர்களை அவமதிப்பனவாகவும், அருவருப்பானவையாகவும் காணப்படுகின்றன''[6] எனக் கூறுகிறார்.

கேரள முஸ்லிம்களின் சமயத் திருவிழாக்களில் முஸ்லிம் பெண்களின் பங்கினைப் பற்றிக் கூறும் பிறிதோர் அறிஞர் ''அவர்கள் சமயம் அல்லது சமூகம் சார்ந்த எந்த விழாவிலும் எல்லோர் முன்னிலையிலும் பங்கு கொள்ளவே முடியாது. பெரும்பாலோர் கல்வியறிவு மிகுதியும் அற்றவர்கள், சிலர் எழுத்தறிவே இல்லாதவர்கள். பெண்கள் 15 வயதுக்குள் திருமணம் முடிந்து கணவர் வீட்டுக்குப் போவதற்குத் தக்க முறையில் வளர்க்கப்படுகின்றனர். இக்காரணத்தால் சிறு வயதிலேயே சமையல், வீட்டுவேலை ஆகியவற்றில் நல்ல பயிற்சி அளிக்கப்படுகின்றனர். பலமனைவியர் மணம் (Polygamy) இப்பகுதியில் எங்கும் காணப்படும் ஒன்று. பொதுவாக, பெண்களுக்குத் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வாய்ப்போ அல்லது ஓரளவேனும் பொருளாதாரச் சுதந்திரமோ அளிக்கப்படுவதில்லை''[7] என்று கூறுகிறார்.

தமிழ் நாட்டுப்புறக் கதைகளிலும் பாடல்களிலும் காணப்பெறும் தலைவியர் பல வகையினர். கதைகள் இரு

பாலாராலும் கூறப்படினும் 'பாட்டிகதை' என்றும் கன்னடத்தில் 'அஜ்ஜி கதெ' என்றும் ஆங்கிலத்தில் 'grandma's tale' என்றும் தான் வழங்கப்பெறுகிறது. ஒரு பாட்டி தன் பேரக் குழந்தைகளுக்குச் சொல்லும் கதைகள் வெறும் பொழுது போக்காக மட்டுமன்றி மூத்த தலைமுறையிடமிருந்து இளைய தலைமுறைக்கு அளிக்கப்படுகிற புதை நிலைப் பொருள் கொண்ட பண்பாட்டுச் செய்திகளாகவும் விளங்குகின்றன.

இங்கு மனுவின் கூற்றாகிய "பெண் தன் குழந்தைப் பருவத்தில் தந்தைக்கும், திருமணமான நிலையில் கணவனுக்கும், கணவன் இறந்துவிட்டால் மகன்களுக்கும் அடங்கி நடக்க வேண்டியவள்" என்ற கருத்து நினைவு கூர்தல் தேவைப்படுகிறது. உளவியல் அறிஞர் "உண்மை என்னவெனில் வயதில் முதிர்ந்த இந்தியப் பெண்டிரின் 'உண்மையான வாழ்க்கை'யின் சரியான வருணனை என்பதை விட ஆடவரின் மனதில் இருக்கிற (ஒருகால் எப்பொழுதும் இருந்த) ஆசை நிறைவேற்றம் என்று மேற்கண்ட (மனுவின்) கருத்தினைக் கூறலாம்"[8] என்பர். ஆனால் உளவியல் அறிஞர்களின் கருத்து சாதாரணக் குடிமக்களுக்குத் தெரிய வாய்ப்பில்லை.

பெண் எப்பொழுதும் எந்த வயதிலும் ஆணுக்கு அடங்கியவள் போன்ற கருத்துக்கள் இந்தியப்பெண்களின் மனதிலும் அறிவிலும் விதைக்கப் பெற்று விடுகின்றன. குழந்தைப் பருவத்திலிருந்தே அவர்கள் இவ்வாறு மூளைச் சலவை செய்யப்படுகிறார்கள். எனினும் பெண்களின் பல நாட்டுப்புறப்பாடல்கள் ஆடவர்களை (நெருங்கிய உறவினர், பொதுவாகக் கணவன்) எதிர்த்துப் பாடுவனவாக அமைந்திருக்கக் காண்கிறோம். சமுதாயத்தில் உயர்சாதியினர் என்று குறிக்கப்பெறும் சாதிப்பெண்கள் செயல் வேகமற்றவர்களாக மென்மையும் அடக்கமும் உடையவர்களாகப் பயிற்சி அளிக்கப்

பெற்றுச் சிறு வயதிலிருந்தே வளர்க்கப்பெறுவதால், எதிர்ப்புக் குரல் எழுப்பும் பாடல்களும் கதைகளும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பெண்கள் பாடுவனவாக, சொல்வனவாக இருக்கக் காண்கிறோம்.

காட்டாக, அகமுடையார், கள்ளர், வண்ணார், பள்ளர், பறையர் போன்ற சாதிப்பெண்களின் பாடல்கள் பலவற்றில் கணவனை வெறுத்து எதிர்த்துப் பாடுதலைக் காணலாம். தாயோ தந்தையோ இறந்த நிலையில் ஒப்பாரி பாடும் மகள் தன் கணவனைப் பற்றிப் பலரறியக் குறைகூறியும் மனம் கசந்தும் பாடுகிறாள்.

கீழ்க்காணும் ஒப்பாரிப் பாடல்கள்,[9] அவற்றைப் பாடிய இளம்பெண்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொண்ட ஏமாற்றத்தைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன:

1. "ஆளக் கெணறு வெட்டி — என்னப் பெத்த அம்மா
 அடி வரிச கல்பாவி
ஆளமின்னும் பாக்காம — என்ன
 அமுக்கினீங்க கங்கையில
நீளக் கெணறு வெட்டி — என்னப் பெத்த அம்மா
 நெடுவரிச கல்பாவி
நீளமின்னும் பார்க்காம — என்ன
 நிறுத்தினீங்க கங்கையில"

இப்பாடலில் அமைந்துள்ள குறியீடுகளையும் ஆழ்ந்த பொருள்களையும் காட்டுவேன்.

ஆழக்கிணறு — கொடுமை நிரம்பிய கணவன்
கிணற்றின் ஆழம்— கணவனின் கொடுமை
பெண்ணை நீரில் அமிழ்த்துதல் — பெண்ணைத் தகுதி
 யில்லாத மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்வித்தல்.

இப்பாடல் ஒரு கள்ளர் சாதிப் பெண்ணால் பாடப்பெற்றது.

2. மற்றொரு பாடல் பெண்ணின் அழகையும் அவள் தகுதியில்லாத ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டதையும் கூறும்.

''பதக்குப் பலாமரமாம் — நான்
படமடிக்கும் உத்திரமாம் — என்னைப் பெத்த அப்பா
படமுன்னும் பாக்காம — என்னை
பதறிவெல கூறினீங்க
செதுக்குப் பலாமரமே — நான்
செலையடிக்கும் உத்திரமே — என்னைப் பெத்த அப்பா
செலையின்னும் பாக்காம — என்னை
செதறிவெல கூறினீங்க.'.

பாடலில் அமைந்துள்ள குறியீடுகள்:

மரத்தின் அழகும் உறுதியும் — பெண்ணின் நல்லுறுதி வாய்ந்த உடலழகு
உத்திரமும் வேலைப்பாடும் — அன்புள்ள நல்ல கணவன்
மரத்தை மலிவாக விற்றல் — பெண்ணைத் தகுதியற்றவனுக்கு மணமுடித்தல்
பதறி விலை கூறுதல் — மணமகனைப் பற்றி யாரிடமும் எதுவும் கேளாது அவசரத்தில் மணமுடித்தல்

இப்பாடலை ஓர் அகமுடையார் இனப்பெண்ணும் ஒரு கள்ளர் இனப் பெண்ணும் பாடியுள்ளனர்.

3. இப்பாடலை ஒரு வண்ணார் இனத்துப் பெண் பாடியுள்ளார்.

'மாட்டு வண்டி கட்டி — என்னைப் பெத்த அப்பா
மாயவரம் போயெறங்கி
மாயவரம் சந்தையில — என்னை
மலிஞ்சு வெல கூறினீக
கூட்டு வண்டி கட்டி — என்னைப் பெத்த அப்பா
கும்பகோணம் போயெறங்கி
கும்பகோணம் சந்தையில — என்னை
கொறச்சு வெல கூறினீக''

பாடலில் அமைந்துள்ள குறியீடுகள் :-

மாட்டு வண்டிப் பயணம் — பெண்ணின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தல்

மாயவரம், கும்பகோணம் — மாப்பிள்ளைகளின் பட்டியல் சந்தைகள்

மலிவாக விற்றல் — பெண்ணைத் தகுதியில்லாத ஒருவனுக்கு மணமுடித்தல்

தமிழ்ப் பெண்கள், குறிப்பாகப் பின்தங்கிய சாதியினர் தம் பாடல்களிலும் கதைகளிலும் தாம் எண்ணும் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதில் தயக்கமோ அச்சமோ கொள்வதில்லை. அவர்கள் தங்கள் மூத்தோரிடமிருந்து வாய்மொழி மரபில் பெற்றுக்கொண்ட கதைகள், பாடல்கள் ஆகிய ஊடகங்களின் மூலம் தங்கள் பண்பாட்டை அடுத்த தலைமுறைக்கு அளிக்கின்ற 'கடத்தி' (Transmitter) களாகத் திகழ்ந்து தங்கள் கடமையை நிறைவேற்றுகின்றனர்.

மார்கரெட் எக்னர் பறையர் சாதிப் பெண்களின் ஒப்பாரிப் பாடல்களைப் பற்றிய தம் ஆய்வில் மேற்கண்ட பாடல்களைப் போன்ற பல பாடல்களைச் சேகரித்து ஆய்ந்துள்ளார். பாடல்களின் கருத்துக்கள் பின்வருமாறு : "என்னைப் பெற்ற அப்பா, உங்கள் பத்தடுக்கு மாளிகையின் மேல் வெயிலில் கிடக்கும் உயர்ரக நெல்லை (பெண்) உரிய விலை பகராமல், இந்தப் பாவிகள் (பெற்றோர்) அந்தக் கொடும்பாவிக்கு (கணவன்) விலை பேசி விட்டார்களே! என்னைப் பெற்ற அம்மா, உன் எட்டடுக்கு மாளிகையின் மேல் வெயிலில் காய்கின்ற உயர்ந்த ரக எள்ளுக்கு (பெண்) உரிய விலை பகராமல், அதை உளறுவாய்ச் சுப்பிரமணிக்கு (கணவன்) விலை பேசிவிட்டீர்களே!"

மார்க்ரெட் எக்னர் மேலும் "அந்தப் பாவிகள் (பெற்றோர்) பாவி என்னை இந்தக் கொடும் பாவிக்கு விற்றுவிட்டார்களே

என்று எல்லோரையுமே 'பாவி' என்று கூறுவது நோக்கத் தக்கது. பெற்றோரைப் 'பாவி' என்று கூறுவது அவர்கள் கடமையைச் செவ்வனே செய்யாமையால்; தன்னைப் 'பாவி' என்று கூறுவது கழிவிரக்கத்தினால்; கணவனைப் 'பாவி' என்று கூறுதல் உண்மையாகவே'' என்கிறார். 'எங்களை (என்னை) இப்படி அடிவிலைக்கு விற்றதால் எங்கள் மதிப்பே உலகிற்குத் தெரியாமல் போய்விட்டது' என்பதையும் 'சுப்பிர மணி' என்று தன் கணவன் பெயரைச் சொல்வதையும் அவனிடமிருந்த வெறுப்பு எல்லை மீறிப் போய் விட்டதால் அது நிகழ்ந்தது என்றும் எடுத்துக்காட்டுகிறார்.[10] 'கணவன் பெயரைச் சொல்லுதல் பாவம்' என்பதும் 'கணவன் பெயரைச் சொல்லும் ஒவ்வொரு முறையும் ஒரு பெண்ணின் மங்கல நாளின் நீளம் குறையும்' என்ற நம்பிக்கையும் இந்தியப் பெண்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளன. கணவன் விரைந்து சாவதற்கு எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள். எனவே அவன் பெயரையும் சொல்லமாட்டாள். ஆனால் அதையும் மீறி இந்தப் பெண் தன் கணவன் பெயரை இழிவான அடைமொழியோடு கூறியிருப்பது அவள் எத்தகைய மனத் துயருக்கு ஆளாகியிருப்பாள் என்பதையும், அத் துயரே துணிவைக் கொடுத்திருக்கிறது என்பதையும் நமக்கு உணர்த்தும்.

அடுத்த வகைப் பாடல்களில், குறிப்பாக ஒப்பாரிகளில், பெண்கள் தங்களின் உடல் சுகபோகங்கள் மங்கலத் தன்மை ஆகியவற்றைத் தியாகம் செய்தல், சமுதாயத்தில் விதவைக்கு அளிக்கப்படும் அவமரியாதை ஆகியவற்றைப் பற்றிச் சிந்தனைக் குரிய பல வினாக்களைத் தொடுத்துள்ளனர். மஞ்சள், குங்குமம், மலர்கள், வளையல் ஆகிய அழகு சாதனங்களை இழக்க விரும்பாத இளம் விதவையின் எண்ணங்கள் பல பாடல்களில் வெளிப்படுகின்றன.[11]

(கா-டு)

"இன்னிக்கு

1. அரச்ச மஞ்சக் கொண்டு — நான்
 ஆத்துக்கே போனாலும்
ஆறும் பகையாகும்
 அரச்ச மஞ்ச வீணாகும்
இன்னிக்கு
 குளிக்க மஞ்சக் கொண்டு — நான்
கொளத்துக்கே போனாலும்
 கொளமும் பகையாகும்
குளிக்கு மஞ்ச வீணாகும்

2. பொட்டிடும் நெத்தியில — இன்னிக்கு
 புழுதி யிடலாச்சே
சாந்திடும் நெத்தியில — இன்னிக்கு
 சகதி யிடலாச்சே

3. பொறக்கையிலே வச்ச
 பொட்டை அளிச்சியளே
மலரையிலே வச்ச
 மலரைப் பறிச்சியளே

4. பொறந்தன்னிக்கு போட்ட
 பொன்னுங் கருவளவி — இன்னிக்கு
புண்ணியனார் வாசல்ல
 பொடிப் பொடியாப் போலாமோ?
தரிக்கையிலே போட்ட
 தங்கக் கருவளவி — இன்னிக்கு
தருமனார் வாசல்ல
 தவிடு பொடி யாலாமோ?

இவற்றோடு தாலி, மிஞ்சி ஆகிய மங்கலப் பெண்டிரின் அணிகலன்களைக் கழற்றுவதிலும் கூட வினா எழுகிறது.

5\. தாலி கழட்டி வக்க — எனக்கு
தகுந்த வய சாயிருச்சோ?
மிஞ்சி கழட்டி வக்க — எனக்கு''
மிகுந்த வய சாயிருச்சோ?

இப்பாடல்கள் அனைத்திலும் வாழ்வை மகிழ்ந்து துய்ப்ப தற்கான தங்கள் அடிப்படைப் பிறப்புரிமை பற்றியும் 'விதவை' என்ற முத்திரை இன்றி வாழும் ஆசை பற்றியும் அமைந்த பல வினாக்களை அவற்றைப் பாடிய பெண்கள் எழுப்பியுள் ளனர். அந்த வினாக்கள் சமுதாயத்திற்கு விடுக்கப்பட்டவை.

முதல் பாடலில் இளம் விதவை ஒருத்தியின் மஞ்சள் பூசும் ஆசையும், அதை மறுக்கும் சமுதாயமும் காட்டப்படு கின்றன. ஆறும் குளமும் அவள் மஞ்சள் பூசுவதற்குப் பகையாகின்றன என்பது சமுதாயம் விதவை அழகூட்டும் பொருட்களைப் பயன்படுத்துதல் கூடாது என்று சட்ட திட்டங்கள் வகுத்திருப்பதையே குறிக்கும்.

அடுத்த பாடல் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து தன்னை அழகு செய்து கொள்ளும் அடிப்படை உரிமை கணவன் இறப்பினால் பறிக்கப்பட்டது என்று உணர்த்துகிறது.

அடுத்த இரு பாடல்களிலும் தருக்கரீதியில் அமைந்த சிந்தனை வினாவாக வெளிப்படுகிறது. பிறக்கும் பொழுது வைத்த பொட்டையும் மலரும் பொழுது சூடிய மலரையும் அழிக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்றும்.

பிறந்த பொழுது போட்ட அழகிய வளையல்களைக் கணவன் இறந்த பத்தாம் நாள் ஏன் உடைக்க வேண்டும்? என்றும் கேட்பது விடை அளிக்கவியலாத வினாக்கள். கணவன் வருவதற்கு முன்பே, அதாவது திருமணம் ஆவதற்கு

முன்பே தனக்கிருந்த உரிமைகள் அவன் இறப்பிற்குப் பிறகும் நீடிப்பதில் என்ன தவறு என்று ஒரு விதவை சமுதாயத்தைக் கேட்பது மெல்லிய வினாப் போல் தோன்றினாலும் ஆழமான சிந்தனையின் விளைவு என்பதில் ஐயமில்லை.

ஐந்தாவது பாடலில் இளம் விதவை ஒருத்தி தன் வயது பற்றி ஒரு வினாத் தொடுக்கிறாள். தாலியையும், மிஞ்சியையும் கழற்றி வைக்கத் தகுந்த வயதாகி விட்டதா என்பது குறிப்பாக இன்னொரு திருமணம் செய்து கொள்ளும் ஆவலைக் கூட வெளிப்படுத்துவது போலுள்ளது. இப்பாடலைப் பாடிய பெண் உரையாடலின் பொழுது ஒரு வினா எழுப்பினார். "தன் மனைவி இறக்கும் பொழுது எந்த ஆணாவது தான் அணிந்து கொண்டிருக்கும் எதையாவது கழற்றுகிறானா?" என்பது தான் அவ்வினா.

நம் நாட்டுச் சிற்றூர்களில் வாழும் பெண்டிர் பலர் கல்வியறிவில்லாதவராக இருப்பினும் அவர்களின் சிந்தனைகள் அறிவுப் பூர்வமாகவும் தருக்க ரீதியிலும் அமைந்திருப்பதை அவர்கள் படைக்கும் வாய்மொழி இலக்கியங்கள் வாயிலாக அறியலாம். அவர்களில் பலர் மரபுவழிச் சிந்தனையுடையோர் தாம்; எனினும் பெண்கள் மட்டுமே பாடும் இலக்கிய வகைகளில் குறிப்பாக ஒப்பாரிப் பாடல்களில் சமுதாயத்தைக் கேட்பது போன்ற பல எதிர்ப்புக் குரல்கள் ஒலிக்கக் காண்கிறோம். அவை சிலபொழுது குறியீட்டு நிலையில் மறைமுகமாக அமைகின்றன. உரையாடல்களின் பொழுது வெளிப்படையாக எழுகின்றன. விடுதலையும் நீதியும் வேண்டி நிற்கும் பேரவா சமூகம் விதித்த விதிமுறைகளையும் மீறி வாய்மொழி இலக்கியங்களில் வெளிப்படுகிறது.

அடிக்குறிப்புகள்

1. Balasubramanian, P. "Feminism - Indian perspective: Tamil creative response", Seminar on Feminism, Telugu University, Hyderabad, March 1994.

2. Ibid.

3. Bottigheimer, Ruth B. (Ed.), "Fairy tales and society: Illusion, Allusion and Paradigm, University of Pennsylvania press, Philadelphia, 1986, p. 5.

4. Ibid.

5. Mohapatra, S.S. "The Domain of Female dominance as reflected in Oriya Folk Literature" Seminar on Feminism — Synopses, Telugu University, Hyderabad, March 1994, p. 50.

6. (Premalatha, R. "Telugu Folk Literature — a Feminist view") Ibid. pp. 54-55.

7. (Francis, Reena, P. "Indian Folklore and Feminism") Ibid. p. 54.

8. Kakar, Sudhir, "The inner world" (II edition) Oxford University press, Delhi, 1989, p. 118.

9. Venugopal, Saraswathi, "Forms of protest as found in Tamil oral literature," paper presented in the National seminar on "Folklore, Literature and History", organized by the Institute of Asian Studies, Madras & CIIL, Mysore in 1990.

10. Blackburn, Stuart, H. & Ramanujan, A.K. (Eds), "Another Harmony", University of California Press, Berkeley / Los Angeles / London, 1986, pp. 311-12.

11. சரசுவதி, வி., "சாதி அடிப்படைத் தாலாட்டு ஒப்பாரிப் பாடல்களில் ஒற்றுமை வேற்றுமைகள்", முனைவர் பட்ட ஆய்வு, 1979, பின்னிணைப்பு.

'பெண்ணியமும் பெண்ணியத் திறனாய்வும்'

இரா. காஞ்சனா,

பெண்ணியம் என்ற கருத்தமைவு தனிக்கோட்பாடாக உருவான கால கட்டத்திலிருந்து இன்றுவரை பல்வேறு பார்வைகளையும் நடைமுறைகளையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இப் பார்வைகள் வெவ்வேறு நாட்டுக் கலாச்சாரம், வரலாற்றுப் பின்னணி, அவ்வந் நாட்டுச் சமுதாயத்தில் பெண்கள் பெற்றுள்ள இடம், கல்வி. இன, வர்க்க வேறுபாடுகள் போன்ற பலவற்றால் மாற்றம் அடைந்துள்ளன.

பொதுவாகப் பெண்களின் அடிமைப்பட்ட நசுக்கப்பட்ட நிலை, அவற்றிலிருந்து அவர்கள் விடுதலை அடைதல், பெண்களின் முன்னேற்றம், சமுதாயம் படைத்து வந்திருக்கும் பெண் பிம்பத்தை உடைத்து மறு உருவாக்கம் செய்தல், பெண்களின் முன்னேற்றம் ஆகிய கருத்துகளை முன்னிறுத்திய பெண் விடுதலையியக்கத்தின் செயல்பாடுகளே பின்னர் 'பெண்ணியம்' என்ற கருத்து வளர்ச்சிக்கு வழிகோலியது எனலாம்.

''சமூகத்திலும் வேலைத்தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை, மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும், இந்நிலை மாறுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் — பெண்ணியத்தின் பரந்துபட்ட வரைமுறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம்'' என்பார் தேவதத்தா.[1]

பெண்களின் அடிமைப்பட்ட நிலைக்கு அடிப்படைக் காரணம் ஆண் ஆதிக்கமே என்றும், பாலின ரீதியாக ஒடுக்கு முறையை வாழ்வின் அனைத்து நிலைகளிலும் - சமூகம், அரசியல், குடும்பம், பொருளாதாரம், கலை போன்றவற்றில் - இனம் கண்டு அவற்றிற்கு எதிராக இயங்க பெண்கள் தம்முள் ஓரின ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய அவசியத்தை உணரச் செய்வதும் பெண்ணியத்தின் நோக்கங்களாகும்.

இந்தியாவில் பெண் உரிமை, பெண் விடுதலை, பெண் கல்வி, சமத்துவம் என்பன பற்றிய விழிப்புணர்வு இந்தியச் சுதந்திரத்திற்கு முற்பட்ட கால கட்டத்திலிருந்தே சமூகச் சீர்திருத்தவாதிகளாலும், தேசியத் தலைவர்களாலும் மக்களிடையே தூண்டப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்திற்கும் இயக்கங்களிலும் போராட்டங்களிலும் அவர்களது பங்களிப்பைப் பெறுவதற்கும் முயன்றவர்கள் பலர். ஆயின், இன்று மேலை-நாடுகளில் பெண்ணியம் என்ற கருத்தமைவு உருவானதைப் போல இங்கு உருவாகவில்லை எனலாம்.

ஆணாதிக்கச் சமூகத்தில், ஆண்கள் பெண்களை ஆள்வது என்பது பாலியல் ரீதியான இயற்கையாக அமைந்த பிறப்-புரிமை என்ற அடிப்படைத்தளத்தில், ('the birth right priority whereby male rules females' - Millet, Sexual politics, p.25) இயங்கும் அனைத்து அதிகாரப் பிரிவுகளிலும் ஆண்களின் கை ஓங்கியுள்ளது. அரசியல் ஆதிக்கமும் அதி-காரமும் கூட இந்த அடக்குமுறையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. பெண்களை ஆண்கள் அடிமை கொள்வது ஒருவகை அதிகாரமெனில் பிறிதொரு வகை அதிகாரத்தில் வலிய ஆண்கள் தம கீழுள்ள ஆண்களை ஆள்கின்றனர்.

இவ்வதிகாரத்தை அரசாங்கம் செயல்படுத்தச் சமூக அமைப்புகள்/சமூகத்தின் ஓர் அலகான குடும்ப அமைப்புகள் (மறைமுகமாக மதங்களும்) பயன்படுத்தப்படுகின்றன. இங்-

கெல்லாம் ஆண்/பெண் பாலின வேறுபாடுகள் பற்றிய கருத்-துருவாக்கங்கள் மனோநிலை (**Temperament**), பாத்திரம் (**Role**), அந்தஸ்து (**Status**) என்ற மூன்று அணுகுமுறை-களினால் உருவாக்கப்படுகின்றன.

சமூகத்தில், குடும்பத்தில், பொருளாதாரத்தில், அரசியலில் ஆணின் அந்தஸ்து மேலானதாகவும், பெண்ணின் அந்தஸ்து தாழ்ந்தும் அமைக்கப்பட்டு, ஆணாதிக்கச் சமூக நபர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இந்த ஏற்புக்கு அடிப்படை யாகப் பெண்களின் மனோநிலையிலேயே வேறுபாட்டை ஏற்படுத்தி அதன் மூலம் ஆண்/பெண் இரு பாலினத்தாருக்கும் இன்னின்ன குணநலன்கள், ஆளுமைத் திறன்கள் உள்ளன என்று ஒத்துக்கொண்டு, அதற்கேற்ப சமூக/குடும்பப் பாத்-திரங்களை/இடங்களை உருவாக்கிக் கொள்ளப்பயிற்றுவிக்கிறது. ஆணாதிக்கம் விரும்பும் தேவைகள், விழுமங்கள் இவைகளுக்கு ஏற்ப இம்மனோநிலைகள் உருவாக்கப்படுகின்றன.

ஆண் எனில், அவன் அனைத்திலும் செயல்திறன் படைத்-தவனாக, பகுத்தறிதல், மேலாண்மை செய்தல், அறிவு, வலிமை, வீரம், பேராற்றல், படைப்பாற்றல், சுயசிந்தனை போன்ற வல்லமைகள் உடையவனாகவும், பெண் எனில், மென்மை, அமைதி, அறியாமை, (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு) கீழ்ப்படிதல், எதிர்ப்புணர்ச்சியின்மை, கற்பு, அதீத உணர்ச்சி வெளிப்பாடு போன்றவைகளைக் கொண்டவளாக ஆண்டாண்டுக் காலமாகக் கற்பிக்கப்படுவதால், தமக்கு இரண்டாம் தரமான பாத்திரங்களே சமூகம் அளித்தாலும் அதை ஏற்கும் மனநிலை-யைப் பெண்களிடம் ஏற்படுத்திவிடுகின்றன.

பெண்ணிய நோக்கில் இவற்றைக் கண்ட வர்ஜீனியா வுல்ஃப் - "இவ்வாறான வரலாற்றுப் பதிவுகள் இன்னமும் நம்மிடையே (பெண்களிடையே) மீந்திருப்பதை நான் மறுக்க-

வில்லை. ஆனால் அவற்றையே மீண்டும் தொடர்வதால் அவற்றிற்கு மேலும் வலுவூட்டுவதைத்தான் நான் மறுக்கிறேன்'' என்கிறார்[2].

பெண்ணியம் பல கிளைகளாக வளர்ச்சியுற்ற நிலையில் எது பெண்ணிய எழுத்து (Feminist writing) என்ற கேள்வி எழுந்தது. அதன் அடிப்படையில் பெண்ணியத் திறனாய்வு பற்றிய சில கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

பெண் விடுதலை இயக்கத்தின் அடிப்படையில் பிறந்த பெண்ணியத் திறனாய்வை 'அகப் பரப்புத் திறனாய்வு' (Perspective Criticism) என்கின்றனர். இது கீழ்வரும் நோக்கங்களுள் ஒன்றிரண்டையாவது நிறைவேற்றுவதாகப் படைக்கப்பட்டனவற்றையே பெண்ணிய எழுத்து என ஏற்கின்றது:

1. பெண்களுக்கான ஒரு நிறுவன அமைப்பாக, அவர்கள் தம் குறைகளை முறையிடும், குறைகளை எடுத்துக்கூறி, தீர்வு காண்பதற்கான பொதுச் சபையாக, அரங்கமாகத் திகழவேண்டும் ஒரு படைப்பு.

2. ஆணாதிக்கம் என்ற நிலையை மாற்றி பண்பட்ட ஆணும் பெண்ணும் ஒருங்கிணைந்த நிலையை அடைய வழிகோல வேண்டும். சமுதாயங்களின் விழுமங்களை நிர்ணயிப்பதில் மனிதாபிமானத்துடன், பெண்களையும் தனி உயிரியாகக் கருதி, பெண்களை நல்ல மாற்றுப் பார்வையுடன் அணுக மக்களுக்குக் கற்பித்தலையே 'cultured androgyny' எனலாம். ஆண்களின் ஈடுபாடுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும், தேவைகளுக்கும் முக்கியத்துவம் தந்து விழுமங்களைச் சமூகம் நிர்ணயித்த நிலையை மாற்றி பெண்ணின் நிலைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு இருபாலின

இணைவாகச் சமூகத்தை மாற்றுவதாக அமையக்கூடிய கருத்துக்களைக் கொண்டதாகப் படைப்புகள் விளங்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தவர் வர்ஜீனியா வுல்ஃப். இதை ஓர் இலக்கியக் கலைச்சொல்லாக அறி-முகப்படுத்தியவர் கரோலின் ஹெயில்ப்ரன் (Towards a recognition of androgyny, New York, 1973).

3. முன்மாதிரியாக அமையக்கூடிய பெண் விடுதலையும் முன்னேற்றமும் பெற்ற, பெண்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டக்கூடிய பாத்திரப்படைப்பு இடம்பெற வேண்டும். பெண் மையச் சிக்கல்களில் தீர்வு காண்பதற்கு முன்னு-தாரணமாக அப்பாத்திரம் வழிகாட்டுவதாய் அமைய-வேண்டும்.

4. பெண்ணினத்திடையே 'நாம் ஓரினம்' என்ற ஒற்றுமை உணர்வை உண்டாக்குவதாய் அமைய வேண்டும்.

5. பெண்களிடையே சகோதரித்துவத்தை உண்டாக்குவதாய், அதிகப்படுத்துவதாய் அமைய வேண்டும்.

6. பெண்களிடையே அவர்களது நிலை — அவர்கள் ஒடுக்க-பட்ட வரலாறு — அதிலிருந்து விடுபட்டு முன்னேற-வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதாய் — பெண்ணியக் கருத்துகளை வலியுறுத்துவதாய் அமைய வேண்டும்.

7. பெண்ணின் ஆளுமை வளர்ச்சி பற்றிய ஆழ்ந்த பார்வையை நல்க வேண்டும்.

8. சுயமேனிலையாக்கம் மேற்கொள்ளப் பெண்களைத் தூண்டு-வதாக அமைய வேண்டும்.

9. சக மனிதருடன் — சக மனுஷியுடனான தொடர்பை அதிகப்படுத்துவதாக அமையவேண்டும்.

10. பெண் தன்னுடைய அனுபவங்களை உண்மையாக — நம்பகத்தன்மையுடன் கூறுவதாக அமைய வேண்டும். அந்த அனுபவங்களின் வெளிப்பாடு பிறருக்கு வழிகாட்டு-வதாக அமையவேண்டும்.

அதே சமயத்தில் ஜீலியா கிறிஸ்தபர் போன்ற திற-னாய்வாளர்கள் கூறியதுபோல 'ஹிஸ்ட்ரியாக்களின் சொல்-லாடல்' என்று தாக்கப்படுவதாக அமையக்கூடாது. பெண்கள் தங்களது புதிய பிம்பங்களை உருவாக்கிக்கொள்ள முனையும் பொழுது ஆணாதிக்கச் சமூகத்தின் விதிமுறைகளை எதிர்க்க வேண்டி உள்ளது. தன்னை நிலைப்படுத்திக்கொள்ள முயலும் பொழுது ''முதலாளித்துவ ஆண்வழிச் சமூகத்தின் கீழ் ஒரே சமயத்தில் உடன்படல் / மறுத்தல் என்ற பெண்களின் பாலியல் அமைப்பே ஹிஸ்ட்டீரியாவாகும். பெண் பெண்ணாக இருப்ப-தற்கும், பெண்மையை மறுப்பதற்கும் என்கிற இரு நிலைகளை ஒரே சமயத்தில் மேற்கொள்ள முயலும் ஒரு பெண் ஹிஸ்ட்-டீரியாக்காகவோ, பைத்தியமாகவோ மாறுகிறாள்.

சுய மேனிலையாக்கம் (Self-actualisation) கொள்ள முடியும் முனைப்பான பெண்ணாக அடையாளம் காட்டிக்-கொள்ளும் ஒரு கதைத் தலைவி, பிற ஆண்களைச் சார்ந்து நிற்காத, தன்னளவில் நிறைவு கொண்ட ஒரு பாத்திரமாக, பிற பெண்கள் பின்பற்றக்கூடிய முன்னோடியாக படைக்கப் படு தே முக்கியம். அதுவும் குறிப்பாக இளம் குழந்தை-களுக்கான படைப்புகளில் இது மிகவும் அவசியம். பெண்/ஆண் என்ற பிரிவுகளுக்கு ஏற்ப ஆளுமைத்தன்மைகளை மாற்றிக் காட்டுவது தவிர்க்கப்பட வேண்டும்.

11. பெண் பாத்திரப்படைப்பு வெறும் படுக்கையறைப் பதுமை-யாக அமைந்துவிடக் கூடாது.

12. பெண்ணியக் கருத்துகளை வலியுறுத்தும் படைப்புகளா-னாலும அவை கருத்துவிளக்க நாவல்களாக மட்டும் அமைந்துவிடக் கூடாது. ஓர் ஓவியத்தின் பரிமாணங்-

களை ஓர் ஒளிவிளக்கு அதிகப்படுத்திக் காட்டுவது போல கதை பெண்ணியக் கருத்துகளுக்கு வலுவூட்டுவதாக அமைய வேண்டுமே தவிர, பெண்ணியக் கருத்துகளே பாடுபொருளாக அமைந்துவிடக்கூடாது. அது கலையம்சத்துடன் திகழாது எனக் கருதுகிறார் எலன் மோர்கன் (Ellan Morgan).[4] ஒரு பெண்ணிய எழுத்தாளி, பெண்ணிய இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் கதையை எழுதும் போதோ அல்லது ஒரு பெண் கருச்சிதைவுக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்ளுவதாகப் படைக்கும் பொழுதோ அவளுக்கு ஏற்படக்கூடிய உணர்வுகளை, அனுபவங்களைத் திறனாய்வாளர்களின் பாராட்டையும் பெறும்படியாக, மரியாதைக்குட்பட்ட எல்லையிலேயே தரவேண்டும் என்கிறார் ஜாய்ஸ் நோவர்.[5]

பெண்ணியப் புனைகதைகள் அரசியல் பகுப்பாய்வையும் கொண்டிருக்க வேண்டும் என எந்தப் பெண்ணியத் திறனாய்வும் கூறவில்லை. ஆசிரியை பெண்களின் சிக்கல்களை விளக்குவதோடு சில முடிவுகளையும், பிரச்சனைகளை நீக்குவதற்கான சில வழிமுறைகளையும் கூறலாம். ஆயின், கதை நாயகியே அவ்வழிமுறைகளைப் பின்பற்றித் தன் சிக்கலை நீக்கியதாகப் படைக்கப்படும் பொழுதுதான் அது ஒரு முன்மாதிரியான பாத்திரப்படைப்பாகும். பிற விழிப்புணர்வுகளை வாசகரிடமே விட்டு விடலாம். வாசகிகள் பாத்திரங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தம் வாழ்க்கைச் சிக்கல்களுடன் ஒப்பிட்டுக் கண்டு, இரண்டிற்கும் இடையேயான ஒற்றுமைகளைக் காரணங்களின் அடிப்படையில் விளங்கிக்கொள்வதையும், அதற்குச் சரியான எந்த அரசியல் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என முடிவு செய்வதையும் வாசகிகளிடமே விட்டுவிடலாம். இவ்வாறு நேரடியாக விழிப்புணர்வை மேம்படுத்துவதுதான் அமெரிக்கப் பெண் விடுதலையியக்கத்தின் அடிப்படையான குறிக்கோள் என்கிறார் செர்ரி ரெஜிஸ்ட்டர் (Cheri Register : American Feminist Literary Criticism :

A Bibliographical Introduction, p.173 ; Feminist Literary Theory : A Reader, Ed. Mary Eagleton).

எரிக்கா ஜோன்ஸ் இன்றைய பெண்ணிய எழுத்துகளைப் பற்றிய தம் அதிருப்தியைத் தெரிவிக்கும் பொழுது இப்படைப்பாளிகள் தம் புனைகதைகளில் பெண்கள் எவ்வித உதவியும் பெற இயலாத இரைகளாகவே சித்திரிக்கின்றனர் என்கிறார். இவ்வாறு நசுக்கப்பட்ட பெண்கள் இறுதியில் மனமுறிவு பெற்றவர்களாகவோ தற்கொலை செய்துகொள்பவர்களாகவோ இல்லாமல், தனியே அனைத்தையும் துறந்து தன்னைத்தானே அந்நியப்படுத்திக்கொண்டு தன்னையும் வெறுத்து பிறரையும் வெறுக்கும் நிலையில் நகரக்கூடச் சக்தியில்லாதவர்களாகவோ படைக்கக் கூடாது எனவும், ஏதேனும் ஒரு விதத்தில் சமாளித்து எழுந்து தன்னை ஒழிக்க வரும் சக்தியை எதிர்த்து நிற்பவர்களாகப் படைக்கப்பட வேண்டும் என்பர், பெண்ணியத் திறனாய்வாளர். இவ்வாறு இவர்கள் தம்மை நிலைப்படுத்திக் கொள்ளப் பிற பெண்களும் உதவுவதாகவும் காட்டப்படலாம். இவ்வாறான படைப்புகள் ஒரு புதிய சமுதாயத்தை, பெண்களின் மிகச்சிறந்த பண்புநலன்களை அடிப்படை விழுமங்களாகக் கொண்டு, சில தெரிந்தெடுத்த ஆண்மை விழுமங்களுடன் சேர்ந்த சமுதாய வரிசை முறையை உருவாக்கக் கூடும்.

அமெரிக்கப் பெண்கள் விடுதலை இயக்கம் பெண்களிடையே பெண்கள் அனைவரும் ‘ஓரினம்’ என்ற எண்ணத்தையும் சகோதரித்துவத்தையும் வலிமைப்படுத்த முனைந்துள்ளது. தனிமைப்பட்டுப் போய் பிற பெண்களையும் வெறுக்கும் நிலை, போட்டிமனப்பான்மையுடன் (ஆண்களைத் கவர்வதில்) ஒருவரையொருவர் வெறுப்பதைத் தவிர்க்க, பெண்கள் தாழ்வு மனப்பான்மையில் இருந்து விடுபட இந்த சகோதரித்துவம் வழிகாட்டும் என எண்ணுகிறது.

இக்கருத்துகளுக்கு அரண் செய்வதாகப் பெண்ணிய எழுத்து அமையவேண்டும்.

பயனுடைய ஒரு வழக்காடு மன்றமாகப் படைப்பிலக்கியம் அமையும் பொழுது அது உண்மையான சுய வெளிப்பாடாக இருக்கவேண்டும்; பெண்ணியப் பண்பாட்டிற்கு மறுதலையான, ஏற்சனவே நிலவும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட எழுத்தாக அது அமையக்கூடாது.

வெரீஜீனியா வுல்ஃப் பெண் எழுத்தாளர்களுக்குக் கூறும் முதல் அறிவுரை இதுதான்:

"உன் உண்மையான ஆத்மாவை வெளிப்படுத்து; அதன் சிறப்புகளோடும் மேன்மைகளோடும் மட்டுமின்றி அதன் சிறுமைகளோடும் இருண்ட பகுதிகளோடும், அழுக்குகளுடனும், பெருந்தன்மைகளுடனும்; நீ அழகு என்று கருதுவது எதை? அதை எழுது; நீ எவ்வளவு எளிமையாக இருக்கிறாயோ அதை எழுது; நேர்மையாக - உண்மையாக - இருப்பதை எழுது."

எல்லன் மோர்கன் பெண்ணிய விமர்சனம் என்பது பெண்ணிய படைப்புகளைத் தூண்டுவதாக விளங்கவேண்டும்; பெண்களின் உண்மையான அனுபவங்களைக் கூறும் படைப்புகளை - இந்த அனுபவங்களை ஒரு ஆணின் நோக்கு நிலையிலிருந்து வடிகட்டாமல், ஆணாதிக்கச் சமூகம் வகுத்துள்ள தர நிர்ணயங்களுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளாமல் அப்படியே சொந்த அனுபவங்களை வெளிப்படுத்தும் படைப்புகளை உருவாக்குவதே பெண்ணியத் திறனாய்வு என்கிறார் இவர்.

தமிழில் பெண்ணிய எழுத்து என்பது நான்கு நிலைகளில் காணப்படுகின்றது.

1. பெண்களின் இன்றைய அவலநிலை சமூக, பொருளாதார, அரசியல் மேலாதிக்கத்தினால் ஒடுக்கப்பட்ட நிலை எவ்வாறு உள்ளது எனப் படம்பிடித்துக் காட்டுவது.

2. ஆய்வுக் கண்ணோட்டத்துடன் பெண்களின் நிலைகளுக்-கான காரணங்களை அலசுவதாகவும், பெண்ணியச் சிக்கல்களுக்கான காரணங்களை விளக்குவதாகவும் அமைபவை.

3. இந்நிலைகளில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கோடிகாட்டுவதாக, சிலநேரங்களில் முன்னுதாரணமான பாத்திரப் படைப்புகளை அளிப்பதாக அமைபவை.

4. அதற்கான மனப்பான்மைகளைப் பெண்களிடம் ஏற்படுத்த, சமூகத்தை - சமூக அங்கத்தினர்களான மக்களை இந்த மாறிய மனப்பான்மைகளை ஏற்கச் செய்ய முயலுகின்ற சில படைப்புகள்.

பெண்ணியத் திறனாய்விற்கான ஒரு விமர்சனமும் பெண்களிடமிருந்தே மேல் நாடுகளில் எழுந்துள்ளது. எவ்வாறு நாம் வாழவேண்டும் என்றெல்லாம் கூறி 'பிறர் நம்மை அடிமைப்படுத்திய நிலைகளை இவ்வளவு நாளும் கூறி வந்தோம். இப்போது நாமே மற்றவர்களுக்கான நன்னடத்தை நூலை எழுத உதவி புரிய முயலுகிறோம்' என்று கூறிவிட்டு மேற்கூறிய வகைகளைப் போல அவர்களும் பெண்ணியக் காதக் கதைகளை இரண்டு விதமாகப் பிரித்துக் காட்டு-கின்றனர்:

1. பெண்களின் அனுபவங்களின் பதிவுகளாக வருபவை;

2. பெண்ணிய நோக்கில் விரிந்த பார்வையை நல்குபவை. (Feministic Vision)

அனுபவப் பதிவுகள் பிற பெண்களுக்கு வழிகாட்டுபவை களாக அமைய வேண்டும். அதுவும் குறிப்பாக வளரும் நம் பெண்களுக்கு அவர்களது சிறுசிறு உணர்ச்சிக் குழப்பங்கள்,

அதற்கு ஏற்ப மாறுபாடுகளுக்கு உட்படும் உடல் வேறுபாடுகள், பருவ மாறுபாடுகள், மாறும் உறவுகள், பாலுறவு பற்றிய அச்சம், கனவுகள் இவற்றைப் பற்றி எழுதினால்தான் அந்தப் பருவத்துக்கே உரிய அச்சங்களை நீக்கப் பயன்படும். ஆண்களுக்குப் பலவித வெளி உறவுகள், அன்னியோன்னியமான பேச்சுகள், பலவித தொடர்புச் சாதனங்கள் போன்றவை இத்தகைய ஐயங்களைப் போக்கிக் கொள்ள உதவுகின்றன. தாங்கள் இந்த வயதுக்கே உரிய சாதாரண குணங்களுடன்தான் உள்ளோம் என அவர்களைச் சமனப்படுத்துகின்றன. அத்துடன் உண்மையில் ஆண்மையும் முதிர்ச்சியும் அடைவதற்கான முன் தேவைகள் இவை என்பதை அறிய வைக்கின்றன. எனவே, இத்தகு வழிகாட்டல்களை வளரிளம் பெண்களும் பெற இப்பெண்ணிய புனைகதைகள் உதவ வேண்டும் என்கிறார் சூசன் காப்பிள்மேன் (Susan Koppleman Cornillon, 'The Fiction of Fiction'' in 'Images of Women in Fiction, Ed. by Koppleman).

எலைன் ஷோவால்ட்டர் பெண்ணியத் திறனாய்வில் இரண்டு அணுகுமுறைகளைத் தருகிறார்:

(1) பெண்ணியத் திறனாய்வு அல்லது பெண்ணிய வாதிகளை வாசகர்களாகக் கொள்ளுதல் (Feminist Critique or Feminist Reading) பெண்கள் இலக்கியங்களில் காலங்தோறும் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளனர், அவர்களது இன்றைய பிம்பம் என்ன? எவ்வாறு அவர்கள் தவறாக ஆண் மைய நோக்குடன் பிரதிநிதித்துவப்படுத்தப் படுகின்றனர்? அதில் எவ்வாறு ஒரே வகை மாதிரிகளைக் காண முடிகிறது? எனக் காண்பது இந்தத் திறனாய்வு. இது பெண்ணை ஒரு குறிப்பானாகக் கொண்டு ஆராய்கிறது.

(2) பெண்ணிய எழுத்து என்றால் என்ன? - அதை எழுதுபவர் பெண்ணிய எழுத்தாளரா? அல்லது அனைத்துப் பெண் எழுத்தாளர்களும் பெண்ணிய நோக்குடையவர்களா? ஆண்கள்

பெண்ணியவாதியாக முடியாதா? என ஆராய்வது இரண்டாவது அணுகுமுறை. இங்குப் பெண்ணிய எழுத்துகளின் அடிக்-கருத்துக்கள், தலைமைப் புனைவுக் கூறுகள், தொன்மங்கள், வகைமைகள், அமைப்புகள் என்பன எவ்வாறு அமைந்துள்ளன எனக் காண்பது. இவ்வாறு பார்க்கும்பொழுது உள இயல் அடிப்-படையில் காண்பதைப் பெண்ணிமைய (Feminity) அல்லது Gyno Centric விமர்சனம் என்கிறார் எலைன் ஷோ வால்ட்டர். (எதிர்வு, சிவகுமார், மேலும், மே 1992). இங்குப் பெண்ணின் உடல் மையமாக்கப்படுகிறது. வெறும் சம உரிமைப் போராட்டமாக (அரசியல் ஆதாயம் போல) அமையும் பெண்ணியத்தை எதிர்க்கிறது இம்முறை. பெண்களை எப்பொழுதுமே ஆற்றல் அற்ற மறுபாதியாக—ஆணின் வேறு பகுதியாகக் (The other) கருதப்படும் நிலையிலிருந்து விடுவித்து ஆணாதிக்க கண்ணோட்டங்களைத் தகர்க்கவேண்டும் என்கிறது.

இந்த வெளிச்சத்தில் அனுராதா ரமணனின் 'கதாநாயகிகளின் கதை''யைக் காணலாம்,

இது ஒரு சிறுகதைத் தொகுப்பு. ஒவ்வொரு கதையிலும் மேலே குறிப்பிடப்பட்ட பெண்ணியத் திறனாய்வு நோக்கு-களில் ஒன்றேனும் இடம் பெற்றுள்ளது எனலாம்.

பெண்ணிய நோக்குகளில் ஒன்றாகக் கற்பு என்ற கோட்பாடு இரு பாலினத்தார்க்கும் பொதுவே என்ற கருத்தை விளக்கும் கதையில் முழுக்க முழுக்க ஒழுக்கம், கற்பு என்ற விழுமங்கள் ஆண் மைய நோக்கில் எவ்வாறு மீறப்படுகின்றன. மீறுவதையும் சமூகம் எவ்வாறு (அவர்களது மனைவியரே) ஏற்றுக் கொண்டு செல்கிறது என்பதைப் புரியவைக்கிறது. இவ்வாறுதான் உள்ளது இன்றைய ஒழுக்க நிலை, என்று எடுத்துக்காட்டுவது மட்டும் பெண்ணியம் ஆகி விடாது. சிக்கலைத் தீர்க்க அந்தக் கதைநாயகியே வழியும் காட்டுவதாய் அமையவேண்டும் என்ற கூற்றுக்கு ஏற்ப 'ஜானகி'

தன் பிள்ளையின் ஒழுக்கக்கேடான செயலுக்கு வெட்கி, மறுகி அத்தகு பிள்ளையைப் பெற்ற தன் வயிற்றில் சூடு போட்டுக் கொள்கிறாள். இந்தச் சூடு அந்தப் பிள்ளையின் மனத்தில் ஆறாத வடுவை உண்டாக்கி அவனைத் திருத்தக்கூடும் என்று வாசகர்களை யூகிக்க விடுகிறார் ஆசிரியை.

'சிநேகிதி' - எனும் சிறுகதையிலும் உண்மையான சிநேகம் ஆணுக்கும் ஆணுக்கும், பெண்ணுக்கும் பெண்ணுக்கும்தான் இருக்க இயலுமா? ஏன் அது ஆழமான நட்பாக ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலவ முடியாதா? என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. மேலும் பெண்கள் தாம் அனைவரும் ஓரினம் என உணராது போட்டி மனப்பான்மையுடன் சந்தேக மனப்பான்மையும் கொள்வதையும் கதைப் பின்னலினூடே சொல்லிச் செல்கிறார் ஆசிரியை. ஒரு பெண், பொருளாதாரச் சுதந்திரமற்று இருக்கும்பொழுது தன் கணவனையும், பிள்ளையையும் சார்ந்தே இருக்க வேண்டிய சூழலில் குடும்பத்தின் மூத்த மகன் தாயையும் தங்கை தம்பிகளையும் அநாதரவாக விட்ட நிலையில், அப்பெண் தன் முன் எதிர்ப்பட்ட பிரச்சினையைத் தீர்க்க அவள் கணவனின் சிநேகிதி முன் வந்து உதவுவதாக அமைந்துள்ளது இக்கதை.

ஆனால், பிறிதொரு நோக்கிலிருந்து பார்க்கும்பொழுது திருமணம், வரதட்சணை என்ற மரபுவழிச் சிந்தனைகளுக்கும் இக்கதையில் இடமளிக்கப்பட்டுள்ளது. சந்தைக் கடை சமூகத்தின் அங்கமான ஒரு குடும்பத்தில் சந்துஷ்ட்டியான சாப்பாட்டிற்கே வழியில்லை என்ற நிலையிலும் மகன் வாங்கி வந்து தந்த மிக்ஸியின் பெருமையை அண்டை அயலுக்குக் காட்டி மகிழும் தாய். "பெத்த பொண்ணு கல்யாணமாகாமலே கிழவியா நிக்கறப்போ... திவசம் என்ன வேண்டிக் கிடக்கு திவசம்?"... "மூன்று பெண்களுக்கும் தலைக்குப் பத்துப் பவுன் அஞ்சாயிரம் செலவுல அரைநாள்ல, தாலியகட்டி, புருஷன் வீட்டுக்குப் போய்ச்சேருங்கன்னு விரட்டி விட்டுடு-

வோம். நீ கவலைப்படாதே'' என்று பார்வதம் அபலையாய் நிற்கும் பட்டாபியின் மனைவிக்கு நிர்கதியில் நிற்கும் ஒரு பெண்ணுக்கு மற்றொரு பெண்ணின் உதவிக்கரமாக - உதவி செய்ய முன் வந்தாலும் திருமணத்தைப் பெண் வாழ்வின் முடிந்த முடிபாகக் கூறுவதும் மரபின் கட்டுக்குள் பழக்கப்படுத்தப்பட்ட மனோநிலையைக் காட்டுகிறது.

'கதாநாயகிகளின் கதை' கலைரசனை உள்ள பல்லவியின் கதை. படித்தவள்; ஓவியக்கலை அறிந்தவள். வேலை பார்த்தவள். 700 ரூபாய் மாத வருமானம் கொண்டவள் என்பதாலேயே முரளியால் மனைவியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவள். குழந்தைப்பேறு காரணமாக வேலையை விட, அவளது கலையையே காசாக்க எண்ணுபவன் முரளி. அவள் ஒருநாள் பிரஷ்ஷைத் தொடவில்லையென்றால் முரளியும் இவளைத் தொடாமலிருப்பான். வாழ்வின் ஒரு நாளைய சம்பாத்தியம் போச்சு என்பான்.

ஓவியப்போட்டியொன்றில் கலந்துகொள்ள, வரைவதற்கேற்ற கிராமியப் பின்னணியைத் தேடிப் புறப்பட்டனர் இருவரும். மனைவியிடம் எதற்கும் பேரம் பேசும் முரளி வியாபாரியாய், பஸ் செலவு முதல் குடித்த கோலி சோடா வரை அனைத்தும் அவள் வரையப் போகும் படத்தின் செலவில் அடக்குகிறான். இப்பின்னணியில் புருஷன் வேறு ஒரு பெண்ணிடம் தொடர்பு கொண்டிருப்பதை அறிந்து அவனது உறவே வேண்டாம் என ஒதுக்கித் தள்ளிய பொன்னி - புருஷனின் அல்பத்தனங்களில் கருமித்தனமும் மனதை உறுத்தினாலும் தன் கருத்தை வெளியில் சொல்லக்கூட முடியாத பல்லவி — என இரு நேரெதிரிடையான பாத்திரங்களைப் படைத்துள்ளார் அனுராதா ரமணன்.

''ஒருத்தனுக்கு ஒருத்தி தாங்க, எப்ப இவரு இன்னொருத்தியத் தேடிக்கிட்டாரோ, நான் எதுக்கு இவருக்காக

உழைச்சு ஓடாய் தேயணும்? அப்படியாவது இந்த ஆம்பிளை-யோட சவகாசம் வேணுமா?.. மனசை விட்டே அவரை எடுத்-ததுக்குப் பொறவு, எங்கையிலே மாத்திரம் என்னாத்துக்கு அவரு பேரைச் சுமக்கணும்? அதனாலே நெருப்பு வச்சு நானே அழிச்சுட்டேனுங்க'' கிராமத்து விடுதலைப்பெண், பொன்னியின் கூற்று. பட்டணத்துப் படித்த பெண் ஓவிய விற்பனை மூலம் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கும் பல்லவிக்கு அவள் சம்பாதித்துத் தந்த பணத்திலேயே உரிமை இல்லை. 'நீ நினைக்கிற மாதிரி எனக்கு வந்த பணத்தை நான் தைரி-யமா எடுத்துக் கொடுக்க முடியாது பொன்னி. அவராப் பார்த்து ஏதாவது கொடுத்தா உண்டு''. ''அட இது என்னம்மா பொழப்பு - பேசாம வரைஞ்ச படத்தையும் சாயக்குப்பியையும் தூக்கிக் கடாசிட்டு கையைத் தட்டிட்டு போங்க. தாலி கட்டினதுக்கு அடையாளமா அவருக்கும் பொங்கிப் போட-றீங்க...பக்கத்துல படுக்கிறீங்க. அவரு வமிசம் வளர பிள்ளை யைப் பெத்துக் கொடுக்கறீங்க. அதுக்குமேலே எதிர்பார்த்தா அது என்ன உடம்பா பம்புசெட்டு மிஷினா? அத்தக் கூட நடுநடுவே நிறுத்தி வைப்பானுங்க. ஒரே முட்ட வேலை செய்தா மெஷினு ரிப்பேராயிடுமினு'.

பல்லவியின் பரிதாபமான பதில் இது. ''உன்னத்தன தைரியம் எனக்குக் கிடையாது பொன்னி. எல்லாத்தையும் சகிச்சுக்கிட்டாத்தான் நான் கௌரவமா வாழலாம்''. படித்தும் பொன்னியளவு மனோபலம் இல்லாத சமூகத்தைத் துணிந்து எதிர்நோக்க இயலாத பட்டணத்துப் பெண்ணின் மோசமான நிலையிது. சமூகம் என்ன சொல்லும்? தனியே வாழும் பெண்ணுக்குக் கிடைக்கும் அந்தஸ்து (பெண்ணியவாதிகள் கூறும் இடம்) என்ன? என்று ஏற்கனவே வரையறை கட்டப் பட்ட மரபு வாய்க்கால்களிலேயே சென்று பழக்கப்படுத்தப் பட்ட மனப்பான்மை வினவுகிறது. இங்கு ஆணாதிக்க ஸ்தாப னமான குடும்பத்தின் நிலை இதுதான் எனச் சுட்டிக்காட்டி ஆணாதிக்கத்தை, பெண் ஒதுக்கலை எதிர்க்கும் மனோ பலத்தைப் பொன்னி மூலமும்,எதற்கெடுத்தாலும் மனுதர்மத்தைக்

காட்டி ஒடுக்கப்படும் பெண். தன் கசப்புகள் எதையும் வாய் விட்டுச் சொல்லாத, கணவனின் ஆதிக்கம் அனைத்தையும் சிறுமைகள் அத்தனையையும் 'சமூகத்தில் தன்நிலை' என்ற ஒன்றுக்காக சகித்துப்போகும் பல்லவியையும் படைத்துக் காட்டுகிறார் ஆசிரியை அனுராதா ரமணன்.

'காதல் தழும்புகளில்' நாயகி இளம்பெண். தந்தையா லேயே குடும்பத்தினர் அனைவரும் சுரண்டப்படும் நிலையில் உள்ளவள். தன் குடிச் செலவிற்காக வெளிநாட்டிலிருந்து குடும்பத்தினருக்காகக் கொண்டு வந்த ஒவ்வொரு பொருளை யும் பின்னர் விற்று விடுபவன் தந்தை. அதனால் அவனிட மிருந்து காப்பாற்றிக் கொள்ளப் புதிய உடையையும் கிழித்துத் தைத்துக் கொள்ளும் மேரி, பணத்துக்காகத் தன்னை ஒரு வியாதிக் காரனுக்கு மணமுடிக்கத் தந்தை முயலும் பொழுது புதிய உடையைக் கிழித்து அணிவதுபோல, தன் அழகிய முகத்தை ஆசிடால் பாழ்படுத்திக் கொள்கிறாள்.

'மழை'யின் கதைக்கரு ஒரு வாசகியின் மனநிலை பற்றியது. விதவையின் ஆழ்மனதில் உறங்கிக் கிடந்த ஆசை விதைகளுக்கு உயிரூட்டும் பருவமற்ற காலத்துப் பெய்யும் வீணான மழையாக ஒரு கதாசிரியர் வந்து சேர, அப்பெண்ணின் மன உளைச்சல்களை, இயக்க உளவியல் நோக்கில் (Psycho dynamic) கூறுகிறார் ஆசிரியை.

ஓர் இளம்விதவையின் இரசனைகள், ஆசைகள், உணர்ச்சித் துடிப்புகளைக் கூறவந்த ஆசிரியை, சட்டெனா மரபுக்கூட்டுக்குள் தம்மை மறைத்துக் கொள்கிறார், இதுதான் இங்கு இயல்பானது என்று சொல்வது போல. அதனால் அவளுக்காக மழை பெய்கிறதாம். 'முதல் சொட்டு பன்னீராய் அவள்மேல்'! பெண்ணிய நோக்கில் கதையை அமைத்துச் சென்றவர் பிறகு ஆண்கள் நிர்ணயித்த சட்டத்துக்குள் கதை யைக் கொணர்ந்து விடுகிறார்.

'அந்நிய விதைகள்' – பொதுமைப் பெண்டிர் குலத்தில் தோன்ற நேர்ந்த ஒரு பெண்ணின் மன உளைச்சல்களையும்- அவளுக்குச் சமூக ஏற்பு எப்படி உள்ளது என்பதையும் கூறுவது.

இக் கதைத் தொகுப்பு 1985-இல் வெளியிடப்பட்ட ஒன்று. இன்று பெரிதும் தர்க்கிக்கப்படும் பெண்ணிய வாதங்களின் ஒருசில கூறுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒவ்வொரு கதையிலும் காண முடிகிறது.

புதுக்கவிதையில் பெண்ணியச் சிந்தனைகள்

டாக்டர் இரா. மோகன்

'பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் பெரும் பிழை இருக்குதடி தங்கமே தங்கம்!' என்பது கவியரசர் பாரதியின் வாக்கு. இவ் வாக்கு முற்றிலும் உண்மை. பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் அவள் தன் வாழ்நாளில் சந்திக்க நேரும் பிரச்சினைகள் எத்தனை! எத்தனை! பிறப்பு முதல் தன் வாழ்வின் இறுதி மூச்சு வரை ஒரு பெண் எதிர்கொள்ளும் சிக்கல்கள் மிகப் பலவாகும். இப் பிரச்சினைகளின்-சிக்கல்களின்-நயமான, நுட்பமான பதிவினை இன்றைய புதுக்கவிதைகளில் காணமுடிகின்றது.

'பெண் பூ' பூத்தால்...?

இன்றைய சமுதாயம் ஆண் குழந்தைக்குத் தரும் மதிப்பையும் மரியாதையையும் பெண் குழந்தைக்குத் தருவதில்லை; ஆண் குழந்தை பிறந்தால் அடையும் மகிழ்ச்சியையும் மன நிறைவையும் பெண் குழந்தை பிறந்தால் அடைவதில்லை. 'சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை', 'ஆணாய்ப் பிறந்தால் அருமை, பெண்ணாய்ப் பிறந்தால் எருமை', 'நாலாவது பெண் பிறந்தால் நாதங்கியை விற்றுண்ணும்,' 'ஐந்தாவது பெண் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்', 'ஆறாவது பெண் பிறந்தால் ஆனான குடித்தனமும் நீறாய் விடும்', 'எட்டாவது பெண் பிறந்தால் எட்டிப் பார்த்த இடமெல்லாம் குட்டிச் சுவர்' என்பன போன்ற பழமொழிகளும் (இவை உண்மையில் பழமொழிகள் அல்ல; பெண் குழந்தையைப் பற்றிய பழிமொழிகள்) 'ஆம்பளைச் சிங்கம்', 'பொட்டைக் கழுதை' என்பன போன்ற வழக்குத் தொடர்களும் இக் கருத்தை உறுதி செய்வனவாகும்.

பஞ்சுவின் புதுக்கவிதை ஒன்று இன்றைய சமுதாயம் பெண் குழந்தைக்குத் தரும் இடத்தினை நயமாக எடுத்துக்காட்டு-கின்றது. இரும்பு அலமாரி வாசலுக்குள் வர முடியாமல் வந்து இறங்கிய போது, வீடு மகிழ்ந்தது. தொலைக்காட்சிப் பெட்டி நடிகை போல நுழைந்த போது, வீட்டில் உள்ள எல்லோர் முகங்களிலும் திரைப்படம் ஓடியது. மாவு ஆட்டும் இயந்திரம் வந்து அமர்ந்த அன்று, மனைவி பம்பரமாய்ச் சுற்றினாள். ஒரு நாள் வீட்டிற்குள் பூத்த பூவொன்று 'பெண் பூ' என உச்சரிக்கப்பட்ட போது — பிறந்தது பெண் குழந்தை என்ற செய்தியை அறிந்த போது - வீடு என்ன நிலைக்கு ஆளானது தெரியுமா? வீட்டில் உள்ளவர்கள் என்ன உணர்வை அடைந்-தார்கள் தெரியுமா? இதோ, கவிஞரே கூறுகின்றார், கேட்-போம் :

'மின்சாரம் நின்று போன
காற்றாடியாய்
வீடு சுருங்கிச் சமாதியானது'

(நூற்றாண்டுக் கவலைகள், ப. 25)

இன்றைய சூழலில் பெண் குழந்தை பிறந்தால் வீட்டார் அடையும் மனச் சுருக்கத்தை - மனப் புழுக்கத்தை - முகச் சுளிப்பை-ஓர் அருமையான உவமையின் வாயிலாகப் புலப்-படுத்தியுள்ளார் கவிஞர் பஞ்சு.

'ஆண்கள் பூட்டிய அடிமை விலங்கு' [illegible]

காலங்காலமாகச் சமுதாயத்தில் பெண்களுக்கு இரண்டாம் இடமே—சார்பு நிலையே—அளிக்கப்பட்டுள்ளது; வாழ்நாள் முழுதும் பெண், ஆணுக்கு அடிமையாகவே இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. கவிஞர் கந்தர்வன் கூறுவது போல் 'தவழ்ந்த போது பெண் தகப்பனுக்கு அடிமை; கையைப் பிடித்ததும் கணவனுக்கு அடிமை; கிழவியானதும் மகனுக்கு

அடிமை. ஆண்கள் பூட்டிய அடிமை விலங்கை அவளிடமிருந்து அகற்றிச் சென்றது மரணம் ஒன்று தான்!' (மீசைகள், ப. 96)

வெளிப் பார்வைக்கு ஒரு பெண் தன் தலையில் வாச மலரும், கையில்—காலில்—மூக்கில்—அணிகலன்களும் அணிந்திருப்பது போல் தோன்றும்; ஆனால் உண்மையில் அவை அவளுக்கு விலங்குகளே. கந்தர்வனின் 'விலங்குகள்' என்னும் கவிதை இவ்வுண்மையினை நுட்பமாகப் புலப்படுத்துகின்றது:

'தலையில் பூ விலங்கு
கையில் பொன் விலங்கு
காலில் வெள்ளி விலங்கு
சுவாசத் தடைக்கு
மூக்கில் கல் விலங்கு
ஒவ்வொரு மூச்சிலும்
அவள்
விலங்குகளை நுகர்கிறாள்!'

(சிறைகள், ப. 27)

இன்றைய பெண்ணின் 'விழிகள் வேண்டுமானால் நட்சத்திரங்களை வருடலாம்; ஆனால் அவள் விரல்கள் என்னவோ ஜன்னல் கம்பிகளோடு தான் உறவாடுகின்றன.' தன் வண்ணச் சிறடியை மண்மகள் அறியாத நிலையில் தான்—சிறை காக்கும் காப்பைத் தாண்ட முடியாத நெருக்கடியில் தான்—இன்றைய பெண் இருக்கிறாள், 'ஓர் ஆணை விட ஒரு பெண்ணுக்கு ஆடைகளும் ஆபரணங்களும் அணிகலன்களும் எவ்வளவு அதிகமோ அவ்வளவு அதிகமாக அவள் மீது விலங்குகளும் கட்டுக்களும் சுமைகளும் சுமத்தப்படுகின்றன,' என்னும் ஜெயகாந்தனின் கூற்று ('கோகிலா என்ன செய்து விட்டாள்?,' ப. 236) முற்றிலும் உண்மையேயாகும்.

'பெண் (தானா என்று) பார்க்கும் படலம்'

'பெண் பார்க்கும் படலம்' என்ற பெயரில் இன்று ஒரு பெண்ணுக்கு இழைக்கப்படும் அவமானங்கள் மிகப் பலவாகும்.

மாப்பிள்ளை வீட்டாரின் முன்னிலையில் பெண் நடந்து காட்ட வேண்டும்; உட்கார்ந்து காட்ட வேண்டும்; பாடிக் காட்ட வேண்டும்; பஜ்ஜி, சொஜ்ஜி பரிமாற வேண்டும்; பவ்யமாகக் காலில் விழுந்து வணங்க வேண்டும்; உடம்பு நிறைய (இரவல்) நகைகளைப் போட்டுக் கொண்டு (போலியாய்ப்) புன்னகைக்க வேண்டும். இவ்வளவும் எதற்குத் தெரியுமா? அவள் பெண் தான் என்று காட்ட. இவ்வளவு செய்தாலும் அவளுக்கு நல்ல பெயரா கிடைக்கும்? நிச்சயமாக இல்லை. பெண் நடக்கும் போது வேகமாக நடந்தால் 'ஆண்பிள்ளை' என்பார்கள்; மெல்ல நடந்தால் 'நோயாளி' என்பார்கள். உட்காரும் போது தொப்பென்று உட்கார்ந்தால் 'அடக்கம் கெட்டவள்' என்பார் கள்; பதவிசாய் உட்கார்ந்தால் 'சோம்பல் மிக்கவள்' என்பார் கள். பாடும் போது சப்தமாய்ப் பாடினால் 'ஓட்டை வாய்' என்பார்கள்; பாடாமல் போனால் 'திக்குவாய்' என்பார்கள். பஜ்ஜி சொஜ்ஜி பரிமாறும் போது நிறைய, தாராளமாய்ப் போட்டால் 'சிக்கனம் இல்லாதவள்' என்பார்கள்; கொஞ்ச-மாய்ப் பரிமாறினால் 'கஞ்சப் பிசுனாரி' என்பார்கள். பல்-கலைக்கழகப் பட்டமும் பதக்கங்களும உயர்கல்வியும் பெற்றிருந்தாலும் இன்று ஒரு பெண் என்றால், திருமணச் சந்தையில் இப்படியெல்லாம் அவள் நடந்து தான் தீர வேண்டும். அவளது எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போவது பல்கலைக் கழகப் பட்டமோ பதக்கங்களோ உயர்கல்வியோ அல்ல; ஓர் ஆண்மகன் தான் அவன் எப்படி இருக்கிறான்?

"அதோ
பேரம் நடத்தும்
கூட்டத்தோடு அமர்ந்து
வெட்கமின்றி
நாக்கில் ஜொள் ஒழுக
உன்னைப் பார்த்து
பல்லிளிக்கும்
அந்த 'சிரஞ்சீவி'
'நடைப் பிணம்' தான்"

(கறுப்பு யுத்தம், பக் 32-34)

என்று அவனை அடையாளம் காட்டுகிறார் இரா. நடராசன்'

'பெண் பார்க்கும் படலம்' என்ற பெயரில் நடக்கும் பொய்யான - போலியான - வெட்கம் கெட்ட - செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறாள் கவிஞர் அறிவுமணி படைக்கும் ஓர் இளம்பெண் 'மணி பர்ஸை மட்டுமே நேசிக்கும் மாப்பிள்ளைக்கு மனைவியாவதை விடக் காலம் பூரா கன்னி யாகவே கழித்து விட்டுப் போக' விரும்புகிறாள் அவள். மேலும் தன் அம்மா, அப்பாவுக்கு உறுதியும் உணர்ச்சியும் மிக்க குரலில் அவள் புதிய கட்டளையிட்டுச் சொல்கிறாள்:

'என் கல்லறையைக் கூட
எந்த ஆண்மகன் கல்லறைக்கு
அருகேயும் அமைத்து விடாதீர்கள்!'

(கறுப்பு மை சிவப்பு எழுத்து,
பக். 34-35)

இதுவரை பேசா மடந்தையாக இருந்து வந்த பெண் குலத்தை இங்ஙனம் கட்டளையிட வைத்திருப்பது புதுக்கவிதையின் சாதனை ஆகும்.

முதிர்கன்னியரின் அவலம்

வரதட்சனைக் கொடுமையின் காரணமாக இன்றைய சமுதாயத்தில் பெண்ணின் திருமணம் தள்ளிக் கொண்டே போகும் அவல நிலையைக் காண்கிறோம். முதிர்கன்னியரின் இவ்வவல நிலையை இன்றைய புதுக்கவிதைகள் பல உணர்ச்சி கரமாகச் சித்திரிக்கின்றன, மு. மேத்தாவின் 'அரளிப்பூ அழுகிறது', வைரமுத்துவின் 'ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை' 'முதிர்கன்னி' பாலகுமாரனின் 'வேளை வரலை', தி. மலர்-மதியின் 'மீட்டாத மானுடங்கள்' ஆகிய கவிதைகள் இவ் வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

இன்று பெண் வெளியே தெருவில் இறங்கி நடக்கத் தலைப்பட்டால் கண்களால் மேய்வதற்குக் காத்திருக்கிறார்கள்

இளைஞர்கள்; அவர்களில் யாருக்கும் அந்தப் பெண்ணிடம் நேரடியாகச் சென்று தன் உள்ளத்தை வெளிப்படுத்தும் தைரியம் இல்லை; அவள் வீட்டிற்குச் சென்று பெண் கேட்கும் துணிச்சல் இல்லை; வரதட்சணை வாங்காமல் அவள் கழுத்தில் மாலையிடும் நெஞ்சுரம் இல்லை. இந்நிலையில் ஆப்பிள் சிவப்பும், அழகும் கொண்ட ஒரு பெண் தன்னைத் தெரு மலமாய் உணர்கிறாள். தி. மலர்மதியின் 'கிளைக்குத் தவிக்கும் சிறகு' என்னும் கவிதை அவளது அக உணர்வின் ஆழத்தைப் பின்வருமாறு அழகுறப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

'வீடு திரும்பக்
காத்திருக்கிறாள் பேருந்துக்கு.
கையிலிருக்கும்
டிபன் பாக்ஸ் போலவே மனது.
உருவத்தை உதிர்த்துக் கொண்டிருக்கிறது
வயது...
எச்சில் விழிகளுக்கு மட்டும்
இன்னும் பெண்ணாய்த் தான் தெரிகிறாள்'

(மீட்டாத மானுடங்கள், ப. 34)

'வீட்டிற்குப் போகக் காத்திருக்கிறாள், அப்பா வீட்டிற்கு' என்னும் முத்தாய்ப்பான வரியோடு முடிகிறது அந்தக் கவிதை.

இன்னும் எத்தனைக் காலந்தான் பெண்ணினம் எல்லா வற்றையும் பொறுத்துக் கொள்ளும்? எதிர்பார்ப்போடும் ஏக்கத்தோடும் பெருமூச்சோடும் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும்? கவிஞர் வைரமுத்து படைக்கும் சீதை - வைகாசி வந்தால் முப்பத்து மூன்று வயது முடியும் முதிர்கன்னியான சீதை - வித்தியாசமாக இப்படிச் சிந்திக்கிறாள்:

'இந்த
வரதட்சணை வில்லை
வளைப்பது யார்?
ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை.
ஜனகனோ பாவம்
சாய்வு நாற்காலியில்.
இனி
நாமே ஒடிப்பதே
நியாயம்.
எங்கே...
சீதைகளே கொஞ்சம்
சேருங்களேன்'

(இன்னொரு தேசிய கீதம், பக். 9 - 12)

வித்தியாசமாகச் சிந்திப்பதோடு மட்டுமன்றி, ஏனைய சீதைகளையும் சேர வருமாறு அழைப்பு விடுக்கிறாள் கவிஞர் வைரமுத்துவின் சீதை.

கவிஞர் வைரமுத்து 'முதிர்கன்னி' என்ற தலைப்பில் பாடியிருக்கும் இன்னொரு கவிதையும் இங்கே நினைவு கூரத்தக்கதாகும். தன் கணக்கில் முப்பத்தேழு கோடைகள் முடிவுற்ற நிலையில் - கண்ணீரில் கண் மை மட்டுமன்றி இளமையும் கரைந்த சோகத்தில் - கனவுகள் எல்லாம் சமாதியாகிப் போன அவலத்தில் - ஜாதி, மதம், ஜாதகம், பொருளாதார வேறுபாடு முதலான சமூகக் காரணங்களால் திருமணம் தள்ளிப் போன துயரத்தில் - சிக்கித் தவிக்கும் அவள், நடப்பியல் உணர்வோடு விடுக்கும் வேண்டுகோள் இதுதான்:

'எங்கிருக்கிறாய்
என் ஷாஜகான்?
இறந்த பின்னே
தாஜ்மகால் வேண்டாம்
இருக்கும் போதே
ஒரு குடிசை கொடு.
எங்கிருக்கிறாய்
என் ராமனே?
இந்தச் சீதை
மணவாசம் காணுமுன்னே
வனவாசம் கொண்டாளே.
வேண்டாம்
ஷாஜகானும் வேண்டாம்
ராமனும் வேண்டாம்
நீயாவது ராவணா...
நீயாவது...
புஷ்பக விமானமா கேட்டேன்
கள்ளத் தோணியிலாவது...''

(இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, ப. 63)

வருவான் வருவான் என எதிர்பார்த்து ஏங்கி நின்ற 'ஷாஜகான்', 'இராமன்', 'பிருதிவிராஜன்' ஆகியோரை விடுத்து, 'இராவண' னுடன் கள்ளத் தோணியிலாவது பயணம் செய்யத் தயாராகி விட்டாள் இன்றைய முதிர்கன்னி!

அலுவல் மகளிர் சிக்கல்கள்

நடுத்தர வர்க்கக் குடும்பங்களில் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கை கூடி வருகின்றது. பெண்கள் வேலைக்குப் போவதால் இன்று குடும்பங்களில் எழும் பிரச்சினைகள் நுட்பமானவை. குடும்ப உறவுகளில் - குறிப்பாக,

கணவன் - மனைவி உறவு, தாய் - சேய் உறவு ஆகியவற்றில் வெறுப்புணர்வும் விரிசலும் நெருடலும் இடைவெளியும் இன்று பெருகி வருகின்றன. சுப்ரமண்ய ராஜுவின் 'வெறும் மனைவி', பொன்மணி வைரமுத்துவின் 'தேனே திரும்பிப் பார்', 'ஒரு பிஞ்சின் ஏக்கம்' என்னும் கவிதைகள் அலுவல் மகளிரின் வாழ்வில் நேரும் சிக்கல்களை நன்கு சித்திரிக்கின்றன.

வேலைக்குப் போகும் ஒரு பெண்ணின் வீட்டில் புலர் காலைப் பொழுது பரபரப்பாகக் காட்சியளிக்கும்; கோபமும் எரிச்சலும் புலம்பலும் பொருமலும் ஏச்சும் பேச்சும் அங்கே குடிகொண்டிருக்கும்; ஆருயிர்க் கணவரும், அருமைக் குழந்தைகளும் படாதபாடு படுவார்கள்: 'நாயின் குரைப்பும் பேயின் ஏவலும் புலியின் உறுமலும் சிங்கச் சீறலும் பெண்ணுள்ளிலிருந்து ஒலிபரப்'பாகிக் கொண்டிருக்கும்' திருமணத்திற்கு முன் தேன் போல் இனித்த அவள் பேச்சு, இன்று தேள் போல் கொட்டிக் கொண்டிருக்கும். இந் நிலையில்,

'வாழப் போவது
எத்தனை காலமடி?
அன்பை
இந்தக்
கணிப்பொறி யுகத்தில்
காணாமல் போட்டு விடாதே...
குடும்பத்திற்காக நீ
உன்னை அழித்து உரமாக்க வேண்டாம்.
உன் அன்பெனும் அமுதை
வரமாக்கினால் போதும்!'

(பொன்மணி வைரமுத்து கவிதைகள், பக். 68 - 73)

என அவளுக்கு நல்லதொரு அறிவுரையை வழங்குகின்றார் பொன்மணி வைரமுத்து.

'பெண்ணியம்' (Feminism) என்பது இன்று தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றது; அல்லது மேலோட்டமாக அணுகப்படுகின்றது. இவ்விரு போக்குகளும் இல்லாமல் பெண்ணியத்தைச் சரியாகப் புரிந்து கொள்வது இன்றைய சூழலில் இன்றியமையாததாகும். மேலை நாடுகளிலும் 'மரபு சார்ந்த பெண்ணியம்' (Conservative Feminism) என்ற கோட்பாடு உருவாகிவிட்ட நிலையில் நாம் பெண்ணியம் என்பது ஆணுக்கு எதிரானது, இல்லற வாழ்க்கைக்கு முரணானது என்றாற் போல் எண்ணுவதும், பேசுவதும்; நடப்பதும் தவறான போக்குகள் ஆகும். சுபத்ராவின் 'எந்தன் தோழா!' என்னும் தொகுப்பில் பெண்ணியம் சார்ந்த அற்புத மான பல கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

கவிஞர் சுபத்ரா சித்திரிக்கும் பெண், ஆணைத் தோழனாகக் கருதுகிறாள்; 'உடலின் வலியை, உள்ளத்துச் சுமையை, வீட்டுப் பணியை மீறி, நானும் எழுந்தாக வேண்டும். ஒரு கை கொடு!' (ப. 35) என அவனிடம் வேண்டுகிறாள்; 'கற்பு என்பது மரியாதை, நீ எனக்கும்—நான் உனக்கும், சமூகம் நமக்கும் தரும் மரியாதை... கற்பு என்பது ஓர் உணர்வு, யாருடைய வலுக்கட்டாயமுமின்றி, நான் நானாக இருக்கிறேன் என்ற நிறைவு, உனக்கும்—எனக்கும் பொதுவான இந்த, கற்புடைய சமுதாயம் நோக்கி, முன்னேறுவோம் வா!' (ப. 46) என அவனை அழைக்கிறாள்; 'தோழா! மாற வேண்டியவை பேருந்துகள் அல்ல! நம் மதிப்பீடுகள். திருந்த வேண்டியது சட்டங்கள் அல்ல! நம் சிந்தனை. ஆனால் எதிர்க்க வேண்டியது உன்னை அல்ல! இழிவுபடுத்தும் நம் கலாச்சாரத்தை' (ப. 50) எனத் தெள்ளத் தெளிவாய் அவனுக்கு உரைக்கிறாள்.

'நாம் நமக்குள் சண்டையிட்டுக்
கொள்ள வேண்டியவர்கள் அல்ல —
நமது இணைந்த கரங்கள் கொண்டு
இவ்வுலகத்தின் போக்கைச் சரிபார்க்க வேண்டி
யுள்ளது'

(ப. 19) எனத் திட்டவட்டமாக முழங்குகிறாள் அவள்.

'பெண்ணியம்' என்ற கோட்பாட்டிற்குக் கவிஞர் சுபத்ரா 'எந்தன் தோழா' என்னும் தொகுப்பின் வாயிலாக நல்கி யிருக்கும் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இங்ஙனம் இன்றைய புதுக்கவிதைகள் பதிவு செய்திருக்கும் பெண்ணியச் சிந்தனைகள் திட்பமும் நுட்பமும் வாய்ந்தவை ஆகும். புதுக்கவிதை காட்டும் பெண் அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் நான்கு பண்புகளும் கொண்ட 'பேசா மடந்தை' அல்ல; நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறி, நிமிர்ந்த ஞானச் செருக்கு ஆகிய நான்கு பண்புகளும் கொண்ட 'பேசும் மடந்தை' ஆவாள். அவள், "இனியும் நீ என்னை வதைத்தால், டேய்! கணவனே! எச்சரிக்கை : 'வரதட்சணை கேட்ட கணவன் தீக்குளிப்பு' என விடிந்தால் செய்தி வரும் பத்திரிகை யிலே'' (எஸ். அறிவுமணி, கறுப்பு மை சிவப்பு எழுத்து, ப. 57) எனத் தவறு செய்யும் தன் கணவனை எச்சரிப்பாள்; 'பழைய அழுக்குகள்—அது, உன் மூளையிலும் என் மூளையிலும் ஏராளம்! துடைத்தெறிந்து விட்டுப் புறப்படுவோம் வா!' (சுபத்ரா, எந்தன் தோழா, ப. 19) எனத் தோழமை உணர்வோடு ஆணுக்கு அழைப்பு விடுப்பாள்;' 'அழுவதை நிறுத்தி — யாரையும் தொழுவதை நிறுத்தி – குரலினை உயர்த்தித் தன் ஆற்றலை' (கந்தர்வன், சிறைகள், ப. 37) உலகிற்குக் காட்டுவாள். இங்ஙனம் தன்னை அறிந்தவளாக -தன்ஆற்றலை உணர்ந்தவளாக - பெண் விளங்க வேண்டும் என்பதே இன்றைய புதுக்கவிஞர்களின் கருத்தும் விருப்பமும் ஆகும்.

பெண் விடுதலை
சமத்துவம் பேசுவதிலா?
சமனிலைப்பாடு பேணுவதிலா?

டாக்டர் தமிழண்ணல்

மேடைப் பேச்சில் உணர்ச்சியைக் கொட்டவும் நிறையக் கைதட்டுப் பெறவும் உகந்த தலைப்புக்களில் ஒன்று 'பெண்ணுரிமை'. நடைமுறை என்னவோ என்றும் ஒரே மாதிரிதான். இதற்குக் காரணம் யாது?

பெண்ணியம், பெண்ணுரிமை, பெண் விடுதலை எனப் பேசும் எவரும், நடைமுறை உண்மைகளை மனங்கொண்டு 'நிதரிசனப்' பார்வையில், ஆரஅமரச் சிந்தித்துப் பேசுவதில்லை. அதனால் எல்லாம் பேச்சோடு ஒழிகின்றன. நடைபெறக் கூடியதைப் பேசாமல், ஆகாயத்தில் கோட்டை கட்டுவதால் எப்படிப் பயன்விளையும்?

ஆணாதிக்க சமுதாயத்தைச் சாடவேண்டியது. திருவள்ளுவர் முதலாக, அனைத்து மானுடச் சிந்தனையாளர்களையும் ஒரு வாங்கு வாங்கவேண்டியது. வீட்டுக்குப் போய், ஒரு குவளை தண்ணீர் குடித்து விட்டு ஓய்ந்து படுக்க வேண்டியது. தம் எழுத்திலும் பேச்சிலும் நடைமுறைக்குகந்த எண்ணங்கள் இருக்க வேண்டும்; அவை சிலவேனும் நிறைவேற வேண்டும் என்ற குறிக்கோள் இருந்தால் தானே?

ஆணாதிக்கம்

அத்தனை ஆண்களும் கொடியவர்கள். அன்றுமுதல் இன்றுவரை ஆண் வர்க்கத்தால் பெண் அடிமைப்படுத்தப்பட்டுக் கொடுமைப் படுத்தப் படுகிறாள்.

ஆணாதிக்க சமுதாயத்தில் நடுநிலைச் சிந்தனை சிறிதளவேனும் இருந்திருக்க நியாயமில்லை. பெண்ணைப் போற்றுவதாகக் கூறப்படுவன எல்லாம் போலித் தனமானவை.

அவை பெண்ணை ஏமாற்ற ஆண் செய்த தந்திரம். சமுதாயத்தில் நடக்கும் பழக்கவழக்கம், சடங்கு ஒவ்வொன்றும் ஆண் பெண்ணை அடிமை கொண்டதன் சின்னங்களே.

பெண் அடுக்களையில் சிறைவைக்கப்பட்டாள். அவள் உலகம் தெரியாத பேதை ஆக்கப்பட்டாள். ஆடவர் முன் பேசவும், நிற்கவும் கூசுபவள் ஆனாள். மதம், பண்பாடு என்ற பெயர்களால் பெண்ணினத்தைப் பின்னடையச் செய்யும் சிந்தனை, செயல்களே முன்வைக்கப்பட்டன.

இவ்வாறு பெண்ணடிமை பற்றிக் கூறப்படுவன பலவும் உண்மையே. ஆனால் பெண்விடுதலை பற்றிய சிந்தனை இன்றுதான் தோன்றியதா? இன்று காரசாரமாகப் பேசும் சிலர்தான் இதைத் தொடங்கினார்களா? முன்னோர்களில் எவருக்கும் இந்த நல்ல எண்ணமே தோன்றியதில்லையா? அவர்கள் அனைவருமே ஒரு சார்புபட எழுதிய வஞ்சகர்கள்தானா? ஒட்டுமொத்தமாக 'ஆணாதிக்கம்' என்றால் உண்மையாகிவிடுமா? யாரோ மேலைநாட்டினரும் பிறரும் எழுதியவற்றை ஒப்பித்துக்கொண்டிருக்கப் பிறந்தவர்கள்தாமா நாம்? நமக்கென்று 'சுயசிந்தலை' இருத்தல் கூடாதா?

ஒரே மாதிரி சிந்தித்து, ஒரே மாதிரி பேச வேண்டுமா?

இருபது ஆண்டுகளுக்கு முன் பெண்ணுரிமை பற்றிப் பேசிய முறைகட்கும், இன்று பெண்களே கனல்தெறிக்கப் பேசுவனவற்றிற்கும் நிரம்ப வேறுபாடுகள் வந்துவிட்டன. திரு. வி.க. 'பெண்ணின் பெருமை' எழுதியதற்கும் இன்று 'பெண்ணியம்' பற்றி எழுதப்படுவனவற்றிற்கும் உணர்ச்சியில்-நடையில் - வெளிப்பாட்டு நெறியில் வேறுபாடுகள் வந்து விட்டன. இந்த நிலையில் ஆயிரம், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பெண்ணியச் சிந்தனையாளர்கள், இன்றைய 'உணர்ச்சியாளர்'களைப் போலவே எழுதியிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? இன்றைய மேடைப் பேச்சுப்

போலவே, திருவள்ளுவர் எழுதவில்லை, இளங்கோ பாட-வில்லை என்றுகூறி, அவர்களைத் தரந்தாழ்த்திப் பேசுவதும் அவர்கள் பெண்ணுரிமை கருதி எழுதவில்லை என்று வாதிடுவதும் எவ்வாறு நியாயமாகும்?

பெண்ணியச் சிந்தனைக்கும் ஒரு நீண்ட நெடிய வரலாறு, வளர்ச்சி உண்டுதானே? இதில் முன்னைய சிந்தனைகளையெல்லாம் கண்மூடி எதிர்த்துக் கைதட்டுப் பெற்றுவிட்டால், இம் முயற்சி முன்னைய சான்றோரின் தோல்வியாகுமா? அல்லது கைதட்டுப் பெற்றவர்தம் தோல்வியில் முடியுமா?

"பெண்மட்டும் ஏன் பிள்ளைபெறவேண்டும்? பெண் மட்டும் ஏன் கூந்தலை வளர்க்க வேண்டும்? பெண் மட்டும் ஏன் முகத்தில் மஞ்சள் பூசிக் கொள்ள வேண்டும்? பெண்ணை மட்டும் திருமதி இன்னார் என்று ஆணின் பெயரால் ஏன் குறிக்க வேண்டும்?" - இவ்வாறு ஆயிரம் கேள்விகளைச் சரமாரியாக வீசலாம். இவற்றை எல்லாம் பற்றி முன்னையோர் கருத்துக் கூறாதது, அவர்கள் தவறுதான்!

பெண் தன்னைக் காத்துக் கொள்வது எவ்வாறு? பெண்ணை ஒரு சமுகம் காப்பது எவ்வாறு? பெண் எவ்வெவ்வாறு ஏமாற்றங்கட்கு ஆளாகிறாள்? அவற்றைத் தடுப்பது எவ்வாறு? - இத்தகைய சில அடிப்படைச் சிந்தனைகளை மட்டுமே அவர்களிடம் காண்கின்றோம்.

பெண்களும் ஆண்களைப் போல் உடையணியலாம், அலுவலகப் பணி செய்யலாம், பலரை மணம் செய்து கொள்ளலாம், சமத்துவமாய் அனைத்திலும் திகழலாம் என அக்கால முன்னோர்கள் சிந்திக்கவில்லை என, அவர்களைக் கேலியும் கிண்டலும் செய்வதால் பயன் என்ன? அவர்களைத் தூக்கி எறிந்து பேசிவிட்டால், பெண்கள் நிலை உயர்ந்துவிடுமா?

காலமும் கருத்தும்

எந்தக் காலத்துக் கருத்திலும் அவ்வக் காலத்துப் பின்னணியின் எதிரொலி இருக்கும். தொல்காப்பியர்தம் பெண்ணியச் சிந்தனைகள் அன்றிருந்த மக்கட் சமுதாயப் பின்னணியினின்றும் முகிழ்த்திருக்கவே கூடும். திருவள்ளுவர் சிந்தனைகளை அவர்காலச் சமுதாயநிலை, சிந்தனைகளுடன் வைத்து ஒப்பிட்டால்தான் அவர்தம் சிந்தனைகளின் ஆழமும் வீச்சும் வேறுபாடும் உணரப்படும். அவற்றை இன்றுள்ள உணர்ச்சி வெளிப்பாட்டுப் பேச்சு நடைகளுடன் ஒப்பிடலா-காது.

எதிர்காலத்தில் 21ஆம் நூற்றாண்டில் ஏற்படும் பெண்ணியச் சிந்தனைகளுடன் ஒப்பிடத்தக்க ஆழமும் வீச்சுமுடைய சிந்தனைகள் இன்று எத்தனை தோன்றி-யுள்ளன என்பதற்குக் காலந்தான் பதில் கூற முடியும்! இன்று துள்ளும் பலரது எண்ணங்கள், அன்று இகழ்ந்து தள்ளப்படலாம்! யார் கண்டார்கள்?

ஒருவரது நீண்ட ஆய்வுரை, பிறர் ஒருவரது ஒருவரி அடிக்குறிப்பில் மறுக்கப்பட்டு விடலாம் என்பர்.

இவர்கள் எல்லாம் உண்மையான பெண் விடுதலையை விரும்புகிறவர்கள்தாமா? தங்கள் 'புரட்சிப் பேச்சால்', நல்ல பேச்சாளர் என்று பெயரெடுப்பதற்கு மட்டுமே பேசுபவர்களா? எல்லாம் ஐயப்பாடாய் இருக்கின்றன.

அமெரிக்காவிலும்
மேலை நாடுகளிலும் நடப்பவை யாவை?

இன்று பெண்ணினம் பற்றிப் புரட்சியாகப் பேசுபவர்கள் பலர், மேலை நாட்டு நாகரிகத்தால் - நூல்களால் - சிந்தனை களால் தாக்குரவு பெற்றவர்களே. இவ்வாறெல்லாம் பேசலாம் என்ற நெறிமுறைகளைக் கூட இவர்கள் அங்கிருந்துதான் இறக்குமதி செய்து கொண்டவர்கள். இவர்கள் தம் நெஞ்சிற் கைவைத்துச் சொன்னால், தங்கள் தற்சிந்தனையைப் பயன் படுத்தவில்லை என்பதை ஒப்புக்கொள்வார்கள்.

இவர்களுக்கு வழிகாட்டும் மேலைநாட்டாரின் இன்றைய நிலை என்ன தெரியுமா?

அமெரிக்காவில் அரசுக் கல்வித்துறைச் செயலராக இருந்து ஓய்வுபெற்ற ஓரதிகாரி, 'பழைய மரபுவழிக் குடும்ப வாழ்வு முறைக்குத் திரும்புதல்' (Returning to the traditional family life) பற்றி நூலெழுதி, அந்நூல் இன்று மிகக் கூடுதலாக விற்பனையாகி வருகிறது. ஆங்கில நாட்டுத் தலைமை அமைச்சர் சான்மேசர் 'பழைய மரபுகட்குத் திரும்புதல்' (Back to the basics) பற்றி, ஒரு குறிக்கோள் வாசகமாகக் கொண்டு மக்களுக்கு அறிவுரை கூறிப் பரப்பத் தொடங்கியுள்ளார். அரசியல் முதல் குடும்பவாழ்வு வரை பழைய மரபுகட்குத் திரும்பினாலன்றி, இங்கிலாந்து மக்களுக்கு எதிர்காலமில்லையென மேசர் விளக்கிவருகின்றார்.

அமெரிக்காவில் திருமணம் ஆகும் முன் குழந்தை பெறு-வோர் தொகையும், திருமணமாகாமலே நண்பர்கள் போல் கூடி வாழ்ந்து பிரிவோர் தொகையும், திருமணமே வேண்டா மெனப் புறக்கணித்துச் சுதந்திரமாக வாழ்ந்து தேவைப்படும் போது உணவு விடுதிக்குச் சென்று பசியைத் தீர்த்துக் கொள்வதுபோல உடல் தேவையை நிறைவு செய்துகொள்வோர் தொகையும் ஆண்டுக்கு ஆண்டு கூடி வருகின்றனவாம். தாயின்றி அதாவது தாய் மணவிலக்குச் செய்து பிறன் ஒருவனை மணந்துகொண்டு போய்விட்டதால் தந்தையுடன் மட்டும் வாழும் குழந்தைகள், அவ்வாறு தந்தைபோய்விடத் தாயுடன் மட்டும் வாழும் குழந்தைகள் என வளரும் குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகமாகி வருகிறதாம். இக் குழந்தைகளை 'ஒரு பெற்றோர்க் குழந்தைகள்' (Single Parents Children) எனப் பெயரிட்டுப் புள்ளி விவரம் தருகி-றார்கள். இத்தகைய புள்ளி விவரங்களைத் தந்து, 'எதிர் காலத்தில் பண்பாடும் மக்கட் சமுதாயமும்' ஒருசேர அழிந்து, தம் நாடு பாழாகப்போகிறதென அந்நாட்டுப் பெரியவர்கள் வருந்துகின்றார்கள்!

எனவே, 'பெண் சுதந்திரம்' என்று கூறிப் பிறிதோர் எல்லைக்குச் சென்றால், நிலைமை என்ன ஆகும் என்பதும் சிந்திக்கற்பாலதாகும். நாம் அவர்களைப் பார்த்துப் பின்பற்றி நடக்க முனையும்போது, அவர்கள் நம்மிடமுள்ள நல்ல 'நெறிமுறைகளை' நாடி வருகின்றமை அறியத் தக்கதாகும். இதிலிருந்து புலனாகும் உண்மை என்ன?

நம்மிடமுள்ள குறைகளை மட்டும் நீக்கினால் போது-மென்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. உணர்ச்சிவயப் படாமல் மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டிய உண்மை இதுவாகும்.

பழங்காலப் பெண்ணியச் சிந்தனைகள்

சங்க இலக்கியத்தில் மருதத் திணையில் பரத்தையர்ப் பிரிவு பற்றிய பாடல்கள் உள. சங்க இலக்கியம் சமுதாய இலக்கியம். சமுதாயப் படப்பிடிப்பில், அதிலுள்ள தீமைகளும் விழவே செய்யும். ஆயினும் சங்க இலக்கியக் கோட்பாட்டின் படி 'ஊடலும் ஊடல் நிமித்தமுமே', மருதத் திணையின் உரிப்பொருளாயின. அதாவது தலைமகன் குறைகண்டு இடித்துக் கூறியும் மறுத்தும் ஊடல் கொள்ளும் தலைவியின் தலைமையே உரிப்பொருளாகக் கொள்ளப்பட்டது. தலை-மகன் தன் குறைபாட்டுக்காக நாணி நிற்பவனாகவே பெரிதும் படைக்கப்பட்டான். அவனையும் அவனுக்குத் துணை போன பாணனையும் அங்கதக் குறிப்புடன், கேலியும் கிண்டலும் செய்யும கற்பனைகளே சிறப்பிடம் பெற்றன. தொல்காப்பியர் 'கொடுமை ஒழுக்கம்', 'அடங்கா ஒழுக்கம்', 'பேணா ஒழுக்கம்' என்றிவ்வாறு தலைவனின் ஒழுக்கக் குறைபாடுகளைக் கடிவார் போலக் கற்பியலில் அமைக்கும் துறைகள் பலவாகும். வேறு பல கற்பனைகள் அக்காலச் சமுதாயச் சீர்கேட்டையே நினைவுறுத்துகின்றன. எனினும் தொல்காப்பியர் போலும், சமுதாய-மானுட நேயச் சிந்தனையாளர்களின் மனப் போக்-கையும் நாம் சிறிது உய்த்துணர்ந்து பார்க்க வேண்டும்.

திருவள்ளுவர் துறவு பற்றிப் பாடியுள்ளார். ஆனால் ஏனைய சமயவாதிகளைப் போலப் பெண்ணைத் துறப்பது துறவென்று அவர் யாண்டும் குறிப்பிடவில்லை. ஐம்புலன்களையும் அடக்கி வாழ வேண்டுமென்பது ஆணுக்கும் பொருந்தும், பெண்ணுக்கும் பொருந்துமன்றோ? துறவு பற்றிய ஏனைய சிந்தனைகளோடு, வள்ளுவத்தை உடன் வைத்துச் சிந்தித்தால்தான் உண்மை விளங்கும். கண்ணை மூடிக்கொண்டு, எல்லோரையும் சமமாகத் திட்டுவது, கற்றறியாதார் செயல்!

'மக்கட்பேறு' என்றுதான் பொதுவாகத் திருவள்ளுவர் ஓரதிகாரம் படைத்தார். அதில் ஏழு குறள்களில் மக்கள் என்ற பொதுச் சொல்லையே நினைவாக ஆண்டுள்ளார். ஏனைய மூன்று குறள்களிலும் மகனுக்குச் சொன்னால், மகளுக்கும் பொருந்தும் என்ற மனப் போக்கிலேயே அறம் கூறியுள்ளார். இவ்வளவிற்கும் புதல்வர்களைப் பெறுபவர்களே 'புத்' என்ற நரகத்திற்குச் செல்லாமல் காப்பாற்றப்படுவர் என்ற சமய அடிப்படைச் சிந்தனைகள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தவர்தான் அவர்! பரிமேலழகர் 'புதல்வரைப் பெறுதல்' என இவ் அதிகாரத் தலைப்பையே மாற்றினார். திருவள்ளுவர் புதல்வரைப் பெறுதலே சிறப்பென்று கருதுமாறு எவ்விடத்தும் குறித்தாரில்லை.

பெண் வழிச் சேறல், வரைவின் மகளிர் என்ற அதிகாரங்கள் பொருட் பாலில் அடுத்தடுத்து உள்ளன. பொருட் பாலில், அரசியல் சார்ந்த நட்பியலில் 'பெண்வழிச் சேறல்' அதிகாரம் உளது. காம வயப்பட்டு அதிலேயே மூழ்கிக் கிடப்பவரையும். அதன் காரணமாக மனைவி அல்லது காதலி சொல்கிறபடியெல்லாம் ஆடி, நாட்டையும் மக்களையும் அல்லற்படுத்தி அழிப்பவர்களையும் மனங்கொண்டே வள்ளுவர் 'பெண் சொல் கேட்டு ஆடாதே' எனத் தடுத்துள்ளார். இல்லறவியலில் அவர் இவ் வதிகாரத்தை வைக்க வில்லையே?

மனைவிழைவார், வினைவிழைவார் என இருவகையின-ராகப் பிரித்துச் சிலர் காமத்தையே விரும்புபவராக இருந்து அழிவதை அவர் நினைவுபடுத்துகிறார். பாண்டியமன்னன் ஆராயாது கோவலனைக் கொன்றது, 'மனை விழைவு' காரணமாகவே எனலாம். உரோமாபுரி ராணிகளின் வரலாற்றைப் படித்தால், அதனோடு ஒட்டிய பழங்காலத் தமிழக ஆட்சி நிலையில் பெண்கள் 'வசந்த சேனை' போல, மன்னர்களையும் நாட்டையும் ஆட்டிப் படைத்த செய்திகள் புலப்படும்.

வரைவில் மகளிர் என்று, பரத்தையரை ஒரு பொதுச் சொல்லால்-செயல் மூலம் பெற்ற பெயரால் - குறிப்பிடுகிறார். திருமணம் செய்து கொள்ளாத மகளிர் என்றால், இன்றும் அம் மனப் போக்குடையவர் தொகை பெருகுவதால், அதைக் கண்டிப்பதாக அமைகிறது. பரத்தையர் என்று குலப் பெயரால் ஒரு குறளில் கூட குறிக்காதது நினைவிற் கொள்ளத்தகும். பரத்தையர்கள் பொருள் ஒன்றையே விரும்பி, நல்ல குடும்பங்களை அழிப்பதால், அவர்களைக் கண்டிப்பதை நாம் பெண்ணுரிமைக்கு எதிரானது எனக் கூறுதல் தவறாகும்.

இளங்கோவடிகள் கண்ணகியைப் படைத்துள்ள திறமும் மாதவியைப் புனைந்துள்ள பாங்கும் சிலம்பினுள் நுழைந்து, கற்றுணரற்பாலனவாகும்.

கங்கை தன்னைப் புணர்ந்தாலும் காவிரிப் பெண் புலவாள் எனவும், அதுவே மங்கைமாதர் பெருங்கற்பு என்றும் ஒரு வாதத்தை முன் வைத்துக் கோவலன் பாடினான். அதற்கு மாதவி, கருங்கயற்கண் விழித்தொல்கிக் காவிரிப் பெண் செம்மாந்து நடப்பதற்குக் காரணம், 'தன் கணவன் திருந்து செங்கோல் வளையாமையே' என விடை கூறிக் கோவலனின் வாதத்தை எதிர்மறுக்கின்றாள். கானல்வரியில் நுட்பமாக இழையோடும் பெண்ணுரிமை வாதங்கள் நன்கு ஆழக் கற்று உணரற்பாலன.

திருமணமானதும் பெண்ணுக்கு ஏற்படும் 'உரிமையைப்' பற்றி முதன்முதல் பேசியவர், தொல்காப்பியர். 'அஞ்சவந்த உரிமைக்கண்ணும்' என்று, கணவனை அஞ்சி நடப்பவனாகவும், மனைவியை உரிமையுடன் குடும்பத் தலைமை ஏற்பவ-ளாகவும் அவர் படைப்பதைக் கற்பியல் நூற்பாக்கள் பறை சாற்றுகின்றன. ''உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில், பெருமையின் திரியா அன்பின் கண்ணும்'' என்று, கணவன் அவ்வுரிமையைத் தந்து, மனைவிக்குக் கட்டுப்பட்டு வாழும் நெறியையும், அவ்வுரிமை தந்த கணவனிடம் பெருமையில் மாறாத அன்பு பாராட்டி மனைவி வாழ வேண்டுமென்பதையும் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகிறார்.

சமத்துவம் வேறு
சமநிலைப்பாடு வேறு

ஆணும் பெண்ணும் சமமாக வாழ வேண்டுமென்பதைப் பலர் தவறாகவே புரிந்து கொள்கின்றார்கள். இருவர்க்கும் இயற்கை தந்துள்ள உடற் கூறுகள் முற்றிலும் வேறுபட்டன-வாகும். அதனால் ஏற்படும் வாழ்க்கை நெறிகளும் வேறு பட்டே தீரும். பெண் காவல் நிலையத்தில் ஒரு காவலராக நியமிக்கப் படுதல் தக்கதேயாகும். ஆயினும் பெண்களுக்கெனத் தனிக் காவல் நிலையங்கள் அமைக்கப்படுவானேன்? இது பெண்ணைக் காப்பாற்றும் முயற்சியேயன்றி, பெண்களைத் தாழ்வு படுத்துவதாகாது.

பெண்ணின் இயல்பான மென்மையைப் பயன்படுத்திக் கொண்டு, ஆண் வருக்கம் செய்யும் அட்டுழியங்களால் கொதித்தெழும் பெண்ணின் சீற்றம், கண்ணகி மதுரை நகரைச் சுட்டெரித்த சீற்றத்தைவிடக் கடுமையானது என நாம் உணரலாம். அச் சீற்றமாகிய நெருப்பில், பெண்களுக்கு ஆதரவாக எழுந்த சிந்தனைகளையும் போட்டுப் பொசுக்கவே தோன்றும். ஆயினும் உணர்ச்சியை விடுத்து, இயல்பான சிந்தனையுடன் பெண்ணிய விடுதலை நாடுவதே நலம்பயக்கும்.

நம் முன்னோர்கள் சமத்துவப்படுத்துவதை விடுத்துச் சமனிலைப்பாடு பேணுவதைப் பற்றிச் சிந்தித்துச் செயற்படுத்தினார்கள். பெண்ணுக்குரிய உடலமைப்பு, மென்மை, மகப்பேற்று வாழ்வு, தாய்மைப் பண்பு, தலைமைப் பொறுப்பு இவற்றை உளங்கொண்டு அவற்றிற்கேற்ற கடமைகளை, வாழ் முறைகளை அவர்கள் வகுத்தார்கள். அவற்றை இன்று உடைத்தெறியலாம். எனினும் கருத்தோடு, உடைக்கக் கூடிய எல்லை வரையே உடைத்தெறிய முடியும். இன்றேல் சமுதாயம் பாழ்பட்டுப் போகும்.

மனைவி, இல்லாள், மனையாள், இல்லத்தரசி எனத் தலைவிக்குத் தரப்படும் குடும்பப் பெயர்கள், இச் சமனிலைப்பாடு தொடர்பானவையே. அவளுக்குத் தரப்படும் உரிமைகள் தலைவனுக்குரியவற்றை விட மேலானவை. நடுக்கடலிடையே ஓடும் மரக்கலமனையது குடும்பம்; அதன் மீகாமன் அனையவள் தலைவி. கடற்பறவைபோலும் தலைமகன், எங்கு பறந்தாலும் அக் கலத்தின் பாய்மரக் கூம்புகளிலேதான் வந்தமர்ந்து ஓய்வு பெற முடியும். இவ்வாறு, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க நாவலாசிரியை 'பேர்ல்பக்' அவர்கள், சீனப் பின்னணியுடன் எழுதிய தமது புதினங்களில் ஆசியக் குடும்ப அமைப்பைச் சித்திரிப்பார்.

நம் குடும்ப அமைப்பு ஆலமரம் போல் உறுதியானது; ஆழ வேரோடுவது; பல கிளைகளாலும் விழுதுகளாலும் சுற்றமும் நட்பும் சூழ்தர வாழ்வளிப்பது. எனவே நம் குடும்ப அமைப்பிலுள்ள 'சமனிலைப்பாடுகளை' மனங்கொள்ளாமல் ஒட்டு மொத்தமாகச் சமத்துவம் பேசிச் சிதற அடிப்பது, மீண்டும் நாம் பழமையை விரும்பித் தேடி திரும்புவதற்கே வழிவகுக்கும்.

காலந்தோறும் பெண்ணுக்கும் ஆணுக்கும் உள்ள வேறுபாடுகள் காரணமாக, வடகோடு உயர்ந்து தென்கோடு தாழ்ந்துவிடாமல் ஒருவர் மேன்மையுற்று மற்றவர் கீழ்மையுறாமல் சமனிலை பெறுவதற்காகப் பெரியவர்கள் மேற்கொண்ட சிந்தனைகளும் சொற்பாடுகளும் மிகப்பலவாகும்.

காலந்தோறும் பெண்களுக்குப் பல்வேறு கொடுமைகள், வஞ்சனைகள், தீமைகள் இழைக்கப்பட்டு வந்துள்ளன. அவற்றைப் பெண்களின் தூண்டுதலால் ஆண்கள் செய்ததும் உண்டு. தீயவர்களில் ஆண், பெண் வேறுபாடிருப்பதாகத் தோற்ற-வில்லை. எனவே, அவ்வக் காலச் சூழ்நிலைகட்கேற்பச் சிக்கல்களை விடுவித்து, பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் களைந்து, அவர்கட்குச் சமத்துவ உரிமை தந்துள்ளனர். அங்ஙனம் தாழ்வுவரும் சூழலுக்கெதிரான உயர்வு தரும் வழிவகைகளைக் கண்டு, போற்றி இருவரும் ஒருமித்து வாழுமாறு மிகமுயன்று வந்துள்ளனர். இச்சமனிலைப்பாட்டுச் சிந்தனைகளையும், செயற்பாடுகளையும் ஒருவர் முற்றமுடிய ஆராய்ந்தாகவேண்டும்.

மிகவும் நுட்பமாகச் சிந்தித்தால், சமனிலைப்பாடுதான் தேடமுடியும்; அதன்வழி அமையும் சமத்துவமே சமத்துவ-மெனக் கொள்ளப்படும். "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்றால் பிள்ளைபெற்றுக் கடமையாற்றுவதில் பெற்றோர்க்கு அவரவர் இயல்புக்கேற்ற ஒரு சமனிலைப்பாடு உணர்த்தப்படுகிறது.

சமனிலைப்பாட்டின் வழிச் சமத்துவமே பெண்விடுதலை யின் அடிநாதமாக இருக்கமுடியும். திலகமிட்டுப் போர்க் களத்திற்கு அனுப்பிவிட்டு, வெற்றி வீரனாய்த் திரும்பிவரும் வரை ஒரே சிந்தனையுடன் காத்திருக்கும் மனைவி செய்யும் தவம், போர் புரிவதனினும் தாழ்ந்ததன்று. இவள் தவமே அவன் வெற்றிக்குக் காரணமாகலாம். அவளும் போர்க்களம் சென்று போரிடுவாள் எனச் சமத்துவ வளர்ச்சி காணலாம். கண்டாலும் எவ்வெவ் எல்லைகளில் - முறைகளில் அவள் போரிடலாம் என்ற வரையறை வந்தே தீரும். அதாவது சமத்துவம் என்பது, ஒருவர் போலவே அச்சு அடையாளமாக மற்றவரும் மாறுவது என்பது அன்று; ஒருவர் குறையை நிறைவு செய்வதன் மூலமும் சமனிலைப்படுத்த முயலுதலே யாகும்.

இன்றைய அலுவல் மகளிர் முதலான அனைத்து மகளிர் தம் பிரச்சினைகட்கும், சமனிலைப் படுத்துதல் அடிப்படையிலான முயற்சிகளே தீர்வு தரும். முற்காலத்திலும் இத்தகைய சிந்தனைகள் வேருன்றி வளர்ந்தன என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது. அம் மரபு வழியில் மேலும் சிந்தித்துச் செயலாற்றுவதே, எதிர்காலத்திலும் பெண்கள் விடுதலை சிறக்கவும் பெண்ணின் பெருமை போற்றிக் காக்கப்படவும் உதவும் என்லாம்.

இச் சமனிலைப்பாடு சமுகத்தின் பொதுவான பழக்க வழக்கங்களின் அடிப்படையில் அமையலாம். தனிக் குடும்பங்களில் கணவன், மனைவி இயல்புகளை ஒட்டி அமையலாம். இடத்திற்கும் காலத்திற்கும் தக வேறுபடலாம். வேலைக்குப் போகும் மனைவியின் கணவன் சமைக்க நேரிடலாம். என் வீட்டு வரவு செலவுகள், கணக்கு விவரங்களை என் மனைவி பார்த்துக் கொள்கிறாள். எனக்குப் படிக்கவும் எழுதவும் சொற்பொழிவாற்றவும் பொருள் தேடவும் நேரம் சரியாகி விடுகிறது. அதனால் கணக்கு எழுதும் பழக்கமே போய்விட்டது. மேலும் மனைவி கேட்கும் கணக்குகளுக்குத் தேடி, நினைவுகூர்ந்து விடை அளிக்கும் பரிதாபமான நிலைகளில் யான் நிற்கநேர்வதுண்டு. என் குடும்பத்தில், சமத்துவம் இருப்பதாகவே யான் கருதுகிறேன். அது இருவரும் வாழும் நெறிகளில், ஒருவருக்கொருவர் உதவியும் விட்டுக் கொடுத்தும், ஒருவர் குறையை ஒருவர் நிறைவு செய்தும் என இங்ஙனம் கடமைகளைக் கைக்கொள்வதில் இருக்கிறது. சுதந்திரம் என்ற பெயரால், பெண்ணை அத்து மீறித் திரிய விடுவதும் நலம் பயக்காது. பெண்ணுக்கு வரதட்சணையால், அடித்து அடிமைப்படுத்தி நடத்துவதால், சமயவாதங்களை வைத்து இழிவு படுத்திச் சிந்திப்பதால் என இவ்வாறு ஏற்படுத்தப்படும் கொடுமைகளை அறவே களைய வழிவகை தேட வேண்டும். அதே சமயம் பெண்ணினமும் கல்வியால், உடல் வலிமையால், திறமையால் தன்னைக் காத்துக் கொள்ளுமாறு வளர்க்கப்படவேண்டும்.

ஆண் பெண் இருவருடைய நிறைகுறைகளை இருவரும் சேர்ந்த ஒரு முழுமையில் சமனிலைப்படுத்திட இதுகாறும் பயனுள்ள பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இத் துறையிலும் இந்நோக்கத்திலும் மேலும் மேலும் சிந்திப்பதே பெண்ணியம் வாழப் பெருந்துணையாகும்.

பெண்ணியம் — அன்றும் இன்றும்

டாக்டர் கதிர் மகாதேவன்

சமுதாயத்தில் பெண்ணிற்கு உரிய இடம் யாது? பெண்கள் பெறும் மதிப்புகள் யாவை? சமுதாய அமைப்பில் அவர்கள் அடிமைத் தளையில் சிக்கி உழல்கிறார்களா? பெண்களுக்கு விடுதலை வேண்டும் என்ற எண்ணங்கள், உலகில் இன்று மேலோங்கிக் காணப்படும் காரணங்கள் யாவை? பெண்கள் வாழ்வில் பெறப்படும் இன்னபிற இன்னல் கள் ஏன் நேர்கின்றன? என்பன போன்ற வினாக்களைச் சமுதாயவியல் கண்ணோட்டத்தில் காணலாம்.

பெண்ணின் நிலை இன்று பல்வேறு காரணங்களால் பாதிக்கப்பட்டுள்ளது. பெண் விடுதலை இயக்கங்கள் ஆங்காங்கே தோன்றியுள்ளன. நேற்று - இன்று - நாளை என்ற காலக் கணிப்பில் இச்சிக்கலை நோக்குவது நன்று.

பொற்காலம் : சமுதாய மதிப்புகள்

ஒரு சமுதாயம் சில காலகட்டங்களில் உயரிய நிலை பெற்றுப் பொற்காலமாக மதிக்கப் பெறுகிறது. அக்கால நிலைகளில், பெண்களின் சமுதாய மதிப்புகள் எவ்வாறு காணப்பட்டன என ஆய்வது, இன்று ஏற்பட்டுள்ள நிலை களுக்கும் நாளை விளையும் பயன்களுக்கும் நல்வழிவகுக்கும்.

தமிழ்ச் சமுதாய - இலக்கிய - வரலாற்றில், சங்க காலம் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. பொற்காலம் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட காலத்தில், பெண்களின் சமுதாய மதிப்புகளை நோக்குவோம்.

நாடு! நல்ல நாடு!

சங்க காலம் என்பது ஓர் இரண்டாயிரம் ஆண்டுக் கால எல்லையில் காணப்படுகிறது. அன்று, ஆடவர்கள் பற்றிப்

பெண்களும், பெண்கள் பற்றி ஆடவர்களும் எத்தகைய மதிப்பீடுகள் கொண்டிருந்தனர்?

ஒரு பெண் ஆடவனைப் பற்றி எண்ணி எடைபோடு வதற்கும் ஓர் ஆடவன் பெண்ணை மதிப்பிடுவதற்கும் வேறுபாடு உண்டு. ஆண்-பெண் வாழ்வியல் பண்பாட்டு மரபுகளுக்கும் அந்த நாட்டின் செல்வச் செழிப்பிற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை! ஆடவன் நல்லவனாக இருந்தால், நாடு நலம் பெறும் என்பதை,

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே!'' —புறம். 187

என்று ஒரு பெண்பாற் புலவர் பாடுகிறார். எந்த ஆடவர் சமுதாயம், பெண்களை மதித்துப் போற்றுகிறதோ, அந்தச் சமுதாயம் நெடிது வாழும்! வளரும்! சிறக்கும்! என்பது இக்கவிதையின் நேர்பொருளாகும். நாடு நாடா வளத்ததாகலாம்! காடாக இருக்கலாம்! பள்ளமாக - மேடாக இருக்கலாம்! அதைப் பற்றிக் கவலை இல்லை! மனிதன் நேர்மையாகச் சீர்மையாகப் பெண்களை மதித்தல் வேண்டும் என்பது இக்கவிதையின் ஊடுபொருளாகும்.

பெண்ணின் பெருமை நின்று நிலைக்க முப்பெரும் உண்மைகளைக் கூறலாம். **ஒன்று** : கல்வி; **இரண்டு** : மணவாழ்வு; **மூன்று** : பொருளாதாரம்.

பெண்களும் அரசியலும்

பொற்காலம் எனப்படும் சங்க காலத்துப் பெண் கல்வி உயர்நிலை பெற்றிருந்ததைக் காண்கிறோம்

சங்ககாலத்தில் முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் காணப்படுகின்றனர். இப்பெண்கள் அரசியலில்

அங்கம் பெற்றனர்; தூதுவராய்ப் பகை நாட்டிற்குச் சென்றனர்; வீரத்தையும் காதலையும் இரு கண்களாகப் போற்றினர். புறநானூற்றுப் பாடல்கள் மூன்று வகைச் சூழல்களில் பாடப்பட்டுள்ளன. இம் மூவகைச் சூழல்களிலும் பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர்!

நேரடியாக அமர்க்களத்திற்குச் சென்று பகைவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துப் பாடிய பாடல்களைப் பிற மொழி இலக்கியங்களில் காண்பது அரிது.

அதியமான் சார்பாக ஒளவையார் அமர்க்களத்திற்குச் சென்று, சடுதியில் முன்னின்று பகைவரை நோக்கி,

''களம்புக லோம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளு முளனொரு பொருநன் வைகல்
எண்டேர் செய்யுந் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே'' —புறம். 87

என்று எச்சரிக்கை விடுத்துப் பாடுகிறார்.

மேற்பால் - கீழ்ப்பால் காதல்

சங்க காலத்தில், திருமணத்திற்கு முன்னரே கருத்தொருமித்த காதலனைச் சந்தித்து, உள்ளத்தால் தேர்ந்து தெளிந்து நட்பு கொண்டு, ஒட்டும் உறவும் பெற்றனர். இதனைக் களவொழுக்கம் என்றனர். இச்சூழலில் நிலவேறுபாடும் சாதி வேறுபாடும் ஆதிக்கம் செலுத்தவில்லை! மிக உயர்ந்த நிலப்பகுதியில் செல்வக் குடியில் தோன்றிய தலைவன், மிகத் தாழ்ந்த நிலப்பகுதியாம் நெய்தல் நிலத்தில் புலவுநாறும் சூழலில் வதியும் பெண்ணைக் காதலிப்பதாகப் பாடல்கள் உண்டு. தலைவன் தலைவியை நாடி, தேடி, ஓடி வருகிறான். ஆனால், தோழி தலைவியின் தாழ்நிலையை உயர்வாகச் சுட்டுகிறாள்.

''இவளே, காணல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு

மீன்எறி பரதவர் மகளே; நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வன் காதல் மகனே:
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி.
இனப்புள் ஓப்பும் எமக்கு நலன் எவனோ?
புலவுநாறுதும்; செல நின்றீமோ!
பெருநீர் விளையும் எம்சிறு நல்வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே
எம்மனோரில் செம்மலும் உடைத்தே!''

— நற். 45

எனவரும் பாடல் மேற்பாலும் கீழ்ப்பாலும் இணைவதைக் குறிப்பின் வெளிப்படுத்தும்.

காதல் மலர...தடை இல்லை!

புறநானூற்றுப் பாடல்கள் உண்மைச் சூழலில் பாடப் பெற்றவை; அகநானூற்றுப் பாடல்கள் கற்பனைச் சூழலில் பாடப்படுபவை; புறநானூற்றில் உண்மைச் சூழலில் பாடப் பெற்ற காதல் பாடல் ஒன்றினைக் காண்போம்.

சோழன் போரவைக் கோப்பெருநற் கிள்ளி மாபெரும் வீரன்; மாத் தமிழ் காத்த மாமல்லன்; அத்தகைய சிறந்த வீரனைப் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார் காதலித்தார். ஒரு முறை அப்பெருநற் கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனுடன் மல்லமர் புரிந்தான். அம்மல்லமரை ஓடிச் சென்று, பனைமரத்தின் அடியில் நின்று கண்டாள்; வம்பர் சிலர் பேசுவதையும் கேட்டாள். ஒரு சிலர், 'அரசன் வெற்றி பெறுவான்! வெற்றி பெறுவான்'! என்றனர். வேறு சிலர் 'அவன் தோல்வி அடைவான்! தோல்வி அடைவான்?'' என்றனர்.

இறுதியில் தான் காதலித்த அம்மன்னன் வெற்றி பெற்றதைக் கண்ணால் கண்டாள். ''ஓடிச் சென்று ஆரத்-முதவி (!)... திருமணம் செய்யும் சடங்காகத் தொடி கழித்து—

என்று எண்ணும்போது, "ஐயகோ என் செய்வேன்;" "என் தாய் என் கண்முன் வருகிறாள!''... "அவரைச் சுற்றிப் பெருங்கூட்டம் நிறகிறதே!'' "அடுந்தோள முயங்க, உயிரினும் சிறந்த நாணம் தடுக்கிறதே'' என்று பாடுகிறாள.

"அடிபுனை தொடுகழல் மையணற் காளைக்கென்
தொடிகழித் திடுதல்யான யாயஞ் சுவலே
அடுதோள முயங்க லவைநா ணுவலே
எனபோற் பெருவிதுப் புறுக என்றும்
ஒருபாற் படாஅ தாகி
இருபாற் பட்டவிம் மையலூரே'' — புறம். 83

இக்காதலின் வெற்றி தோல்விகள தெரியவில்லை! என்றாலும் ஒரு பெண் தன் காதலை - நேரடியாகத் தன் உள்ளக்கிடக் கையைக் கவிதையில் வெளிப்படுத்தும் ஆற்றலும் உரிமையும் பெற்றிருந்தாள் என அறிகிறோம்.

சிலர், சங்க காலத்து மகளிர் அடிமைகளாய்க் காணப்பட்டனர் என்று கூறித் தம கருத்துச் சிறுமையில பெருமை காண்கின்றனர். இககருத்துத் தவறானதாகும். சங்க மகளிர் கல்வி நன்கு கற்றவர்; கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர்; அரச குல மகளிர் முதல் குறவர் மகள் வரை கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்ததைக் காண்கிறோம். தாம் காதலித்தவரைத் தோழி வழி நன்கு அறிந்து மலரினும் மெல்லிய காமம் கொண்டவர். 'களவொழுக்கம்' சிறக்க வாழ்ந்தவர். காதலர்களைத் தலைவன் தலைவி என்று அழைத்துச் சமன்நிலையில் இருவரையும் நிலைநிறுத்தியவர் சங்கத்துச் சான்றோர்.

உளவியலும் பெண்ணியமும்

மருத நிலவொழுக்கத்தைச் சுட்டிச் சிலர், அக்கால மகளிர் இன்பப் பொருளாகக் கருதப்பட்டனர் என்றும், புலவர்களும், தலைவன் பரத்தை மாட்டுப் பிரிதலைப் போற்றிப் பாடியுள்ளனர் என்றும் பெண்ணின் உளவியலை

அறியாது கூறியுள்ளனர். கவிதையில் ஆழ்ந்துள்ள கவியுளம் காண வேண்டும்.

'ஊடல்' எனும் மனப்பாங்கு மகளிரிடம் உண்டு. இது பெண்பால் உளவியலாகும். (SHE, Understanding Feminine Psychology, Robert A. Johnson, p.4). தம் அழகில் தாமே மயங்கும் நார்சிச நிலை போலவும், தாயிடத்து அளவற்ற பாசம் வைத்திருக்கும் ஈடிபஸ் நிலை போன்றும், ஊடல் எனும் உளவியல் பரவலாகப் பெண்களிடம் காணப்படுவதாகும் தலைவிக்குப் பிரிவாற்றாமையால், ஊடல் எனும் இம்மனநிலை ஆதிக்கம் கொள்ளும்; ஐந்திணைகளில் நான்கு திணைகள் ஏதேனும் ஒருவகைப் பிரிவைப் பாடுபொருளாகக் கொண்டுள்ளன. பிரிந்து பொருள்வயின் நாட்டங்கொள்ளுதல் பாலையிலும், பிரிந்து இரங்கல் நெய்தலிலும், பிரிந்து இருத்தல் முல்லையிலும், பிரிந்து ஊடல் மருதத்திலும் பாடப்படுகின்றன. உள்ளூரில் தலைவன் கலைநாட்டங் காரணமாகப் பிரியும் நிலையில், தலைவி ஊடல் கொள்கிறாள். ஊடல் காதலுக்கு உயிர் போன்றது எனலாம். வள்ளுவர், ஊடலை உணவிற்கு உப்பு தேவைப்படுவது போன்றது என்பதை,

> "உப்பமைந் தற்றால் புலவி அது சிறிது
> மிக்கற்றால் நீள விடல்" —குறள், 1302

என்பர்.

வள்ளுவர்தாம் முதன்முதலில் பரத்தையர் ஒழுக்கத்தை இழுக்கமாகச் சுட்டிச் சமுதாயத்திற்கு எச்சரிக்கை விடுத்துப் பாடியவர். ஆனால், அவரே தலைவியின் ஊடலைப் பாடும் போது, தலைவியின் உளவியலை அறிந்து (Self possession) பாடுகிறார். தலைவி, தலைவனைத் தன்னை அன்றிப் பிறர் பார்த்து மகிழவும் கூடும்; எனவே, இவன் பரத்தமை உடையவன் என்பதைப் புலவி நுணுக்கமாக,

"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு" —குறள், 1311

என்றும்,

"யாரினும் காதலம் என்றேனே ஊடினாள்
யாரினும் யாரினும் என்று" —குறள், 1314

என்றும் கூறுவதைக் காணலாம்.

'வரைவின் மகளிர்' என்ற தலைப்பில், பரத்தமையைத் தவறு என்று சுட்டிய வள்ளுவர், தாம் படைத்த தலைவி, தலைவனைப் பரத்தமை இழுக்கம் உடையவன் என்று கூறலாமா? . என்ற வினா எழுகிறது! அதற்கு வள்ளுவர் அடுத்த அதிகாரத்தில் (ஊடலுவகை) விடை கூறுகிறார்.

தலைவிக்குத் தலைவன் தவறுடையவன் இல்லை என்று அறிந்தாலும், தலைவனோடு ஊடுவதினால் தன் மீது அதிக அன்பு செலுத்துவான் என்று எதிர்பார்க்கிறார்.

"இல்லை தவறவர்க்கு ஆயினும் ஊடுதல்
வல்லது அவர்அளிக்கு மாறு" —குறள், 1321

எனக் கூறுதல் காண்க.

சங்கத்துச் சான்றோர் பெண்மையை மதித்துப் போற்றியவர்கள்; பெண்கள் ஊடல் கொள்ளும் உளவியல் காரணங்களைக் கற்பனைக் கண் கொண்டு பாடியுள்ளனர்.

இதனாலன்றோ, மருதத்திணையில் பெண்களின் மூவகை மனநிலைகள், உளவியல் சார்பில் கவிதைகளில் உருப்பெறுகின்றன.

வாயில் வேண்டல், வாயில் மறுத்தல், வாயில் நேர்தல் என வரும் துறைகளே அங்குப் பாடுபொருளாகின்றன. வள்ளுவர் சுட்டும் புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை என்பன சங்க மருதத்திணையில் காட்டப்பெறும் தலைவியின் உளவியல் நிலைகளாகும்.

சங்கக் கவிதைகள் பெண்மையை மதித்துப் போற்றியவை யாகும்.

பெண்மையின் மாட்சியும் வீழ்ச்சியும்

பிற்காலத்துப் பெண்கள் நிலை மாட்சி பெறாமல் வீழ்ச்சியுற்றமைக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

1) பிற நாட்டார் படையெடுப்பு—

2) பிற சமயங்களின் ஊடுருவல்...

3) வற்கடம் ஏற்பட்டதனால் நிலைகுலைதல்!

4) பிற பண்பாடுகளின் கலப்பு+

5) அரைசியல் பிழைத்தோர் ஆட்சி செய்தல்—

இக்காரணங்களால் கல்வி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. இதனைப் பாரதியார் கண்டு மனங்கொதித்து,

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்''

என்று ஆற்றாமை காரணமாகக் கும்மி அடிக்கச் சொல்கிறார்.

பிற்காலத்துப் பெண்களுக்கு இரண்டு வகைச் சமுதாயக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

ஒன்று, ஒழுக்கம் என்ற பெயரால் கற்பு நிலையைப் பெண்களுக்கு மட்டும் காலங்காலமாகக் கூறி வந்தனர். ஆண்களுடன் பேசினாலும், பழகினாலும் பெண்ணின் கற்பு கெட்டு விட்டது என்று சாடுதல் சிறுமை என்பதையும் கற்பு என்பது பெண்ணிற்கு மட்டும் என்று கூறுதல் மாதர்தமை இழிவு படுத்தும் மடமை என்பதையும்,

"கற்பு நிலையென்று சொல்லவந் தாலிரு
கட்சிக்குமஃது பொதுவில் வைப்போம்''

என்று பாரதியார் கூறுவதைக் காணலாம்.

இரண்டாவது, காதலைக் கடிந்து, களவொழுக்கம் தீதென எண்ணிப் பெண்களை ஆடுமாடுகள் போலக் கட்டிக்-கொடுக்கும் வழக்கத்தை எட்டி மிதிப்போம் என்பதை,

''வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதிப்போம்''

என்று கவிஞர் கூறுவதைக் காணலாம்.

சங்க காலத்துக் கல்வி நிலை மேலோங்கியிருந்த காரணத்தால் பெண்கள் உரிமை போற்றப்பட்டது என அறிந்த பாரதியார்,

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி''

என்று பாரதி நெடிது நோக்கும் நோன்மையால் பாடுவதைக் காண்கிறோம்.

விடை காண வேண்டிய தடைகள்

பெண்ணுரிமை என்றால் என்ன? அவ்வுரிமைகள் யாவை? அவை எவ்வகையின? பெண்களின் கடமைகளையே காலங்-காலமாகப் பேசிவந்த இடத்தில் உரிமைகள் எடுபடுமா? உரிமைகளின் எல்லைகள் யாவை? என வரும் இன்னபிற தடைகள் ஆராயப்பட வேண்டும்.

சட்டங்கள் மட்டுமே பெண்ணுரிமையை நிலைநாட்ட முடியாது. இதையே பாரதி,

''மாதர்க் குண்டு சுதந்திர மென்றுநின்
வண்மலர்த்திரு வாயின் மொழிந்த சொல
நாதந் தானது நாரதன் வீணையோ''

என்கிறார்.

மனித குலத்திற்குரிய அனைத்துச் சுதந்திரமும் பெண்டிர்க்கும் உண்டு என்பதில் ஐயமில்லை! உலகில் பல இடங்களில் பெண்களைப் பொறுத்த வரை மனித உரிமைகள் மீறப்படுவதைக் காண்கிறோம்

பெண்மையின் தொன்மைத் தத்துவங்கள்

ஆடவனின் உடலில் பெண்மை குடிகொண்டுள்ள தொன்மைத் தத்துவம் உலகெங்கணும் காணப்படுகிறது.

இறைவன் ஆணையும் பெண்ணையும் ஒரு காலத்தில் ஓருருவமாகவே படைத்தான். ஆயின். இவ்வுருவத்தின் பேராற்றல் கண்டு, பொச்சாப்பு கொண்ட தேவர்கள், ஆணையும் பெண்ணையும் பிரித்து விட்டனர். இதனால், பிரிந்த பிம்பங்கள் ஒன்று கூடும் ஆசை ஏற்படுகிறது! அதுவே காதலுணர்ச்சி என்று பிளேட்டோ கூறுவர்.

அறிவியல் நோக்கிலும், ஆடவர் உடலில் பெண்மையின் குரோமோசோம் எனும் இனமரபு வண்ண இழைகள் உள்ளன. பெண்ணின் உடலிலும் ஆண்மையின் இனமரபு வண்ண இழைகள் உள்ளன. குருதியால் — வேதியல் அமைப்பால் — ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு இல்லை; அறிவால்— நுண்பொருள் ஆய்வால் வேறுபாடு இல்லை! எதிர்காலத்தில் அறிவியல் வளர்ச்சி ஆட்சி செலுத்தப்போகிறது என்றாலும், பெண்ணியத்தின் மேன்மையை இலக்கியப் பண்பாட்டு வாழ்வியல் மரபுகளும், சமயங்களும்தாம் நிலைநாட்ட முடியும்.

சமயங்களும் பெண்மையின் சீரினை ஆண்களுடன் சரி-நிகர் சமானமாக நிலைநாட்ட முனைந்ததை அறிகிறோம்.

ஆண்மையுள் பெண்மையும், பெண்மையுள் ஆண்மையும் கலந்திருப்பதைக் காட்டும் வகையில், சமயத்தில் உமையொரு பங்கனை ஏற்படுத்திக் கோயில் வழிபாட்டில் புகுத்தியுள்ளனர்; இந்தியத் தொன்மங்களிலும், அர்த்தநாரீசன் உருவம் இதனைக் குறிப்பின் சுட்டும்.

ஆணா? பெண்ணா?

இருபாலரில் எவர் உயர்ந்தவர்? கடவுளர்களில் ஆண் கடவுளா? பெண் கடவுளா? — எது உயர்ந்தது? என்ற சிக்கல் தோன்றியபோது, "ஸ்ரீ" என்ற ஓரெழுத்தினைக் கொண்டு இச்சிக்கலை நீக்கியுள்ளனர். இவ்வெழுத்து சமுதாயத்தில் ஒரு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தியது எனில் மிகையாகாது. ஆண் வழி, பெண்ணை அறிமுகப்படுத்தாமல், பெண் வழி ஆணின் சிறப்பினைச் சுட்டுதல் இங்குக் குறிப்பிடத் தக்கது.

"ஸ்ரீ" என்ற வடமொழிச் சொல், 'அருள்மிகு' என்ற பொருளினையும், 'மங்கலம் தரும்' என்ற பொருளினையும் சிறப்பாகத் தருவதைக் காணலாம்.

வைணவ மரபில், இச்சொல், தாய்த் தெய்வமாம் திருமகளைக் குறிக்கும். பெண் தெய்வத்தையும் ஆண் தெய்வத்தையும் இணைத்து இலட்சுமி நாராயணன், இராதா கிருஷ்ணன் எனும் வழிபாடுகளை ஏற்படுத்தினர். மேலும், ஸ்ரீதேவியைச் சேர்த்தே ஸ்ரீவிட்டுணு என்றும், ஸ்ரீநிவாசன் என்றும், ஸ்ரீவத்சா என்றும், ஸ்ரீதரா என்றும் பெயரிடும் தொன்ம இயல்பினை உருவாக்கினர்.

ஆணாதிக்கத்தினால் அழிந்த பரசுராமனைத் தொன்மம் காட்டும்; சானகியும் இராமனும் சானகிராமனாய் இணைந்து, பரசுராமனை வென்ற தொன்மநிலையும் - ஆண் பெண் சமன் பாட்டிற்கு வழிவகுக்கும் தொன்மம் எனலாம்.

மாறுதலை நோக்கி...

இன்று சமுதாயம் மாறுதலை நோக்கி விரைந்து செல்லும் நிலையில் உள்ளது.

எத்துணையோ சிக்கல்கள் சமுதாயத்தில் பெண்களை மையமாக வைத்து எழுகின்றன.

பெண்ணை அவர் என்றோ, அவள் என்றோ சுட்டும் பழக்கம் மிகக் குறைவாக உள்ளது. அவ்வாறு அழைக்காமல், அது' என்று அஃறிணையில் முன்னிலைப்படுத்துவதைக் காண்றோம். 'சட்டங்களில் ''அவன்'' என்று வருகிற இடங்களில் எல்லாம் "அவள்'' என்று சேர்க்க வேண்டும் என்று கூறுவது எத்துணை மடமை!

தனக்குள்ள உரிமைகளைத் தானறியாத பெண்களே மிகுதியாகக் காணப்படுகின்றனர்.

சமயங்களுக்கு ஏற்றவாறு சட்டங்கள் உள்ளன. பெண்ணின் உளவியலுக்கு ஏற்றவாறு அவைகள் மாற்றப்படல் நன்று.

எதிர்காலத்தில் உடல் வன்மையால் ஆற்றும் பணிகள் குறைந்து விடும்; எதையும் அறிவியல் கருவிகளால் சாதிக்க முடியும். இந்நிலை பெண்ணியம் மதிக்கப் பெற வழி வகுக்கும். எது எங்ஙனமாயினும், பண்பாட்டுச் சிறப்புகளும் அதற்கேற்ற மரபுகளும் தாம் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக உளவியல் நோக்கில் சீருடன் வாழ வழிவகுக்கும் என்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

தமிழ் நாவல்களில் பெண்ணியம்

சு. சந்திரா

பெண்ணியம் என்ற சொல் அண்மைக் காலங்களில் மிகப் பரவலாகப் பேசப்படுகின்றது. சமூக அவசியமாக உள்ள இப்பெண்ணியம் பொருளாதாரம், தொழில், பண்பாடு, இலக்கியம் ஆகிய அனைத்திலும் ஒலிக்கிறது. அவ்வகையில் இலக்கியத் திறனாய்வில் இப்பெண்ணியம் தலைகாட்டி வருவதில் வியப்பேதுமில்லை.

தமிழ் நாவல்களில் பெண்ணியம் என்ற இவ்வரைவு மூன்று பகுதிகளாக அமைகின்றது. முதலாவது பகுதி பெண்ணியம், பெண்ணிய இலக்கியத் திறனாய்வு பற்றிய பொது அறிமுகமாக அமைகிறது. இரண்டாம் பகுதியில் தமிழ் நாவல்களில் பெண்ணியம் என்பது பற்றிய செய்திகள் இடம் பெறுகிறது. மூன்றாம் பகுதி ஜெயகாந்தனுடைய நாவல்களில் பெண்ணியம் பற்றிய ஆய்வாக அமைகின்றது.

பெண்ணியம்

பெமினிஸம்' என்று ஆங்கிலத்தில் வழங்கப்பெற்ற இக்கருத்து தொடக்கத்தில் பெண்நிலைவாதம் என்ற சொல்லால்தான் குறிக்கப்பட்டது. 'உலகெங்கிலும் நீதியும் நெறியும் ஆண்களால்தாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து அவ்வரைமுறை நியாயங்களைப் பெண் என்ற நிலையில் நின்று ஆராய்வதே *பெண்நிலைவாதம்* என்று கொள்ளலாம். சமூக இயல் தொடர்பான இக்கருத்து நிலை மேனாட்டுககே உரியதென்றாலும் பெண் கொடுமை எதிர்ப்பு இந்தியத் திருநாட்டில் இல்லாமலில்லை?

உலகெங்கிலும் உள்ளது போலவே, இந்திய நாட்டிலும் பெண்களை இரண்டாந்தரப் *பிரஜையாக்கி*

ஒடுக்குதல் முனைப்பாகச் செயல்பட்டிருந்தது. இந்நிலை அறிவியல் வளர்ச்சி, கல்விப் பரவல் போன்ற பொருளாதாரச் சமூக மாற்றங்களினால் மாற்றம் பெறத் தொடங்கியுள்ளது. பெண்களே முன்நின்று கல்வி, வாக்குரிமை, திருமணம் பற்றிய முடிவு, கருச்சிதைவு உரிமை போன்ற உரிமைகளைக் கோரத் தொடங்கிய நிலையே, பெண்ணிய இயக்கங்களின் முன்னோடி நிலை எனக் கொள்ளலாம். மேலும் தேசிய வளர்ச்சித் திட்டங்களினால் பெண்களுக்குக் கொடுக்கப்படும் இன்றியமையாமை பெண்ணியத்தை நேரான பாதைக்கு இட்டுச் செல்கின்றது.

பெண்ணிய இலக்கியத் திறனாய்வு :

பெண்ணிய இலக்கியத் திறனாய்வைப் பெண்களை மையப்படுத்திய இலக்கியத் திறனாய்வு எனச் சுருக்கமாக வரையறுக்கலாம். 'பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் தலையாய நோக்கம், தந்தை வழிச் சமூக அமைப்பின் அடித்தளத்தைத் தாக்குவது' என்று மேனாட்டுப் பெண்ணியவாதியான கேட் மில்லட் தமது பாலின அரசியல் என்ற நூலில் (Kate Millet-Sexual Politics) திட்டவட்டமாகக் கூறுகிறார்.

பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் செய்யப்படும் ஆய்வோ, படைப்புகளில் இடம் பெறும் பெண்கள் பற்றிய வருணனையோ பெணணிய இலக்கியத் திறனாய்வாக ஆகிவிடாது. மாறாகப் படைப்பிலக்கியத்தில் பயன்படுத்தப்படும் 'பால்சார்ந்த எழுத்தாக்கக் கலைத்திறக் கோட்பாட்டினைக் கண்டறிந்து அதனை அகற்றுவது பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் இலக்காக இருந்தல் வேண்டும்.

1970இல் தொடங்கிய பெண்ணிய இலக்கியத் திறனாய்வு இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு ஆகிய நாடுகளில் 1975இல் வேரூன்றியது: பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முன்னோடிகளாக மேரி உல்ஸ்டன்

கிராப்ட் (Mary Wollstencraft) கேட்-மில்லட் (Kate Millet) ஸிமன்-டி-பௌன்யோ (Simon-De-Beanior), பெட்டி ப்ரிடன் (Brettry Friden) ஜெர்மைன் கிரிர் (Germaine Greer) ஆகியோர் கருதப்படுகின்றனர். ரெபேக்கா வெஸ்ட் (Rebaccp West), அட்ரின் ரீச் (Adrienne Rich), வர்ஜினியா உல்ப் (Virginia Wolf) ஆகியோரது எழுத்துக்கள் பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் வகைகளை வரையறுப்பதாக அமைந்தன.

தலைமை வேண்டாப் பெண்ணியம் (Anarcha Feminism), மகளிர் முன்னேற்றப் பெண்ணியம் (Career Feminism), பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism) மனிதவள மேம்பாட்டுப் பெண்ணியம் (Eugenic Feminism), பெண் மையமிட்ட பெண்ணியம் (Gymocedtric Feminism) மானுட நேயப் பெண்ணியம் (Humanist Feminism) ஏகாதிபத்தியப் பெண்ணியம் (Imperial Feminism), தனிமனிதப் பெண்ணியம் (Individual Feminism) ஓரினக் கலவிப் பெண்ணியம் (Lesbian Feminism), மிதவாதப் பெண்ணியம் (Liberal Feminisim) மார்க்ஸியப் பெண்ணியம் (Marxist Feminism) புதிய பெண்ணியம் (New Feminism), கூட்டுச் சேராப் பெண்ணியம் (Non Aligned Feminism). ஆதிகாலப் பெண்ணியம் (Proto-Feminism), தீவிரப் பெண்ணியம் (Radical Feminism). திருப்புமுனைப் பெண்ணியம் (Revisionist Feminism), புரட்சிப் பெண்ணியம் (Revolutionary Feminism), சமதருமப் பெண்ணியம் (Socialist Feminism) ஆன்மிகப் பெண்ணியம் (Spritual Feminism) என்று பத்தொன்பது வகைகளாகப் பெண்ணியத்தினை வகைப்படுத்துகின்றனர். இவ்வாறு பலவகைகளாக இருப்பினும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் கருத்தாக்கங்களாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

1) பாலினக் கருத்தாக்கத்தை நிலைநிறுத்துவதில் பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றின் பங்கு என்ன?

2) பெண்ணடிமைப் போக்கினை நிலைநிறுத்தும் பணியினைச் செய்யும் பண்பாட்டின் கூறுகள் எவை? அவற்றைப் *பிரதிபலிக்கும்*/பின்தள்ளும் இலக்கியங்கள், இலக்கிய வடிவங்கள், இலக்கிய உத்திகள் ஆகியவற்றை இனங்காணுதல் என்ற நோக்கில் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு இருத்தல் வேண்டும். இதற்கு கல்வி, தொழில் உரிமைகள், பாலியல் சார்ந்த ஆண்-பெண் உறவுநிலை, திருமணம், கற்பு போன்ற மதிப்பு சார்ந்த கருத்தாக்கங்கள் தமிழ் நாவல்களில் பெறுமிடம் சுட்டப்படுகின்றது.

இலக்கியங்களில் பெண்கள் :

தமிழ் மொழியின் குறிப்பிடத் தகுந்த பெண்ணியவாதியான இராஜம்கிருஷ்ணன் குறிப்பிடுவது போல், 'பெண்ணை ஓர் ஆய்வுப் பொருளாக்கிவிட்ட மேட்டிமை. இத்துறையை இன்று அனுமதித்திருக்கிறது என்பது உண்மைதான். இருப்பினும், இவ்வனுமதி ஓரளவு பெண்ணியத்தைப் பேணுகிறது அல்லது பேண முயல்கிறது என்பதும் உண்மையானதுதான்.

தமிழ் இலக்கியங்களில், காலத்தால் முற்பட்ட சங்க இலக்கியத்தில் பெண் கடவுள்சால் கற்புடையவளாகவும், ஈன்று புறந்தரும் கடைமையளாகவும் உயர்வாக மதிக்கப்படுகிறாள். அதே சமயத்தில் ஆண்களின் பாலியல் உறவு சார் மகிழ்வுக்கென்று ஒரு சமூகமே (பரத்தையர்) ஒதுக்கப்பட்டிருந்தமையும், அது சமுதாயத்தால் ஏற்கப்பட்ட பழக்கமாகவும் அமைந்தமையைக் காணமுடிகிறது.

காப்பியங்களில் வரும் கண்ணகியும் மாதவியும் மணிமேகலையும் (என்னதான் துறவு பூண்டு தொண்டு புரிந்தாலும்) கற்பொழுக்கம் நிறைந்தவர்களாக, உரிமை கோராத (கோரமுடியாதா?) படிமங்களாகவே படைக்கப்-

பட்டுவிட்டனர். அதுபோன்றே இந்திய இலக்கியங்களின் கருவூலமாக விளங்கும் இதிகாசங்களில் வருகின்ற சீதை, மண்டோதரி, திரௌபதி, குந்தி போன்றோரும் திருமண-வாழ்வில் ஆண்களின் நிழலாகவே உள்ளனர். பொதுவாக இந்திய இலக்கியங்களில் பெண்களது விடுதலையுணர்வும், உரிமைகோரும் பண்பும் இல்லத்தை / குடும்பத்தைத் துறந்த (விடுத்த) பின்னரே வெளிப்படுகிறது. இவ்வடிப்படையில் தமிழ்நாவல்களில் பெண்ணியம் பற்றிய செல்நெறியில் இக்கட்டுரை அமைகிறது.

தமிழில் தொடக்க நாவல்கள் :

தமிழின் தொடக்க நாவலாசிரியரான வேதநாயகம் பிள்ளை, பெண்மதிமாலை என்ற தனிநூல் எழுதியவர். ''அவர் எழுதிய நாவலின் பெயர்தான் *பிரதாப முதலியார் சரித்திரமே* யொழிய அது பெண்ணின் பிரதாபத்தைப் போற்ற எழுந்த 'வசனகாவியமே' எனப்படுகிறது. (இலக்-கியத்தில் பெண்கள், பதி. பாக்கியமுத்து) என்ற கருத்திற்-கேற்பக் கதைத் தலைவி ஞானாம்பாளின் பிரதாபமே ஓங்கி நிற்கிறது. இந்நாவல் மூலம் அக்காலப் பெண்கள் நிலைபற்றி அறிய முடியவில்லையெனினும், அக்காலப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையையும், மறுக்கப்-பட்ட கல்வியையும் எண்ணியவராய்ப் பெண்கள் எத்தகைய செயல்களைச் சாதிக்க முடியும் என்று காட்டுவது போல் உள்ளது.

இந்நாவலில் வரும் சுந்தரத்தண்ணியும், ஞானாம்பாளும் ஆண்களைவிடவும் அன்பும் பண்பும் நிறைந்தவர்களாகத் திகழ்கிறார்கள் ; அறிவும் ஆற்றலும் அடக்கமும் உடையவர்-களாக விளங்குகிறார்கள் ; குதிரைவிடவும் அறிந்த அப்-பெண்கள் குடும்பம் நடத்துவதோடு, அரசாங்கத்தோடு விவாதித்து நியாயம் பெற்றும், அரசாட்சி புரிந்தும் சாகஸங்கள் புரிகின்ற பாத்திரங்களாக விளங்குகின்றனர்.

1879-இல் வெளிவந்த *கமலாம்மாள் சரித்திரம்* என்ற நாவலின் தனித்தன்மைக்கு 1972-க்குள் வெளிவந்த அதன் மறுமதிப்புக்களே சான்றாகின்றன. இந்நாவலின் தலைவி-யான கமலாம்பாளும் அவளது மகளான இலட்சுமியும் பெண்களுக்குக் கல்வியறிவு அணிகலனாக அமைவதோடு அரணாக உள்ளதையும் தெளிவுபடுத்துகின்றனர். பெருந்-துன்பங்கள் ஏற்பட்ட போது கல்வியறிவும் ஆற்றலும் மனப்-பக்குவத்தை அளித்ததாகச் சம்பவங்கள் புனையப்பட்டிருக்-கின்றன.

அ. மாதவையாவின் *பத்மாவதி சரித்திரமும் முத்து-மீனாட்சியும்* பெண்களை மையமிட்டே செல்கிறது. *முத்துமீனாட்சியில்* இந்திய விதவைகளின் துன்பங்-களைக் கூறுகிறார். *பத்மாவதி சரித்திரத்தில்* வரும் பத்மாவதியும், சாவித்ரியும கல்வி கற்றவர்களாக உள்ளனர் சாவித்ரியின் கணவன் ஓடிப்போய்த் திரும்பிய பிறகு இறந்து-போக, சாவித்ரி விதவையாக்கப்பட்டுத் தம்பி கோபாலனின் குடும்பநலனில் ஒன்றிப் போகிறாள். என்னதான் பத்மாவதி கல்வியறிவும், நற்குணமும் நிறைந்தவளாக இருந்த-போதிலும் கணவனால் சந்தேகிக்கப்பட்டுத் தீக்குளித்து *சீதையாகித்* தனது தூய்மையை நிரூபிக்கிறாள்.

எவ்வாறிப்பினும், தமிழின் தொடக்க நாவல்களில் பெண்களின் நிலைபற்றிய புதிய போக்கினைக் காண முடிகிறது. பெண்ணைப் பாலியல் அடிப்படையில் காணும் நோக்கு குறைந்து, சக்தியாகப் பார்க்கும் பார்வை பளிச்-சிடுகிறது. பெண்ணிற்குக் கல்வியும், உரிமையும், விடு-தலையும் வலியுறுத்தப்படுகின்றன; சாதி, சமயம், சடங்குகள் ஆகியவற்றின் பேரால் பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகள் சுட்டிக்காட்டப்பட்டு, அதற்கொரு தீர்வாகக் கல்வி காட்டப்படுகிறது.

இனி, தமிழ்நாவல்களில் இடம்பெறும் பெண்கல்வி, தொழில் உரிமை, ஆண்-பெண் உறவுநிலை அடிப்படைச்

சிக்கல்கள், பொருந்தாமணம், கற்புநிலை, ஆகியவற்றைப் பெண்ணிய நோக்கில் ஆராயலாம்.

கல்வி உரிமை :

தமிழின் தொடக்க நாவல்களில் வரும் பெண்கள் உரிமையும் விடுதலையுணர்வும் பெற்றிருந்தமைக்கு அவர்களது கல்வியறிவே அடிப்படையாகின்றது. இந்த அளவிற்கு அடுத்து வந்த நாவல்களில் பெண்கல்வி பேணப்படவில்லை என்றே கூறலாம்.

அகிலனின் துணைவியில் வரும் கல்யாணியும். மு. வரதராசனாரின் அல்லியில் வரும் அல்லியும் கல்வி கல்வி கற்றவர்களே ! எனினும் அவர்களது வாழ்வின் அவலத்திற்கு அவர்களது கல்வியால் எவ்விதத் தீர்வும் கூறப்படவில்லை; அத்தோடு பொறுமையும், சகிப்புத் தன்மையும் பெண்ணின் குணங்களாகப் போற்றப்படுகின்றன.

பெண்களிடத்து அதிகப் புகழ்பெற்ற லெஷ்மியின் நாவல் களில் வரும் கதைத்தலைவியர் கல்வி கற்றிருப்பினும் கணவர், புகுந்தவீட்டார் கொடுமை எல்லாவற்றையும் ஏற்று புகார் நகரக் கண்ணகிபோல் மௌனப் போர்வை போர்த்தியே உள்ளனர்.

தொழில் உரிமை :

பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக்கொள்ளத் தாம் விரும்பியபடி பற்பல பணிகளை ஏற்பதும், சொத்தில் பங்கு பெறுவதும் வோட்டுரிமை பெறும் தகுதியை உடையராகவதும் மிக முக்கியமானது என்று எடுத்துரைத்தார் பெண்ணியவாதியான மில் பெண்ணிற்குப் பொருளாதாரச் சுதந்திரம் உள்ளபோது ஆணாதிக்கம் சற்றே அடங்கியுள்ளது. இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் பெண்-

களுக்குச் சொத்துரிமை இருந்ததைப் பல்வேறு அரசகுலப் பெண்கள் தானமளித்ததை விளக்கும் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. '*மஞ்சக்காணி*' என்றே சொல்லே, பெண்பெறும் சொத்துரிமையைப் பறைசாற்றுகின்றது. தொடக்கத்தில் நிலவுடமையாக இருந்த இப்பொருளாதாரச் சுதந்திரம் நாளடைவில் கல்வி மூலம் கிடைக்கும் தொழில் உரிமையால் பெறப்படுகின்ற நிலை ஏற்பட்டது.

'எல்லாப் பெண்களுக்கும் மானமுள்ள தொழில் ஏதாவது செய்து பணம் தேடத் தெரிந்திருக்க வேண்டும். கல்வியும் தொழிலும்தான் பெண்களுக்கு ஏற்ற துணை' என்று அகிலன் *துணைவி* நாவலில் கூறுகிறார்.

இராஜம் கிருஷ்ணனின் *சுழலில் மிதக்கும் தீபங்களின்* நாயகியான கிரிஜா, கல்வியறிவு, ஆசிரியத்தொழில் அனைத்தையும் மறந்து இல்லத் தலைவியாக இருக்கிறாள். ஒரு கட்டத்தில் குடும்பத் தளையிலிருந்து விலகிச் செல்லும் அவளுக்குக் கல்வியும், ஆசிரியத் தொழிலுமே கைகொடுக்கின்றன. மற்றொரு நாவலான '*அழுக்கு*' - இல் கதைத் தலைவி அருணா தொழில் உரிமையால் சமூக நிர்ப்பந்தங்களிலிருந்து விலகி, இந்தியத் தலைநகரில் சுதந்திர வாழ்க்கை நடத்துவதும் இணைத்து எண்ணத்தக்கது. பாலகுமாரனின் *பந்தயப்புறா* நாவலின் கதைத் தலைவி தொழில் உரிமையால் தன்னம்பிக்கை உடையவளாகிறாள்.

ஆண் - பெண் உறவு நிலை :

பாலியல் சார்ந்த ஆதிக்கப் போக்கே பெண்ணடிமைத்தனம் வளர அடிப்படைக் காரணமாக அமைகின்றது. காலங்காலமாக ஆண்களின் பாலியல் ஆதிக்கம் பற்றிய அச்சம் பெண்களுக்குக் கற்பிக்கப்படுகின்றது. இந்தியா போன்ற நாடுகளில் மிகுதியும் உள்ளது.

பாலியல் சார் தொடர்பற்று ஆணும் பெண்ணும் நட்போடு இருக்க வாய்ப்புண்டா என்ற நோக்கில் எழுதப் பட்டது அகிலனின் *சிநேகிதி*! கஸ்தூரி, சேது இரு-வரையும் அவ்வாறு படைத்த ஆசிரியர் இறுதியில் அவ்-விருவரையும் பாலியல் தொடர்புடையவர்களாகச் சந்திக்க வைக்கிறார்.

பொருந்தா மணத்தால் ஆண் - பெண் உறவுநிலையில் ஏற்படும் சிக்கல்களை தி. ஜானகிராமன் அளவு விவரித்த நாவலாசிரியர்கள் இல்லை என்றே கூறலாம். தான் விரும்பியவனை மணக்க முடியாத குஞ்சம்மா, அவனுக்கே அண்ணியாவதால் ஏற்படும் பாலியல் சிக்கல்கள் *செம்-பருத்தி* நாவலில் விவரிக்கப்பட்டுள்ளன.

ஆணாதிக்கப் பாலியல் வன்முறைக்குப் பெண்கள் பலியாவதற்குத் தனி ஒரு சமுதாயமே (தேவரடியார்) இருந்தமையைத் 'தமிழ் நாவல்கள் காட்டுகின்றன. இவர்-களில் கூட கற்புக்கடம் பூண்ட பெண்களையே தமது படைப்புகளில் சுட்டி, (*ஆத்மாவின் ராகங்கள்* - மதுரம்; *பொன் விலங்கு* - மோகினி), அவர்களையும் மாதவி - கண்ணகியாக உயரும் மூலப்படிவ நிலைக்கே உயர்த்த முற்படுகிறார் நா. பார்த்தசாரதி.

கற்பு நிலை :

ஆணாதிக்கச் சமூகம் பெண்கள் மீது பூட்டப்பட்ட விலங்கே கற்பு என்பர் பெண்ணியவாதிகள். பெண்களுக்கு மட்டுமே உரிய கற்பு பாரதியாரால்,

> 'கற்புநிலை என்று சொல்லவந்தோம் - இரு
> கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்'

என்று சமநிலை நோக்கில் பாடப்படுகிறது. எனினும் சமூகத்திலும், அதனைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களிலும் '*கற்பு*' பற்றிய பழைய படிமமே பதிந்து கிடக்கிறது.

அகிலனின் *துணைவி* - யின் தலைவி கல்யாணியும் *அல்லியில்* வரும் தலைவி அல்லியும் கணவன் கோவலனாக இருந்தபோதும், மனதளவில் பிறிதோர் வாழ்க்கைக்கு வேட்கைப்பட்ட போதிலும், பொறுமையுடன் இருக்கும் பெண்களாகி உள்ளனர்.

கற்புநிலை பற்றிக் கூற வந்த ஆசிரியர் மு. வ. தொடக்கத்தில் ஒருவனுக்கு ஒருத்தி' என்று கூறியபோதிலும் *கரித்துண்டு* நாவலில்,

'ஒருத்தி ஒருவனை விட்டு இன்னொருவனுடன் வாழும் படியாக நேரலாம். ஒருவனை விடாமல் இன்னொருவனுடன் வாழ்வதுதான் தவறு. எப்போது எவனுடன் வாழ்கின்றாளோ, அவனுக்குத் துரோகம் செய்யாமலிருந்தால் போதும். அதுதான் கற்பு'.

-எனப் புது விளக்கம் தருகிறார். பாலகுமாரனின் *இரும்புக் குதிரைகள்* நாவலில் வரும் காயத்ரி மனவழி யாத்திரைக்கு வேட்கையுற்று அறிவுசார் நிலையில் தவறுவதும் அதனால் கற்புநிலைக்கு யாதொரு பாதகமும் இல்லை என்றும் கூறுகிறாள். பாலகுமாரனைப் பின்பற்றியும் வாசகர் கூட்டம் நாடியும் ஆண்-பெண் நட்பும், அதன் உச்சமாகப் பாலியல் உறவும், அதற்கொரு நியாயமும் கற்பிக்கப்பட்டு, *போலிப் பெண்ணிய நோக்கில்* பாலியல் கட்டவிழ்ப்பும், வருணனைகளும் நிறைந்த நாவல்கள் தமிழ் இலக்கிய உலகில் இடம் பெற்று வருகின்ற ஒரு தவறான போக்கே இன்றைய தமிழ் நாவல் உலகில் உள்ளது மறுக்க முடியாத ஒன்றாகும்.

ஜெயகாந்தனது நாவல்களிலான பெண்ணிய நோக்கு, தமிழ் நாவல்களில் ஊடாடும் பெண்ணியத்தைக் கணிப்பதற்குச் சிறந்த வழிமுறையாகும்.

கல்வியும் அறிவும்

ஜெயகாந்தனது பெரும்பான்மையான பெண்கள் சுய அறிவும், சுயசிந்தனையும் உடையவர்களாகவே இருப்பர். இதற்கு ஒரு *நடிகை நாடகம் பார்க்கிறாள்* நாவலில் வரும் கல்யாணி சான்றாகிறாள். *சில நேரங்களில் சில மனிதர்கள்* நாவலின் தலைவி கங்கா எம்.ஏ. பட்டம் பெற்றவளாகவும், அக்கல்வியறிவால் உரிமையோடு தொழில் செய்து சுதந்திர வாழ்வு வாழ்பவளாகப் படைக்கப்படுகிறாள். *பாரிஸுக்குப்போ* நாவலில் வரும் லலிதா படிப்பாளியாக மட்டுமன்றிப் படைப்பாளியாகவும் விளங்குகிறாள்.

கற்பு நிலை :

மு. வ. கரித்துண்டு நாவலில் கூறுவது போலக் குறிப்பிட்ட காலத்தில் ஒரு பெண் எந்த ஆணோடு வாழ்கிறாளோ, அவனுக்கு உண்மையாக இருப்பதே கற்பு என்ற கருத்து ஜெயகாந்தனது தொடக்க நாவல் களில் காணப்படுகிறது. இதனை *வாழ்க்கை அழைக்கிறது* நாவலில் வரும் தங்கமும், *உன்னைப் போல் ஒருவன்* நாவலில் வரும் அலமேலுவும் பிரதிபலிக்கின்றனர் ஆனால், இப் பெண்ணியக்குரல் இவரது நாவல் களில் காலப்போக்கில் வலுவிழந்ததைக் காணமுடிகிறது.

ஒரே ஒரு முறை சூழல் காரணமாகக் கெடுக்கப்பட்ட *அக்னிப்பிரவேச* 'அவள்', அவனையே தேடி அடையும் கங்காவாகச் *சில நேரங்களில் சில மனிதர்கள்* நாவலில் சித்திரிக்கப்படுகிறாள். அவனோடு திருமண உறவோ பாலியல் தொடர்போ இல்லாது தோல்வியுற்றவளாகக் '*கங்கை எங்கே போகிறாள்*' நாவலில் பேருருக் கொள்கிறாள். சமுதாயத்தால் மட்டுமின்றி, படைப்பாளியாலும் கங்கா சாபமேற்ற அகலிகையாகவே படைக்கப்படுகிறாள்.

என்னதான் பெண்கள் அறிவுசார் புலமையோடு விவாதித்தாலும், ஜெயகாந்தனது படைப்புக்களில் பெண்கள் மரபுசார் பதுமைகளாகவே உள்ளனர். இதற்குக் சுந்தரகாண்டம் நாவலின் நாயகி சீதாவும் மற்றொரு சான்றாகிறாள். தனது கணவனை இராவண னாக எண்ணிப் பிரியும் சீதா, தனிமை வாழ்வு ஏற்று அசோகவனச் சீதையாகவே தனது வாழ்வைத் தொடர் வதும் இணைத்து எண்ணத்தக்கது.

முடிவுகள் :

'தமிழ் நாவல்களில் பெண்ணியம்' என்ற இவ்வரைவு எல்லாத் தமிழ் நாவல்களையும் உள்ளடக்கியதன்று. எனினும் எடுத்துக் கொள்ளப்பட்ட நோக்கில், இன்றிய மையாத நாவல்கள் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில் பெறப்பட்ட முடிவுகள் வருமாறு :

○ மகளிரை மையப்படுத்தியும், பாலினக் கருத்-தாக்கத்தை அகற்றியும், பெண்ணடிமை, பெண்-ணுரிமை ஆகியவற்றை இலக்கியங்களில் கண்டறி வதும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வாகும்.

○ தமிழின் தொடக்க நாவல்களில் பெண்களைப் பாலியல் அடிப்படையில் நோக்காது பெருஞ்-சக்தியாகச் காட்டும் புதுமை உள்ளது. இத்-தன்மை (முழுமையாக) இன்றளவும் தமிழ் நாவல் களில் இல்லை என்று கூறலாம்.

○ தமிழின் தொடக்க நாவல்கள் போல் முழுமை யாகப் பெண்ணியம் இல்லையெனினும். கல்வி. தொழில் உரிமை, காதல், ஆண்–பெண் உறவு நிலை, கற்பு பற்றிய கருத்தாக்கங்கள் ஆங்காங்கு தமிழ் நாவல்களில் இடம் பெறுவதை மறுப்பதற்கில்லை.

○ இப்பெண்ணிய நோக்குநிலை அண்மைக்கால கட்டத்தில் முறை பிறழ்ந்து உள்ளது. கட்டற்ற பாலியல் உறவு, பெண்ணின் விடுதலை வேட்கையும், அறிவு வேட்கையும் நெறியற்ற வாழ்க்கைக்கு இட்டுச் செல்லல் என்ற *போலிப் பெண்ணியம்* தமிழ் நாவல்களில் மலிந்துள்ளமையே இன்றைய நிலைவாகும்.

○ பெண்ணிய நோக்கில் ஜெயகாந்தனது நாவல் களை ஆய்வு செய்யும் போது தமிழ் நாவல்கள் முழுமை யிலும் இடம் பெறும் *பெண்ணியக் கருத்தாக்கம்* (Feministic Idealogy) பற்றி அறிய முடிகிறது எனலாம்.

> 'என்னதான் கல்வி, விடுதலையுணர்வு
> அறிவாற்றல் பெற்றவர்களாக ஜெயகாந்தனது
> பெண்பாத்திரங்கள் படைக்கப்பட்டபோதிலும்
> அகலிகை, மாதவி எனப் பழைய படிவங்களில்
> அடைக்கப்பட்டு மரபுவழிச் சங்கிலியால்
> ஆசிரியரால் பிணைக்கப்பட்டு விடுகின்றனர்'.

இது, தமிழ் நாவல்களில் 'பெண்ணியம்' பெற்றுள்ள இடத்தை நமக்குத் தெளிவாக்குகிறது.

○ அம்பை, கிருத்திகா, ஆர். சூடாமணி, இராஜம் கிருஷ்ணன், வாஸந்தி ஆகியோரைப் போன்று பெண்ணின் அகவயப் பிரச்சனைகளும் தமிழ் நாவல்களில் இடம் பெறும்போது மரபுவழித் தளைகளும், போலி வாதங்களும் களையப்படலாம் என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

1. கந்தையா பிள்ளை ந.சி. பெண்கள் உலகம் 1960

2. பாக்கியமுத்து தி. (பதிப்) இலக்கியத்தில் பெண்கள் 1977

3. பொன்னி, மார்க்ஸியமும் பெண்நிலை வாதமும், 1988

4. மகாத்மாகாந்தி, சமூகத்தில் பெண்கள், 1984

5. பெண்ணியக் கலைச் சொல் விளக்கக் கையேடு

6. தேவதத்தா, 'பெண்ணியம் வரலாற்றுப் பார்வை' மேலும் Vol 10 1994

7. Padmini Sengupta, The history of women in India

8. ஜெயகாந்தன் மற்றும் ஆய்வில் குறிக்கப்பட்டுள்ள தமிழ் நாவல்கள்

பெண்ணிய நோக்கில் தாய்மை அல்லது தாய்மைத்துவம்

செ. சாரதாம்பாள்

'பெண்ணியம்' (Feminism) என்பது ஆணிற்கு எதிரான இயக்கமன்று. பெண் விடுதலை என்ற பெயரில் வாழ்க்கை வரம்புகளை மீறுவதும் - திருமண உறவுகளை நிராகரிப்பதும் தாய்மையின் தெய்வீகத் தன்மையை மறுப்பதும் இதன் நோக்கங்கள் அன்று.

இதற்கு மறுதலையாகப் பெண் என்பவள் போகப்பொருள் மட்டுமன்று, தனித்துவம் வாய்ந்தவள். சில அர்த்தமில்லா அடக்குமுறை, ஒடுக்குமுறைச் சக்திகளினால் பெண்களின் மதிப்புக்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் நசுக்கப்படும் பொழுது அதற்கு எதிராகக் குரல் கொடுத்து, பெண்ணின் தனித்துவத்தை, மகத்துவத்தை ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு உணரவைப்பதும், பெண்களின் மதிப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை வளரச் செய்வதும் இதன் நோக்கங்களாகும்.

1950களில் 'பெண்ணிய இயக்கம்' பெண் என்பவள் மனைவி, தாய் என்ற நிலைகளில் மட்டும் பார்க்கப்படுகிறாள் என்பதை எதிர்த்துக் குரல் கொடுத்தது. இதைத் தொடர்ந்து பெண் ஏன் தாயக்கப்பட்டாள்? என்ற வினா எழுந்தது. இதற்குக் காரணம் (1). அவளுடைய உடலியற்கை பொருத்தமாக அமைந்தது. (2) சமூகப் பாரம்பரியப் பெண்ணிய மரபறிவு பெண்களைப் பாலியல் பாங்கில் ஒரே மாதிரி இருப்பதாகக் காட்டியதுடன் பெண்கள் தாய்மை அடைதலே சிறப்பு எனக் கருதியது.

மேலும் பெண்ணுக்கும் ஆணுக்குமுரிய அடிப்படை வேறுபாடுகள் 1. தாய்மைக்குரிய இனப்பெருக்க முறை 2. பாலூட்டும் உயிர்கள் என்ற அடிப்படை நிலைகளில் பாகுபடுத்திக் காட்டப்பட்டன. இவ்வேறுபாடுகளும், பெண்ணைத் தாயாக மாற்றிய கருத்துருவும், பெண்ணுக்குச்

சுதந்திரமில்லா வாழ்வைக் கொடுத்ததுடன் சில அடக்கு-முறைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்தன. பெண்மையும் தாய்மையும் அதற்கு என்று ஒதுக்கப்பட்ட அடிவழக்குகள் சார்ந்தவை என்று கருதவைத்தன. எனவே தாய்மை, பெண்மை இவ்விரண்டிற்குரிய வேறுபாடுகளை நுணுகியறிவற்காகவும், தாய்மை என்பதிலுள்ள அனுபவங்களைக் கண்டறியவும், அவ்வனுபவங்களில் புதைந்துள்ள சில அடக்குமுறைகளையும் அடிமைத்தனங்களையும் வெளிக் கொணரவும் தாய்மைத்துவம் (Motherhood) என்ற அமைப்பு பெண்ணியவாதிகளால் மறுபரிசீலனை செய்யப்பட்டது.

புதிய பெண்ணியத் திறனாய்வு தாய்மைத்துவத்தை ஒரு நிறுவனம் அல்லது அமைப்பாகக் கண்டது. இதில் இனப்-பெருக்கமும் தாய்மைத்துவமும் (Reproduction and Mother hood), ஓரினச் சேர்க்கை - தாய்மைத்துவம் (Lesbian - Mother hood), தாய் மகள் உறவு (Relations between Mother & daughter) முதலியன முக்கியக் களங்களாகப் பேசப் பட்டன. இனப்பெருக்கம் தொடர்பான நிலையில் 'தாய்மைத் துவம்' என்பதற்கு, ஒரு நிறுவனம் என்ற அமைப்பிலும்' பண்பாட்டு ரீதியிலும், பாலின அமைப்பிலும் பல பொருள-மைதிகள் திறனாய்வாளர்களால் வரையறுக்கப்பட்டன. இக் கட்டுரையில், தாய்மைத்துவம் பற்றிய கருத்து விளக்கங்கள், 'ரிச்' என்பவரின் தாய்மைத்துவம் ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு என்ற கருத்துக்களின் தன்மைகள் முதலியன சுட்டிக்காட்டப்படுகின்றன. இத்துடன் ராஜம் கிருஷ்ணனின் 'வீடு' என்ற நாவலில் வரும் தாய் பாத்திரத்தில் வெளிப்படும் தாய்மைப் பண்பும் நோக்கமும் இவண் பொருத்திக் காட்டப்-படுகின்றன.

தாய்மைத்துவம் பற்றிய கருத்து விளக்கங்கள் :

குழந்தைப் பேற்றிற்குரியவள்; அக்குழந்தைகளைப் பேணிப் பாதுகாப்பவள்; குடும்பப் பொறுப்புடையவள்; உணர்வு ரீதி யானவள், எதற்கும் எந்நிலையிலும் ஒத்துப் போகும் தன்மை

யுடையவள்; குடும்பம் என்ற அமைப்பிற்குக் கட்டுப்பட்டவள் என்ற அனைத்துப் பண்புகளின் இருப்பிடம்தான் தாய்மைத் துவம் ஆகும்.

'தாய்மைத்துவம்' என்பது பொதுவாகப் பெண்களுக்குரிய அடிப்படைப் பண்பாகும். பெண்கள் உணர்வு ரீதியாக அடக்குமுறைக்குட்படுத்தப்பட்டு, அதே நேரம் பெருமை-யாகவும் பேசப்படுகிறார்கள். தாய்மைத் தொடர்பான இவ்-வகைக் கருத்துக்களை வெளிப்படுத்தும் களமாக தாய்மைத்-துவம் திகழ்கிறது.

ஜீலி **(Julie)** என்பவர் பெண்மை என்பதைத் தாயைப் பற்றியது. தாய் என்ற நிலையில் பெண்களின் மனப்பான்-மையையே திரும்பக் குறிக்கிறது. தாய்மைத்துவத்திலுள்ள, கொடிய முறையில் அடக்கியாளப்படும், ஒடுக்கும் பாங்கு களையுடைய பல பார்வைத் தளங்களை வெளியிடும் தன்மை யுடையது 'தாய்மைத்துவம்' என்கிறார்.

பெண்மையும் தாய்மையும் என்ற இரண்டும் ஒரே வட்டத் திலுள்ள இரண்டு வேறுபட்ட துருவங்களாகும். இவை ஏறக்-குறைய தொன்றுதொட்டு வரும் எல்லோருக்கும் வெளிப்-படையாய்த் தெரிகிற தன்மையுமாகும் என்கிறார் ஐன்ஸ்டீன் **(Einestein).**

எம். ரிவ்கா என்பவர் உண்மையில் மரபியல் வாய்ந்த பெண்கள் குழந்தைகளைப் பேணி வளர்த்தல், ஒத்துப் போதல், உணர்ச்சிகளுக்குக் கட்டுப்படுதல் முதலியவற்றைத் தனக்கேயுரிய தனமாக்கிக் கொள்கிறார்கள். எனவே தாய்-மைக்குரிய செயற்பாடுகளும் பெண்ணியமும் வேறுபட்டிருக்க வில்லை என்கிறார்.

ஆணாதிக்கச் சமுதாயத்தில், தாய் என்ற பெயரில் அவளைக் கண்டித்தற்கும், தண்டித்தற்கும் உரிய களமாகத் தாய்மைத்துவம் திகழ்கிறது என்றும் கூறுவர்.

பெண்ணியத் திறனாய்வாளர்கள் குழந்தைகளைச் சுமப்பதும், அவர்களை வளர்த்துருவாக்குவதும் தாய்க்குரிய ஒரு கடுந்தொழில் என்று கருதுகிறார்கள். ஏனெனில் இத்தன்மை பெண்களை வீட்டிற்கு மட்டும் உரியவர்களாக, பிள்ளை பெறும் இயந்திரச் சின்னமாகக் கட்டுப்படுத்துகிறது. இதுவே ஆண் ஆதிக்கத் தன்மையில் பெண்களைக் கீழ்நிலையில் இயங்கச் செய்யும் தன்மையை நிலைபேறுடையதாக்குகிறது. அத்துடன் பெண்களைச் சுதந்திரமாக அரசியல் போராட்டம், பொது அலுவல்கள் முதலியவற்றில் கலந்து கொள்ளும் சுதந்திரத் தன்மையைத் தடுக்கிறது என்றும் விரித்துரைக்கின்றனர்.

தாய்மை என்பது ஒரு பெண்ணுக்கு மகப்பேறு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. அதே நேரத்தில் சமுதாயத்தில் இம்மகப்பேறு பெண்ணுக்கு ஒரு மதிப்பிழந்த தன்மையையும் பயமுறுத்தல் நிலையையும் (Fearing Status) உருவாக்குகிறது என்கிறார் கிரிஸ்ட்வா.

சமுதாயம் தாய்மையை உள்ளார்ந்த பாலியல் உறவுடைய பெண்ணாகவும் பார்க்கிறது, அதே நேரம் தந்தைவழிச் சமுதாயத்தினால் (Patriorchial Society) ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள அடிப்படை வேறுபாடு தாய்மை வழிதான் கற்பிக்கப்படுகிறது. இதை மையமாகக் கொண்டு சமுதாயத்தில் தாய்மையற்ற பெண்கள் சில சமுதாயப் புறக்கணிப்புக்களையும் வெறுப்புக்களையும் சந்திக்கிறார்கள். இவ்வாறு சமுதாயத்தில் தாய்மை என்பதை மையமாக வைத்துப் பெண்களைக் கீழ்நிலைக்கு ஒதுக்கிப் புறக்கணிப்பதையும், வேறுபடுத்துவதையும், இகழ்வதையும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் கண்டிக்கிறார்கள்.

தாய்மைத்துவம் என்ற பண்பிற்கு அளிக்கப்படும் உயர்ந்த நிலையானது ஒரே மாதிரி வகைப் பெண்களை (Stereotype1 Women) உருவாக்குகிறது.

பெண், குழந்தைகளை உருவாக்கி வளர்ப்பவள்; ஆணாதிக்கச் சமுதாயம் இத்தன்மையினால் பெண்களை முதன்மைப்படுத்த உடன்படுகிறது. பெண்ணைத் தம் செல்வாக்கிற்குட்படுத்தவும், தம் காரியங்களை அதன் மூலம் சாதித்துக் கொள்ளவும் அவளை அடக்கியாளவும் இத்தன்மையையே ஒரு சின்னமாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

தாய்மைத்துவம் பற்றிய அட்ரின் ரிச் (Adrienne Rich) கருத்துக்கள் :

அட்ரின் ரிச் தாய்மைத்துவத்தை 1. அனுபவம் (Experience) 2. நிறுவனம் அல்லது அமைப்பு (Institution) என்ற இரண்டு தன்மைகளில் வைத்துக் காண்கிறார்.

தாய் என்பவள் பல உணர்வு அனுபவங்களைக் கொண்டவள். அவ் அனுபவங்களின் ஒட்டு மொத்தக் குவியல்களும், அவற்றின் வழி எழும் உடன்பாட்டு எதிர்மறைக் கருத்துக்களும்தான் அவளைத் 'தாய்மை' என்ற அமைப்பாகத் திகழச்செய்கின்றன. அனுபவ உணர்வுகளே 'தாய்மை' என்ற மொத்த அமைப்பை உருவாக்குவதால், இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1. தாய்மை அல்லது தாய்மைத்துவத்தைப் (Motherhood) பெண்களின் உயர்தனிச் சிறப்பாகப் பார்ப்பதற்குரிய காரணங்கள்.

2. அனுபவங்களும் அடிமைத்தனங்களும்.

3. நிறுவனம் அல்லது அமைப்பு (Institution) க்குரிய கூறுகள்.

4. அடிமைத்தனப்படுத்தும் தந்தைவழிச் சமுதாயப் பண்புகள்.

5. அடிமைத்தனத்திலிருந்தும் தாய்மைத்துவத்திலிருந்தும் விடுபடுவதற்குரிய (Free from Motherhood) வழிமுறைகள் என்ற நிலைகளில் 'ரிச்' விவாதிக்கும் தாய்மைத்துவம் பற்றிய கருத்துக்கள் அமைகின்றன. அவை பின்வருமாறு :

தாய்மைத்துவம் என்று உயர்தனிச் சிறப்பாகப் பார்ப்பதற்குரிய காரணங்கள் :-

தாய்மையின் இனப்பெருக்கத்தன்மை (Reproduction of Motherhood) அவளுக்கும் குழந்தைக்கும், குடும்பம் என்ற அமைப்பிற்கும் தீவிர ஆற்றல் வாய்ந்த உறவுமுறைகளை அளிக்கிறது.

இனப்பெருக்கம் அல்லது குழந்தைப்பேறு என்ற ஆற்றலே பெண்களை, ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக ஆக்குகிறது. எனினும் இவை இரண்டும் தாய்மைத்துவத்திற்குரிய தனிச்சிறப்புக்களாகக் கருதப்படுதற்குரியன.

பெண்களின் தாய்மை அனுபவத்தையே தந்தைவழிச் சமுதாயம் பின்னர் ஒரு நிறுவனமாக வேறுபடுத்திக் காட்டுகிறது.

பெண்களின் இனப்பெருக்கத்திற்குரிய திறமைகளையே தாய்மை என்ற நிலையில் காரணம் காட்டி தந்தைவழிச் சமுதாயம் அவளை அடக்குமுறைக்கு உட்படுத்தியிருப்பதைப் புலப்படுத்திக் காட்டுகிறது, தாய்மைத்துவம்.

அனுபவங்களும் அடிமைத்தனங்களும் :-

தாய்மை அல்லது தாய்மைத்துவம் என்ற பண்பமைப்பில் உருவாகும் அனுபவங்களைப் பெண்கள் தமக்கே உரியதாக நினைக்கும் உடைமைத்தன்மையும் அம்முயற்சியும் அடிமைத்தனத்திற்கு வழிவகுக்கின்றன.

'தாய்மை' என்ற பெயரில் ஆணாதிக்கத்தின் கீழ் இன்பத்திலும் துன்பத்திலும்தான் அதிகப் பெண்கள் மூழ்கியிருக்கிறார்கள். அதே நேரம் 'தாய்' என்பவள் குழந்தைகளைப் பெறுவதிலும் பேணுவதிலும், வளர்த்துருவாக்குவதிலும் தன்னிறைவும், உள்ளார்ந்த மகிழ்வும் பெறுவதைச் சில பெண்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். இம்மகிழ்ச்சி ஒன்றைக் கருதியே தாயாக இருப்பது தண்டனைக்குரிய வேலை; இவ் ஒடுக்கப்பட்ட நிலையிலிருப்பது தாய்க்குத் தேவை இல்லை. அதைவிடத் தாம் எந்நிலையிலிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு தாயும் உணர வேண்டும் என்கிறார் ரிச்.

மகப்பேறு (Maternity) என்பதும் தந்தைவழிச் சமுதாய ஆட்சிமுறை அமைப்பிற்கும், பல்வேறு சமூக இனங்களுக்கும் உள்ள உயிர்நாடி அல்லது மூலாதாரக்கூறு ஆகும்.

பெண்களின் இனப்பெருக்கத் திறமையே (Power of Reproduction) அவர்களைச் சமுதாயம் அடிமைப்படுத்துவதற்குரிய அடிப்படைக் காரணமாகும்.

தாய்மை என்ற நிறுவனம் அல்லது அமைப்பில் பார்க்கப்படும் முக்கியக் கூறுகளாவன :

தாய்மைத்துவம் என்ற அடிப்படையில் பார்க்கப்படும் நிறுவனம் அல்லது அமைப்பு என்பது ஓர் அரசியல் அமைப்பன்று; தாய்மைக்குரிய உணர்வுக்குவியல்களையும், விளைவுகளையும் ஒன்றாகக் குவித்துப் பார்க்கக் கூடிய ஒரு தளமே நிறுவனம் என்ற அமைப்பாகும்.

நிறுவனம் அல்லது அமைப்பு தாய்மையின் அனுபவங்களையே அடித்தளமாகக் கொண்டுள்ளது. ஆனால் சமுதாயத்தில் அவ் அனுபவங்களுக்கு அளிக்கப்படும் வன்மை, மென்மைகளை இந்நிறுவனம் என்ற அமைப்பு வழி பெண்ணியத் திறனாய்வு அலசி ஆராய்கிறது. நிறுவனம் என்ற அமைப்பால் தாய்மைத்துவத்திற்குரிய அனுபவங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை; தாய்மைத்துவப் பண்பை நீக்கவுமில்லை; மறுக்கவு

யில்லை;, மாறாக தாய்மைத்துவப் பண்பமைப்பிலுள்ள அனுபவங்களையும் திறமைகளையும் சமுதாய நோக்கில் நன் முறையில் வலுப்படுத்தவும், வெளிக்கொணரவும் விரும்புகிறது.

'ரிச்' தாய்மை என்ற அனுபவங்களிலிருந்தும் அதைப் பற்றிய சமுதாய நோக்கிலிருந்தும் பெறப்படும் சில கருத்துக் களைத் 'தாய்மை' என்ற அமைப்பிற்குரிய இன்றியமையாக் கூறுகளாகக் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறார்:

1. கற்பழிப்பும் அல்லது பாலுறவு வன்முறையும் அதன் விளைவுகளும்.

2. திருமணம் என்ற அமைப்பானது பொருளாதாரம் சார்ந்தது; அவனுடைய குழந்தைக்கு அவனே முழுக்க முழுக்கப் பொறுப்பு அல்லது உத்தரவாதம் என்பதையும் உணர்த்துதல்.

3. பெண்கள் தொடர்ந்து அன்புக் கட்டுப்பாடுகளிலும் தாழ்வு மனப்பான்மையிலும் இருத்தல்.

4. சமூகப் பயன்களை முழுதும் பெறாதிருத்தல்.

5. தினக்கூலி என்ற நிலையில் பெண்கள் அங்கு முழு வேலை செய்தாலும் ஆண்களுக்கு இணையான சம்பளத்தைப் பெறாதிருத்தல்.

6. பெண்கள் எப்பொழுதும் ஆணையே சார்ந்திருக்க வேண்டும் என வற்புறுத்துதல்.

7. கூட்டுப் பொறுப்புணர்வின் கட்டுப்பாடுகளும் வரை முறைகளும் (Solidarity confinement) முழுநேரத் தாயாக இருக்க வைத்தல்.

8. குடும்பத்தில் குழந்தைகளைக் கவனிப்பதில் ஆண்கள் குறைந்த அளவு பொறுப்பைப் பெற்றிருந்தாலும், அவர் களுக்கே தந்தை என்ற முழு உரிமையையும் (totally father hood and Privilege) சலுகையையும் அளித்தல்.

9. பெண்கள் எப்பொழுதும் வலிமையிலும் அறிவிலும் குறைந்தவள்; அறியாமை நிறைந்தவள் என்று வழிவழியாகக் கற்பிக்கப்படும் ஊகம்.

10. குடும்பத்தில் பெண்களுக்கு என வரையறுக்கப்பட்டத் தீவிர உணர்ச்சிச் சுமைகள் போன்றவை 'தாய்மை' என்ற அமைப்பிற்குரிய கூறுகளாகும்.

இக்கருத்துக் கூறுகள் பெண்களை மொத்தத்தில் குடும்பம் என்ற அமைப்பில் திறமையற்றவர்களாகவும், உணர்வுகளில் ஆட்பட்டவர்களாகவும் காட்டுகின்றன.

இந்நிலையை மாற்றியமைக்க வேண்டும். இதற்குப்பெண்கள் எப்பொழுதும் பாதுகாப்பற்றவர்கள் என்ற கருத்துடையவர்கள்; தீவிர உணர்வுத்திறமுடையவர்கள்; பிறரைச் சார்ந்திருப்பவர்கள் என்று அவர்களையறியாது உள்மனத்தில், எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; என்பதை முழுமையாக உணரச் பெறச் செய்ய வேண்டும்.

மேலும் ஆணின் அதிகாரப் பிடிக்குள் இருக்கும் தன்மையைத் தடுக்க அதற்குரிய ஆற்றலைப் பெருக்குவதுடன், அவ்வாற்றலை உறுதியாகத் தம்முள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். திறமையையும் விழிப்புணர்வையும் வளர்ப்பதுடன், குடும்பத்தில் எதையும் தானே நிர்வாகம் செய்யும் தகுதியை தாய்மைத்துவம் என்ற பண்பின்வழி வளர்க்க வேண்டும்,

அடிமைத்தனைப்படுத்தும் தந்தை வழிச் சமுதாயத் தோற்றமும், பண்புகளும் :

தாய்மைத்துவம் என்ற அமைப்பாக்கப் பண்பிற்கு, தந்தை வழிச் சமுதாயத்தின் அடக்குமுறைகளே அடிப்படைக் காரணங்கள் என்பதால், தந்தைவழிச் சமுதாயத்தின் தோற்றப் பண்புகளைப் பின்வருமாறு 'நிச்' விவாதிக்கிறார்.

தந்தைவழிச் சமுதாயம் என்பது திறமைகளைப் பற்றிய ஓர் அமைப்பே. தந்தைவழிச் சமுதாயத்தில், பெண்களின்

சிறப்புத் தன்மைகளை அவள் வலிமைகளைக் குறைவுபடுத்து வதும், தாழ்த்துவதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு குலத்தலைவியிடம் சமுதாயத்திற்கிருந்த நம்பிக்கையே அடிப்படைக் காரணம் என்கிறார்.

முற்காலத்தில் கைனோ சென்ட்ரிக் பண்பு' (Gyno centric culture) இருந்தது. இது பெண்களை நம்பிக்கைகளின் அடிப் படையிலும் சமூக அமைப்பிலும் மையப்படுத்தப்பட்டிருப்பதைக் காட்டும் ஓர் அமைப்பாகும். முந்தைய பெண்தெய்வ வழி பாட்டில், பெண்களுக்கே உரிய, மகப்பேற்றுத் திறன்(Capacity for give birth) போற்றப்பட்டது. அது மதிப்பையும் மலைப்பை யும் (அதிர்ச்சியையும்) கொண்டதாகக் கருதப்பட்டது. அத்துடன் பெண்மைத் தன்மையே வளமையையும் செழுமையையும் அளிக்கும் குறியீடாகவும் எண்ணப்பட்டது. பெண்கள் மூலசக்தி யாகவும் கருதப்பட்டனர். ஆனால் இம்முறைகள் தந்தைவழிச் சமுதாய விதிகளால் (Patriorchial Rule) குழி தோண்டிப் புதைக்கப்பட்டன.

உளவியல் ரீதியில் தந்தைவழிச் சமுதாயம் பெண்களைத் துணைவகையாகவே (Subgroup) கருதுகிறது. தந்தைவழிச் சமுதாயத் தன்மை பண்பட்ட அறிவுநிலைக்குச் (Intellectual Culture) சமமானது. இதுவே உண்மையான உலகம் என்றனர். ஆண்களைப் பல நிலைகளில் பொதுமைப்படுத்திக் காட்டியது. ஆனால், பெண்களைத் தாய், சகோதரி, பேணிப் பாதுகாப்பவள் என்று ஆங்காங்கு குறிப்பாகச் சுட்டியது. இப்பகுப்புகள் எல்லாம் பெண்ணுக்கு ஒரு புறச்சார்வுத் தன்மையை அளித்-தலையே காட்டுகிறது. எனவே பெண்களைப் பற்றி இரண்டாம் நிலையிலோ, அல்லது துணைமை வகையாகவோ சுட்டும் தன்மை மாற்றப்பட வேண்டும். பெண்களுக்கு முதன்மைத் தன்மை கொடுப்பதுடன், பெண்கள் சிறப்புக்குரியவர்கள் என்று அதிகாரப் பூர்வமாக பெண்களைப் பற்றி முழுமையாக எடுத்துக் காட்ட வேண்டும்.

மேலும் சமுதாயம், பண்பாடு பற்றிய பொருள் வேறுபாடுகளும் விவாதங்களும் ஆண், பெண் என்ற இரு இனத்திற்குரியதாகச் சொல்லப் பட்டிருந்தாலும், சமுதாயத்தில் ஆண் தான் முதன்மைப்படுத்தப் படுகிறான். நமது எழுத்து ஒழுக்க வரலாறுகளில் ஆண்களின் ஊகம் தான் முதலில் உருப்படுத்தப் பட்டுள்ளது.

உலக மனித அனுபவங்களிலிருந்து ஆணியப் பார்வையாளர்கள் அவர்களுக்குச் சாதகமான கூறுகளை மட்டும் எடுத்துக் கொண்டனர். பெண்களைப் பற்றிய பார்வை குறுகலாகவும், தற்சார்பில்லாப் பார்வையற்றதாகவும் இருந்தாலும், பெண்களைப் பற்றிக் குறைவாகவோ சிறுபான்மை நிறைவாகவோ எண்ணுவதில் மேலாதிக்கம் பெற்றிருந்தனர்.

எனவே தந்தைவழிச் சமுதாய விதிகளைத் (Patriorctial rules) தூக்கி எறிய மறுபடியும் இலக்கியத்தில் கைனோசென்டிரிக் முறை வரவேண்டும், என்று 'ரிச்' வலியுறுத்துகிறார்.

அடிமைத்தனத்திலிருந்தும் தாய்மைத்துவ அமைப்பிலிருந்தும் விடுபடுவதற்குரிய விதிமுறைகள் (Free from Mother wood) :

ஆண்களின் அதிகாரபலமே ஆதிக்கமாக மாறி இருக்கிறது. அவ்வதிகாரப் பலத்திற்கு முன் பெண்கள் குறிப்பிட்ட இடத்தை வகித்துத் தம்பலத்தை — திறனை நிர்ணயம் செய்ய வேண்டும். சமுதாயத்தில், தம் திறன்களை, தம் இடங்களை நாடியறிந்து உணர்வுகளைப் பண்படுத்த வேண்டும்.

பெண்கள் பற்றிய வரலாற்று மூலம்களை, பண்பாட்டு வரலாறுகளை நாமே எழுதியளிக்க வேண்டும். அதில் பெண்களைத் துணை நிலையாக (Subgroup) ஆண்கள் காட்டிய தன்மைகளைத் தவிர்க்க வேண்டும்.

பெண்கள் சமுதாயத் தர நிலைகள் அனைத்திலும் ஈடு இணையற்ற நிலைக்கு உயர வேண்டும். அதற்கு அனைத்துத் துறைகளிலும் (குழந்தைக் கட்டுப்பாடு, குழந்தையை உருவாக்குவது போன்றவற்றிலும் கூட) புதிய முறைகளை, தொழில் நுட்பங்களைச் சுதந்திரமாக கட்டுப்பாடுகளில்லாது பின்பற்ற வேண்டும் என்கிறார்.

பெண்கள், தாய்மைத்துவம் என்ற உணர்வுக் குவியலில் அடிமைப்படுத்தப்பட்ட அமைப்பை அழிக்க வேண்டும்.

பெண்களைப் பற்றி முழுமையான உளவியல் அமைப்பை உருவாக்க வேண்டும், அதில் தனது உடலியல் அமைப்பை முழுமையாக — உணர்ச்சிப்பூர்வமாக தானே அறிதல் வேண்டும். உளவியலமைப்பு பெண்களின் இனப்பெருக்க முறைகளுடன் தொடர்பு பட்டிருப்பதை உணர்த்துதலும் அவசியமானது.

இனப்பெருக்க அமைப்பிருந்தாலும், பெண்களுக்கு அவர்களுடைய உடம்பின் மீது அவர்களுக்குரிய உரிமையை அவர்கள் நிலை நாட்டிக் கொள்ள வேண்டும். இது மனித சமுதாயத்தை மாற்றுவதற்கு முக்கியமான ஒன்றாகும்.

உலகத்திற்குரிய புதிய கொள்கைகளைப் படைத்து அறிவுறுத்தும் படைப்பாளராகவும் ஆக வேண்டும், பெண்கள். படைப்பு ரீதியாகச் சிந்திப்பது மட்டுமின்றி, பாலியல், அரசியல், புலனறிவு, சக்தி, தாய்மை, வேலை அல்லது பணி, சமுதாயம், நெருக்க உறவு (Intimacy), சமுதாயத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் முதலியன இன்றியமையாதவை.

ஆணாதிக்க சமுதாயம் வரையறுத்த எல்லைகளிலிருந்தும், தாய்மைத்துவத்திற்குரிய தீவிர மன உணர்வுகளிலிருந்தும், தாய்மையற்ற நிலை, பொருளாதாரத்தில் ஆணுக்குச் சமமில்லாத நிலை போன்ற தாழ்வு மனப்பான்மை உணர்வு-

களிலிருந்தும், தீவிர மாற்றமும் விழிப்புணர்வும் பெறுதலும் இன்றியமையாத ஒன்றாகும்.

படைப்புக்களில் பெண்களின் உணர்வுகள் மையப்படுத்தப்படுவதுடன், அந்த உணர்வுகளைப் பெண்களுக்கு (வாசகர்களுக்கு) வலியுறுத்த வேண்டும். அத்துடன் அவ்வுணர்வுகளை அறியச் செய்வதில் ஆர்வத்தையும் படைப்புகளில் தூண்ட வேண்டும் என்று விரித்துரைக்கிறார் 'ரிச்'.

இவ் அணுகுமுறைகள் படைப்பாளர் — வாசகர் — பெண்கள் முதலியோர் கடைப்பிடிக்கும் முக்கோண நிலைகளில் அமைகின்றன.

இம்முறைகள் விழைவுக் கற்பனை மாற்றமாகச் (Utopian change) சிலருக்குத் தோன்றலாம். எனினும் இன்றைய அடக்குமுறைச் சமுதாயத்தில் புதிய சமுதாயப் பண்பாட்டு விழிப்புணர்வை உண்டாக்க இம்முறைகள் தேவைப்படும். இதன்வழிப் பெண்மைக்குரிய அனைத்துப் பண்புகளிலிருந்து விடுபடவோ, தீய அடக்குமுறை விளைவுகளை உண்டாக்குவதோ இதன் நோக்கமன்று; தாய்மைத்துவம் — பெண்ணடிமை என்ற அடக்குமுறை உணர்விலிருந்து மீண்டு நல்ல விளைவுகளை உண்டாக்கவே பயன்படவேண்டும் என்பதில் கவனமாக இருத்தல் அவசியம் என்கிறார்.

தாய்மைத்துவத் தொகுப்புரையும் வீடு நாவலில் தாய்-பாத்திரம் படைப்பும்;

'தாய்மை' என்ற நிலையில், பெண்களும் தாயும், தந்தைவழிச் சமுதாயத்தில் அடிமைப்படுத்தப்படுதல், கீழ்-நிலையாக்குதல், துணைநிலையாகப் பயன்படுத்தபடுதல் பாலியல் உணர்வுகளுக்குட்படுத்தப்படுதல், பிள்ளை பெறும் சாதனமாகவும் போகப் பொருளாகவும் கருதப்படுதல் என்ற பல நிலைகளில் காட்டப்படுகிறார்கள். மேலும், ஆணுக்கிணையான பொருளாதாரமின்மையும், வலுவின்மையும்,

செயல்பாடுகளில் பின்னடைந்திருப்பதும் தாய்மை என்ற நிலையில் பெண்களை அடிமைத் தனத்திற்குட்படுத்துகிறது. இவ்வடிமைத்தனம் மாற, முதலில் தாய்மை என்ற முதன்மைத்துவ கற்பனை — தீவிர உணர்வுப் பந்தங்களி-லிருந்து விடுபட வேண்டும்.

'தாய்மை' என்ற உணர்வுதான் அவளைத் 'தாய்மைத்துவம்' என்ற நிறுவனமாகக் காட்டுகிறது. எனினும், தீவிர உணர்வு பந்தங்களுக்கு ஆட்படாதிருந்தால் தான் அத்தாய்மைத்துவம், அடிமைத்தனத்திற்கு உட்படுத்தப்படாத நிறுவனமாக இருக்க முடியும் என்பார் 'ரிச்'.

'ரிச்சின்' விவாதங்கள் தாய்மைத்துவப் பண்புகளையோ, குழந்தைப் பேற்றை அழிக்கவோ வற்புறுத்தவில்லை. இதற்கு மாறாக அவர் அத்தாய் புதுவிடுதலை உணர்வுகளைப் பெற வேண்டும்; விழிப்புணர்வுடன் சிந்திக்க வேண்டும்; அப்பொழுது தான் அடிமைத்தன உணர்வின்றி, எதிர்காலத்தில் வாழமுடியும் என்கிறார்.

ராஜம் கிருஷ்ணன் 'வீடு' என்ற நாவலில் வரும் 'தேவி' என்ற தாயப்பாத்திரப் பண்பு இவண் குறிப்பிடத்தக்கது.

'தேவி' குடும்பப் பொறுப்பில் உழலும் தாயாக, மனைவி-யாகக காட்டப்படுவதுடன், குடும்பம் என்ற அமைப்பைவிட்டு விழிப்புணர்வு கொண்ட, சமுதாய மாற்றம் விரும்பும் பெண்ணாகவும் படைத்துக் காட்டப்படுகிறாள்.

தாயாக :

தேவியின் மகள் நளினி தன் தாயின் உணர்வுகளை மதிக்காதிருந்தாலும், தேவி தாய் என்ற நிலையில் அவளுக்கு ஒரு குறையும் வைக்காது கவனிக்கிறாள்.

இதுபோலத் தன் மகன் துரையைத் தன் கணவன் வெறுத்தாலும், தாய் என்ற நிலையில் அவன் மீது குறைவிலா

அன்பு செலுத்துகிறாள். அவன், தன் உணர்வுகளுக்கு - தன் பேச்சுகளுக்கு மதிப்பு கொடுக்கும் மகனாக இருப்பான் என்று நம்புகிறாள்.

மனைவியாக :

குடும்பம் என்ற அமைப்பில் மரபு தழுவிய பெண்ணாக-கணவனுக்குக் கட்டுப்பட்ட மனைவியாக இருக்கிறாள். வேலையிலிருந்து ரிடையர் ஆன பிறகு, தன்னை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்ற தாழ்வு மனப்பான்மை உள்ள தன் கணவனுக்கும் அவனுடைய கடுஞ் சொற்களையும் பொருட்படுத்தாது அவனுடைய மன உணர்வுகளை உணர்ந்து உணர்ந்து பணிவிடை செய்கிறாள்.

இவ்வாறு குடும்ப அமைப்பில் கட்டுப்பட்டப் பெண்ணாக இருந்தும், கணவனின் நிராகரிப்பும், உதாசீனப்படுத்தும் தன்மையும். குத்தலான பேச்சுகளால் அவளை அடிமைப்-படுத்தித் தனக்குப் பணிய வைக்கும் நிலையும், தன் பிள்ளைகள் கூட அவள் உணர்ச்சிகளை மதிக்காத தன்மையும் அவளைத் ‘தாய்மை’ என்ற நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வெளியேற அவளை நிர்ப்பந்திக்கின்றன.

‘தேவி’ தாய் என்ற நிலையிலிருந்து, பிள்ளைகளைக் கவனிக்கவும், தன் கணவன் வேலையிலிருந்து நின்ற பின்பு, வீட்டில் தையல் கற்றுக் கொடுத்தும், வெளியில் தையல் வேலைக்குச் சென்றும் பொருளாதாரப் பற்றாக் குறையை ஈடுசெய்கிறாள்.

ஆனால், அதுவே அவள் கணவனை தேவி எல்லா-வற்றிலும் தலைமைத்துவம் பெற்றுத் தன்னை நிராகரிக்கிறாள்: என்று எண்ணவைக்கிறது. வேலைக்குச் சென்று அவள் சம்பாதிப்பதால் தான் இந்நிலை என்று அவளிடம் அவள் கணவன் பலமுறை சொல்லியும் காட்டுகிறான். தன் கணவனை

வேறுபாடுமின்று மதிக்கும் பொழுதும், தன்னைத்-தன் தனிப் பட்ட உணர்வை அவன் ஒருகாலும் மதிக்காதது அவள் மனத்தில் தீராத வருத்தமாகவே இருக்கிறது.

இந்நிலையில் தன் தங்கை கடிதத்தைப் பார்த்தவுடன் அவளின் உடைமைப் பொருளை — தையல் இயந்திரத்தை உடைப்பது தேவியின் மனத்தை மிகவும் நோக வைக்கிறது. அந்நிலையிலும் பக்கத்து வீட்டிற்கு எதுவும் தெரியவிடாமல் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றும் தாயாக-மனைவியாக அக்குடும்ப உறவில் பின்னிப் பிணைந்து நிற்கிறாள்.

ஆனால், இவள் வேலையின் பொருட்டு வெளியில் செல்வதும் ரமணியம்மாள் போன்ற சமூகச்சேவகியின் பழக்கமும், "பொதுவாகப் பெண்ணின் சிறப்பியல்பு, மக்களைப் பேணி, அரவணைத்து, அன்பு செய்யும் பாங்காக இருக்கிறது. பொறுமையும், திறமையும் தேவையற்ற அதிகார ஆணைக்கு ஒடுங்கும் வரையறைகளிலும் தான் விரையமாக்க வேண்டுமா? குடும்ப வரையறைகள் சமுதாயம் என்று அகலட்டுமே. (வீடு. ப, 11) என்ற ரமணியம்மாளின் சமுதாய விழிப்பு உணர்வு குறித்த பேச்சுகளும் அவளை உணர்வு பூர்வமாக பெண்களின் நிலையைச் சிந்திக்க வைக்கின்றன.

அதே சமயம் தனது தோழி திரிவேணியின் மகள் ரஞ்ஜனியின் உறவும்-தனித்துவம் விரும்பும் அவளது கொள்கைப் பிடிப்பும், இந்தச் சமுதாயம் "ஒரு ஆணுக்குக்குச் சொந்த-மாக, சொத்தாக இருப்பதைத் தான் அவளுக்கு உகந்ததாக விதித்திருக்கிறது. அவளுக்குத் தனித்துவம் எங்கே இருக்கிறது" என்ற அவளது பேச்சுக்குகளும் தேவிக்குத் தன்னையே ரஞ்ஜனி தன் உரையாடலில் நினைவூட்டுவதாக எண்ணுகிறாள். அவளது தனித்துவ நோக்கு தேவிக்கு மிகுந்த விழிப்புணர்வை அளிப்ப-துடன் தன் உணர்வுகளின் வெளிப்பாட்டிற்கு ஒரு வடிகாலாகவும் அமைகிறது.

தேவியின் உணர்வுகளை மதித்த ரஞ்ஜனியும் வீட்டை விட்டுச் செல்லுகிறாள். அப்பிரிவு வருத்தமும், தன் விட்டாரின் புறக்கணிப்புககளும், அவளை ரஜ்ஜனியிடம் ''நானும் உன்கூட உறாஸ்டலுக்கோ. எங்கோ, வரட்டுமா'' (வீடு. ப. 202) என்று கேட்க வைககிறது. அதற்கு ரஜ்ஜனி ''கொஞ்சம் பொறுத்துக் கோங்கோ ஆண்ட்டீ .... காலம் காலமான அமைப்பை அது இடிஞ்சு விடும் நிலையில் புரையோடிப் போயிருந்தாலும் நீங்க இப்படி முன்னேற்பாடில்லாத நெழ்ச்சியிலே மாற்றிவிட முடியாது. எங்கம்மா உணர்ச்சி வசப்பட்டாள். நீங்க அப்படி இல்ல. இது உயரில்லா கட்டிடம் இல்ல; உயிருள்ள ஸ்தாபனம் மாதிரி.'' (வீடு. ப. 203) என்று மொழிகிறாள். இதன் வழி ஆசிரியர், வீடு என்ற ஸ்தாபனத்தை எதிர்த்துப் போராடும் தாயையே இங்கு காட்டுகிறார்.

மேலும் தன் மகன் துரை ரஞ்ஜனிக்கு வாழ்வு கொடுப்பான் என்று சம்மதம் கேட்ட பொழுது அவன் மறுப்புணர்வு அவள் மனத்தை ஆழப் பாதிக்கிறது. அப்பொழுது ''ஆயிசு முழுக்க அப்ப நான் கல்லாய் உணர்ச்சியில்லாத அடிமையாக இருக்கணுமா? எனக்கும் எத்தனையோ; ஆசையிருக்கு வாயிருந்-தும் வரவில்லை. அதனால் தான் மனசு வெறுத்து வெளியில் போனேன்'' என்கிறாள். இப்பேச்சுக்கள் குடும்பத்தில் தன் உணர்வுகள் மதிக்கப்படாது, தனித்துவம் இழந்து தாய் மனைவி என்ற நிலையில் அடிமைப்படுத்தப்பட்ட தன்மையையே எடுத்துக் காட்டுகின்றன.

தான் விரும்பிய, தன் உணர்வுகளில் ஐக்கியமான வீட்டைத் திருமணத்தின் பொருட்டு விற்க வேண்டாம் என்ற தன் பேச்சைச் சிறிதும் மதிக்காததும், தன் சம்மதத்தைப் பெறாது வீட்டை விலை பேசுவதும், தன் மகளின் திருமணச் செயல்பாடுகளில் தன்னை மூன்றாமவளாக வீட்டிலுள்ள எல்லோரும் நடத்துவதும் இவள் மனத்தில் ஆழமாக பாதிப்பை ஏற்படுத்தி மாறாத வடுவாகத் தங்குகிறது.

தேவிக்கு அவளது நண்பர்கள் பாராட்டு விழா நடத்துகின்றனர். அப்பொழுது தன் மகளைப் பெண் பார்க்க வருவார்கள் என்று தெரிந்தும் அதற்குரிய வேலைகளைச் செய்துவிட்டு தன் நட்புரிமையின் நிமித்தம் விழாவிற்குச் சென்று வீட்டிற்கு அன்று தாமதமாக வருகிறாள். மரபு தழுவிய தாய்க்கு இச்செய்கை நம்ப முடியாததாகத் தோன்றலாம். இவளும் குடும்ப அமைப்பில் உழலும் உணர்வு பந்தத்திற்குக் கட்டுப்பட்ட தாய்தான். இருந்தாலும், அவளது வீட்டிலுள்ளவரின் புறக்கணிப்புக்களும், அவள் தனி உணர்வுகளை மதிக்காது நசுக்கும் தன்மையும், அவளை ஏதாவது பொது நிகழ்ச்சியில் பங்கு கொள்ள உந்தித் தள்ளுகின்றன. மேலும் அவள் பெற்ற தன்னைப் பற்றிய விழிப்புணர்வும், வெளி உலக உறவும் அவளை அவ்வாறு செய்ய வைக்கின்றன.

அவள் கணவன், அவனது தங்கையின் மகள் வீட்டிற்கு எப்பொழுதும் உரிமையாகச் செல்கிறான். அவளுக்கு மட்டும் வீட்டில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முக்கியத்துவம் கொடுக்கிறான். ஆனால் அதே நேரம் தன்னைத் திருமணம் செய்த நாளிலிருந்து தன் குடும்பத்தினரை மதிக்காததும், தன் மகள் திருமணத்திற்குக் கூட தன் தங்கை கல்யாணியை முறைப்படி முழுமனத்துடன் அழைக்காததும் அவளையும் அவள் குடும்பத்தினரையும் தன் கணவன் தொடர்ந்து அவமதிப்பதாக வருந்துகிறாள் தேவி. இந்நிலையும் அவள் தங்கை மீது அவளுக்கு அனுதாபத்தையும் பாச உணர்ச்சியையும் மிகுவிக்கிறது. இறுதியில், குடும்பத்தில் அனைவரும் தன்னை மதிக்காத தன் தனித்துவத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காத நிலையில் தன் மகளின் திருமணத்தன்று தன் மகளைக் குறித்துக் கவலைப்படாது தாய்மை என்ற பந்தத்தை, குடும்பப் பந்தத்தைக் துறந்து, வெறுத்துத் தனிமை, தனித்துவம் நாடி வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

முடிவுரை :-

வீடு என்ற தலைப்பே, தாய் — மனைவி என்ற நிலையில், குடும்பத்தலைவி என்பவள் அனைத்திலும் கட்டுப்பட்டவள்; எந்நிலையிலும் எப்பொழுதும் தன் உணர்வுகளை வெளியிட வாய்ப்பில்லாதவள் என்பதையே குறியீடாக உணர்த்துகிறது.

பெண்ணியத் திறனாய்வாளர்கள் தாய்மைத்துவம் பற்றிக் கூறுவது போல, குடும்பம் என்ற அமைப்பில் தாய், மனைவி என்ற நிலைகளின் தேவி என்ற கதைத் தலைவியின் தனித்துவ உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவளுடைய உள்ளுணர்வுகளைத் தாய் என்ற நிலையில் பிள்ளைகள் கூட மதிக்கவில்லை. தன் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தாய், மனைவி என்ற நிலைகளில் மாறாது பணிவிடை செய்தும், நேசித்தும் அவர்களிடமிருந்து அவளுக்கு எந்தவிதப் பிரதி பலிப்பும் கிடைக்காதது பேரதிர்ச்சியாக இருக்கிறது. எனவே அவ் அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து மீற வீட்டை விட்டு வெளியேறுகிறாள். இவ்வாறு வெளியேறும் நிலையானது, தன் தனித்துவத்தை, தன்னை, தன் உள்மன உணர்வுகளைப் பாதுகாக்கவும், உணர்வுச் சுமை அழுத்தங்களிலிருந்து மீளவும் விரும்பும் ஒரு பெண்ணின் நிலைமையே வெளிப்படுத்துகிறது. பெண்ணியச் சிந்தனைகள் தன் தனித்துவத்தைப் பாதுகாக்கப் பெண் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கூறவில்லை. ஆனால் சமுதாயம் பெண்ணைப் பெண்ணாக, தாயாக, மனைவியாக மதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. தேவி என்ற தாய்ப்பாத்திரம் முடிவில் பெறும் மாற்றங்கள் வழி மேற்கூறிய உண்மைகளை எடுத்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

ம. கா. ப கூட்டுறவு அச்சகம், மதுரை-21.

WITH BEST COMPLIMENTS FROM



SREE RAM AGENCIES,

PLOT NO. 373, ANNA NAGAR,

MADURAI-625 020.

Phone : 44140, 41971 & 42301. Gram : VISRAM.

Telex No. : 0445-392 ALS IN.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர்களுக்கு
எங்களுடைய இனிய நல்வாழ்த்துக்கள்:-

இவண்,

1. அருணா மெசின் டுல்ஸ், மதுரை-7.
2. ஸ்ரீ காடேரி அம்பாள் மில்ஸ் (பி) லிமிடெட், சண்முகநாதபுரம்
3. ஸ்ரீ காடேரி அம்பாள் ஸ்டீல்ஸ் லிமிடெட், மதுரை
4. விஷ்ணு டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கம்பலாபுரா, (மைசூர் மாவட்டம்)

கங்கையைப் போல் காவேரி போல்
கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்.

(பாரதிதாசன்)

நீரகம் பொருந்திய ஊரகத்திரு.

(கொன்றை வேந்தன்)

நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான் இன்று அமையாது ஒழுக்கு.

(திருக்குறள்)

வணிகர்க்கழகு வளர்பொருள் ஈட்டல்.

(நறுந்தொகை)

மண்ணில் நல்ல வண்ணம் வாழ நீர் இன்றியமையாதது
தன்னிறைவுடைய நாட்டிற்கு நல் வணிகம்
நீர்வரும் வாய்க்கால் போன்றது.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்
நீடு வாழ்க !

கங்கை - காவேரி வாணிகத் தொடர்பு

4, (மாடி) மகால் முதல் தெரு
மதுரை-625 001

மற்றும் சார்பு நிறுவனங்கள் :

வைகை வால்கா வாணிகம்,
அமராவதி அமேசான் வணிக ஈர்ப்பு,
பிரமபுத்திரா பெண்ணை வாணிக முன்னேற்றம்.

அட்டை அச்சு: கலைமணி பிரிண்டர்ஸ், மதுரை-1. தொலைபேசி : 31929